694

# சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்

கே.ரீ.கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 320
Acc No 694

Class No: 320
Acc No 694

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

புத்தகத்தின் பெயர் : சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்

நூலாசிரியர் : கே.ரீ.கணேசலிங்கம்

அனுமதிப்பத்திரம் : EPAB/2/19280

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட
வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்
இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தெ
குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்
பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

2017 செப்டெம்பர் மாதம் 20
கல்வி அமைச்சு,"இசுருபாய" பத்தரமுல்ல.
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2022.09.19

விஜித
செயலாள
கல்வி நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | 320 |
| --- | --- |
| Acc No | 694 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்

கே.ரீ.கணேசலிங்கம்

சேமமடு

சேமமடு பதிப்பகம்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | சமகால அரசியல் கலாசார செல்நெறிகள் |
| நூலாசிரியர் | : | கே.ரீ.கணேசலிங்கம் |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 1ம் பதிப்பு 2013 |
| எழுத்து | : | 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : | viii + 136 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ.400.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.<br>தொ.பே: 0777 345 666. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை,<br>யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.<br>தொ.பே:011-2472362, 2331475<br>மின்னஞ்சல் : *Chemamadu@yahoo.com* |
| **ISBN - NO** | : | **978 - 955 - 685 - 023-9** |

| | | |
|---|---|---|
| Title | : | Samakaala Arasiyal Kalasaara Selnerigal |
| Author | : | K.T.Kanesalingam |
| Publisher | : | STP.Pathmaseelan |
| Edition | : | 2013 |
| Price | : | Rs.400/- |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park,<br>Colombo -11.<br>T.P : 011-2472362, 2331475 |
| Printed by | : | Chemamadu Pathippakam,<br>Colombo -11.<br>T.P 0777 345 666.<br>E-mail : *Chemamadu@yahoo.com*<br>Web: www.chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN -2013-06-01-124 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

"சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்" என்ற இந்நூல் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவிலும் இலங்கையிலும் நடந்த ஆய்வரங்குகளில் நூலாசிரியரால் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் விரிவாக்கம் செய்யப்பட்ட விடயங்களும் ஏனைய சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு வெளிவருகின்றது. இதன் தனித்துவம் கடந்த காலத்தில் உலகில் நிகழ்ந்த அரசியல் சம்பவங்களின் பதிவுகள் ஆய்வுகளாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், சரியான அரசியல் பார்வையை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் இலங்கையில் வாழும் சிறுபான்மையினரின் அரசியல் இருப்பை வரலாற்று ரீதியில் நிறுவவேண்டிய கடமைப்பாடும் முக்கிய மானதாகும். பயங்கரவாதம் என்ற ஓரம்சம் இஸ்லாமியர்களையும் தமிழர்களையும் எப்படி உலக அரசியல் வரைபுக்குள் பாதிக்க வைத்தது என்பது இத்தொகுப்பில் காட்டப்பட்ட பிரதான அம்சமாகும். சாமுவெல் ஹன்ரிங்டன் குறிப்பிடுவது போல் உலகளாவிய நாகரீகளுக்கிடையே நிகழும் போரில் மேலாதிக்க நாகரீகங்களால் கீழைத்தேச நாகரீகங்கள் (இஸ்லாமியர்களினதும் தமிழர்களதும்) சிதைபட்டு வழக்கிழந்து போகும் துயரத்திலுள்ளன எனக் குறிப்பிட்டார். பின்நவீனத்திற்கு பின்பான உலகம் அவ்வகை சிதைப்பின் வேகத்தை அதிகரித்துள்ளது. அறிஞர் களும் சிந்தனையாளர்களும் முற்போக்கு வாதமென கருதும் அம்சங்கள் சமூக இருப்பின் அடிப்படைகளை கேள்விக்குள்ளாக்கி வருகிறது. இதிலிருந்து சமூகங்களோ இனங்களோ அவற்றின் பண்பாட்டு கூறுகளோ மீழுவது கடினமாகவுள்ளது. அதிலும் சிறிய இன அடையாளங்களை கொண்டுள்ள தேசங்களும் தேசிய இனங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் பெருந்தேசிய இனங்களால் காவுகொள்ளப்படுவது தவிர்க்க முடியாத இயங்கியலாக விளங்குகிறது. இவ்வுலக நியதி பெருந்தேசிய அரசுகளுகுரியதான அரசியல் பொருளாதார இராணுவ கட்டமைப்புக்குட் பட்ட தன்மை எழுச்சியடைந்துள்ளது. இதில் மனித உரிமை பிரகடனங் களாயினும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகளாயினும் மேலாதிக்க சக்திகளின் முடிபுகளிலேயே தங்கியுள்ளது. சித்தாந்தம் இல்லாத உலக ஒழுங்கும் கொள்கையில்லாத அரசுகளும் தனிமனித கௌரவமற்ற ஆட்சிகளும் ஒரு போலி உலகத்தின் நியதிக்குள்ளே இன்றைய அரசியல் பொருளாதார நியமத்தை வைத்திருக்கின்றன.

சீனாவின் அரசியல் பொருளாதார இராணுவ சமநிலைக்குள் உலகத்தின் போக்கு மெதுவாக உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் இலங்கை முதலிடத்திலுள்ளது. ஐரோப்பிய(மேற்கு) மரபுக்குட் பட்ட வெளியுறவுக் கொள்கையை கைவிட்டு இலங்கை சீனசார்புக்குள் மாறியதன் சாதகத்தன்மை அதன் இருப்பை பலப்படுத்தியுள்ளது. சீனாவின் பொருளாதார எழுச்சியும் இராணுவ வல்லமையும் அதன் உலக வல்லரசுக்கான போட்டியில் முதன்மைபெற வைத்துள்ளது. எனவே சீனாவின் முதன்மையும் இலங்கையின் முதலிடமும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. இலங்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும் சீனாவின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சீனாவின் வரலாற்றில் முதலிடம் தவிர்க்கமுடியாத தென்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இது இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களின் சாதுரியத்தைக் காட்டுகிறது. இதில் இந்தியர் களின் பலவீனமும் சீனர்களின் விவேகமும் கலந்துள்ளது. இதுவரை உலகில் நிலைத்திருக்கக்கூடிய ஆட்சி எதுவும் எழுச்சியடையவில்லை. உலக ஆட்சியில் மாற்றம் நிகழும்வரை இலங்கையின் இருப்பை பலவீனப்படுத்துவது கடினம். அதையும் தாண்டி இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் லிபியா டுனிசியா பாணியில் அமெரிக்கா செயல்பட வேண்டும். ஆனால் அதனை இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது. அதனை பிரயோகிக்கும் வல்லமையும் இந்தியாவுக்கு கிடையாது. இந்தியாவை தாண்டி செயல்படும் போக்கும் அமெரிக்காவிடம் கிடையாது. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிசார் அரசியல் சூழலுக்குள்ளும் உலக அரசியலுக்குள்ளும் அகப்பட்டுள்ள இலங்கை யின் அரசியல் அமெரிக்க இந்திய எதிர் சீன இழுபறிக்குள் இயங்கிக் கொணடிருக்கிறது. இலங்கை மீதான மனித உரிமை குற்றச்சாட்டு இலங்கையிலிருந்து சீனாவை வெளியேற்றும் அமெரிக்க - இந்திய கூட்டின் உபாயமாகவே உள்ளது.

ஆனால் இவ் உபாயங்கள் எதனாலும் சீனாவை வெளியேற்றிவிட முடியாது. காரணம் இலங்கையின் முக்கியத்துவம் உலகளாவிய ரீதியில் முதன்மை வாய்ந்தது. போத்துக்கேயர் ஒல்லாந்தர் பிரித்தானியர் அமெரிக்கர் ஆகியோரின் கடந்தகால அனுபவம் அவ்வாறே காணப்பட்டது. ஆனால் அமெரிக்கர் இலகுவில் தமது நடவடிக்கையை கைவிடுவார்கள் என்று கூறிவிடவும் முடியாது. இவ் இழுபறி இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தையே அதிகம் பாதிக்கும். ஒரு துளி பெற்றோலியம் சமம் ஒரு துளி இரத்தம் என்றாகிய சூழல் தற்போதே ஏற்பட்டுவிட்டது. இவ் இழுபறி அரசியல் ஆரோக்கியமான இலங்கையை உருவாக்குவதாக அமையாது.

இதிலுள்ள கட்டுரைகள் பிரித்தானியர் ஆட்சியில் ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரம், இலங்கை தமிழர்களின் அரசியல் கலாசாரம் ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை, இலங்கை அரசியலில் ஐக்கிய தேசிய கட்சி 2010ம் ஆண்டுத் தேர்தல் பற்றிய நோக்கு , இனப்பிரச்சினையும் சமாதான முயற்சியும் பாலஸ்தீனம் - இலங்கை ஓர் ஒப்பீடு, இலங்கை மீதான இந்திய - சீன போட்டி ஒரு மதிப்பீடு, போருக்குப் பிந்திய இலங்கை - சீன உறவு ஒரு நோக்கு, இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான மேற்குலகத்தின் போர், பயங்கரவாதமும் உலக அரசியலும், அரசியல் அபிலாசையும் மனித உரிமைப் பிரகடனமும், நல்லாட்சியும் முகாமையும் ஆகியன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இந்நூலை வெளிக்கொண்டு வருவதற்கு பல உதவிகளை புரிந்த உள்ளங்களை நினைவு கோருவது அவசியமானது. இந்த வகையில் யாழ்ப்பாணம், கிழக்கு, தென்கிழக்கு, புதுச்சேரி, ஆகிய பல்கலைக்கழகங்களில் ஆய்வரங்குகளை நிகழ்த்திய துறைகளுக்கும் அதன் பேராசிரியர்களுக்கும் அவர்களது ஒத்துழைப்பு மறக்க முடியாதது. அவ்வாறே இதன் விரிவாக்கத்திற்கு வேண்டிய தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது தந்துதவியதுடன் கணணி வடிவமைப்பிற்கும் உதவிய எஸ்.திருச்செந்தூரன், ரி.விக்னேஸ்வரன் ஆகியோரின் பங்கு உயர்வானது. மற்றும் எனது வாழ்வில் இன்பத்திலும் துன்பத்திலும் துணையாய் நின்று ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிவரும் மனைவி சாந்தினிக்கும் எனது பிள்ளைகளான ஷரோன் ஷாரங்கிக்கும் அவர்களது உற்சாகமூட்டும் எண்ணங்களுக்கும் இந்நூல் பரிசாகியது. இறுதியாக சேமமடு பதிப்பகத்திற்கும் அதன் பணிப்பாளருக்கும் மற்றும் இந்நூலை வடிவமைப்பிற்கு உதவிய மதுசூதனின் பங்களிப்பு மறக்கமுடியாதது.

**கே.ரீ.கணேசலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

முதுநிலை விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கம் அவர்களின் நான்காவது நூலை வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். சமகால அரசியல் விவகாரங்களிலும், தேசியவாத அரசியலிலும், மாறிவரும் புதிய அரசியல் ஒழுங்குமுறை பற்றிய தேடலிலும் நுணுக்கமான ஆய்வுக் கண்ணோட்டமிக்க ஒருவராக நூலாசிரியர் விளங்கி வருகின்றார். மீண்டும் இவரது நூலொன்றை நாம் வெளியிட சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகின்றோம்.

அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் அரசியல் ஆர்வம் மிக்க பொது வாசகர்களுக்கும் பயன்படும் ஆக்கமாக "சமகால அரசியல் கலாசார செல்நெறிகள்" என்னும் நூல் அமைந்துள்ளது. சமகால அரசியல் செல்நெறிகள் பற்றிய அறிவும் புரிதலும் இலங்கை அரசியலின் போக்குகளை நுட்பமாக விளங்கிக்கொள்வதற்கும் துணையாக இருக்கும். அந்த வகையில் இந்நூலை ஆக்கித் தந்த நூலாசிரியருக்கு நாம் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

113, சேமமடு
வவுனியா

**பதிப்பாளர்**
சதபூ.பத்மசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பிரித்தானியர் ஆட்சியில் ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரம் | 01 |
| 2. | இலங்கை தமிழர்களின் அரசியல் கலாசாரம் ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை | 12 |
| 3. | இலங்கை அரசியலில் ஐக்கிய தேசிய கட்சி 2010ம் ஆண்டுத் தேர்தல் பற்றிய நோக்கு | 21 |
| 4. | இனப்பிரச்சினையும் சமாதான முயற்சியும் பாலஸ்தீனம் - இலங்கை ஓர் ஒப்பீடு | 36 |
| 5. | இலங்கை மீதான இந்திய - சீன போட்டி ஓர் மதிப்பீடு | 70 |
| 6. | போருக்குப் பிந்திய இலங்கை - சீன உறவு ஓர் நோக்கு | 80 |
| 7. | இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிரான மேற்குலகத்தின் போர் | 88 |
| 8. | பயங்கரவாதமும் உலக அரசியலும் | 107 |
| 9. | அரசியல் அபிலாசையும் மனித உரிமைப் பிரகடனமும் | 119 |
| 10. | நல்லாட்சியும் முகாமையும் | 127 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியர் ஆட்சியில் ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரம்

## அறிமுகம்

பிரித்தானியரது ஆட்சி இலங்கை முழுவதும் 1833ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்த அறிமுகத்துடன் முடியாட்சி முறையை முடிபுக்கு கொண்டுவந்ததுடன் ஜனநாயக ஆட்சிமுறையை மலரச் செய்தது. அவ்வகை ஜனநாயக ஆட்சி மிதவாத அரசியல் சக்திகளின் எழுச்சிக்கு வழியமைத்தது. சாதிப்பிரிவுகளுக்குள் அகப்பட்டிருந்த ஈழத்தமிழரினிடையே வர்க்கமாக உயர்குழாத்தினரை இனங்கண்டு கொண்டது. உயர் சாதிக் கட்டமைப்பையும், சொத்தையும் கொண்ட பிரிவினர் ஆங்கிலக் கல்வியை தம்முடன் சேர்த்துக் கொண்டதன் நிமித்தம் உயர்வர்க்கம் அரசியலில் மேற்குலகம் போன்று உருவாக ஆரம்பித்தது. ஈழத்தமிழரின் முடியாட்சி முறையை கைவிட்டு நவீன மேற்குலக ஆட்சிமுறைக்கு மாறும் கட்டம் ஒன்றிக்கான ஆரம்பத்தினை உயர்குழாம் சார்பாக பிரித்தானியர் ஏற்படுத்தினார்.

இவ்வகை நவீனமயவாக்கல் சிந்தனை பிரதிநிதித்துவ அரசியலை முன்வைத்தது. அரசியல் கட்டமைப்பினை சமூகங்களுடன் இணைத்ததில் பிரதிநிதித்துவ ஆட்சி பெரிதும் உதவியது. அரசியல் சமூக உருமாற்றத்தின் மையமாக உயர்குழாமினர் காணப்பட்டனர்.

உயர் குழாமினர் யார் என்பதை புரிந்துகொள்வது அவர்களின் இயல்புகளை மேற்குலக அரசியல் கலாசாரத்திலிருந்து வேறுபடுத்துதல் மூலம் சுதேச அரசியலுக்கு முரணாக செயல்பட்டனர் என்பதை விளங்குதல், உயர்குழாமினர் என்கின்ற சமூக பிரிவின் பிரவேசம் சமூகமட்டமயவாக்கத்திற்கு முன்னோடியாக மிளிர்ந்தது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வையாக அடையாளப்படுத்துதல் போன்ற நோக்குடன் இவ்வாய்வு கையாளப்படுகின்றது.

ஆய்வுக்கான முறையியலைப் பொறுத்து இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்படுகிறது. கண்டறிதல் *(Descriptive method)* ஆய்வு முறையிலாக கொள்ளப்படுகின்றது. அதனை மூலத்தரவுகளி லிருந்து விமர்சனம், மதிப்பீடு சார்ந்தும், அவதானிப்பு சார்ந்தும் அவ்வகை ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வின் மூலம் ஈழத்தமிழரின் உயர்குழாமின் நவீனத்துவ அரசியலின் செல்நெறியை இனங்காண உதவுகிறது என்பதை எட்டு வதுடன், அவ்வகைப் பிரிவினர் சமூகமாற்றத்திற்கு அரசியல் ரீதியில் பங்களிப்பினை காணுதல் முக்கியமான முடிவாக உள்ளது. சமூக மாறுதல் தவிர்க்கமுடியாத அசைவியக்கமாகும். அதில் அரசியல் பிரதான வீச்செல்லையாகும். அதனை நிகழ்த்தும் வலிமை உயர்வாக்கத்திடம் காணப்பட்டது.

## உயர்குழாம் பற்றிய வரையறை

ஈழத்தமிழரின் சமூக அடையாளங்களில் பிரித்தானியர் வருகைக்குப் பின்பான கட்டமைப்பில் புதிய வடிவமாக உயர்குழாம் பிரிவினர் *(Elites)* இனங்காணப்பட்டனர். அவர்களின் அடையாளம் ஈழத்தமிழர்களின் சமூகத்தன்மையை விட அரசியல் தன்மையிலேயே அதிகமான செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. பிரித்தானியர் மட்டுமல்ல இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வருகையின்போதும், உயர்குழாம் பிரிவினரின் அடையாளங்கள் சாதி, சமயம், சொத்து, சமூக அந்தஸ்து என்ற அடிப்படையில் பேணப்பட்டு வந்தது. அச் சந்தர்ப்பத் தில் ஒரு சில பரம்பரை அலகினர் ஈழத்தமிழர் மத்தியில் ஆதிக்கம் செலுத்தியிருந்தனர். அதற்கான அடிப்படை நியமமாகச் சாதியம் விளங்கியது. முடியாட்சி முறைமைக்கும் ஆதிக்க சாதியத்திற்குமான நட்பு முதன்மைப்படுத்தப்பட்டது.

உயர்குழாமினர் என்ற சொற்பிரயோகத்தின் பாவனை குடியேற்ற வாத ஆட்சியாளரின் ஆக்கிரமிப்புக்கு பின்பாடு அதிகரிக்க ஆரம்பித் தது. அவ்வகை உரையாடல் ஈழத்தமிழரிடம் மேட்டுக்குடியினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஆதிக்க சக்திகள், உயர் பிரிவினர் என்ற வர்க்கம் சார்ந்த அடையாளங்களை மேம்பாடடையச் செய்தது. சாதிப்பிரிவுகளுக்குள் அகப்பட்ட ஈழத்தமிழரின் அடையாளம் படிப்படியாக வர்க்கக் கட்டமைப்புக்குள் நகர்ந்தது.

குடியேற்றவாத நாடுகளில் காணப்பட்ட வர்க்கக் கட்டமைப்புக்கு நிகரான சமூக, பொருளாதார, அரசியல் தளம் இல்லாத ஈழத்தமிழரிடம் பிரித்தானிய ஆட்சியதிகாரம் வர்க்கக் கட்டமைப்பை ஏற்படுத்தும் மாதிரிகளை அறிமுகப்படுத்தியது. அதில் பிரதான அம்சமாக உயர்குழாம் பிரிவினரை உருவாக்கியதுடன் ஏற்கனவே சாதியிலும், சொத்திலும் மேல்நிலையடைந்திருந்த ஈழத்தமிழரின் உயர் பிரிவினருக்கு ஆங்கிலக்கல்வியை மேலதிகமாக இணைத்து அவ் உயர்வர்க்கத்தை அடையாளப்படுத்தினர். அது அரசியல் அதிகாரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், நிலமானிய மாதிரியிலிருந்து முதலாளித்துவ மாதிரிக்கு ஈழத்தமிழரின் பொருளாதார வடிவம் உருமாற்றம்பெற ஆரம்பித்தது.

இவ்வாறு மேற்குலக நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதாரக் கூறுகளை ஈழத்தமிழரிடம் பரப்புவதில் கவனம் செலுத்திய பிரித்தானியர் உயர்குழாம் பிரிவினரை தமக்குச் சமமானவர்களாக மதித்துச் செயற் பட்டனர். பிரித்தானியரின் நவீனமயமாக்கத்தின் பிரதான அம்சமாக வும், உயிரோட்டமுள்ள அடையாளமாகவும் உயர்குழாம் காணப்பட் டது. அவ்வகைப் பிரிவினர் சமகால அரசியல்வரை ஆதிக்கம் செலுத்துவதில் முனைப்புக்காட்டி வருகின்றனர். எனவே உயர்குழாமினர் யார் என்பதையும், அதற்கான விளக்கத்தினையும் விரிவாக நோக்குவோம்.

உயர்குழாமினர் அரசியலில் ஆட்சி அதிகாரத்தினை செலுத்துபவர் களும், சொத்து, சாதி மற்றும் வர்த்தகக் கட்டமைப்பில் சமூகமட்டத் தில் உயர்பிரிவினராக விளங்கும் ஆதிக்க சக்திகளைக் குறிப்பதாகும். *Veltredo Pareto* என்ற அறிஞர் உயர்குழாம் என்பது மேல்நிலையினரைக் குறிப்பால் உணர்த்துவது என்றார். மேலும் சமூகத்தில் தீர்மானம் எடுப்பவர்கள் அல்லது தீர்மானம் எடுக்கும் நிலையைக் கொண்டி ருப்பவர்களைக் குறிப்பதாகும் எனவும் கூறினார். அதிகாரத்தை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலித்துச் செயற்படுவதாகவன்றி சமூகம் சார்ந்த ஒழுங்கமைப்புக் களிலும், பிரிவுகளிலும் தீர்மானங்களை நிறைவேற்றவும், எடுக்கவும் வல்லமையுடைய பிரிவினரை உயர்குழாமினர் என அழைக்க முடியும் என்கிறார் *Pareto.* அவ்வாறே *C.Wright Mills* என்பவர் அதிகாரம், பணபலம், கௌரவம் என்பவற்றினால் சாதாரணமக்களிலிருந்து வேறுபட்டு, சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டு ஒழுங்கு நிலையினை ஏற்படுத்துபவர்கள் உயர்குழாமினர் என்றார்.

எனவே இவர்களின் எண்ணக்கருவிலிருந்து தெளிவான விளக்கம் ஒன்றினைப் பெறக்கூடியதாக உள்ளது. ஈழத்தமிழர் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரே உயர்குழாமினராகக் காணப்பட்டனர். அவர்களில் மொழி, மத, ஒழுக்க நெறிசார்ந்து வலிமையும், சமூக அந்தஸ்தினைக் கொண்டவர்களாகவும், அதிகாரத்திலும், சொத்திலும், சாதிய ரீதியிலும் மேல்நிலையினர் உயர்குழாம் பிரிவிற்குள் அடக்கப்பட்டனர். அவர்கள் பிறசமூகங்கள் மீது ஆதிக்கமும், செல்வாக்கும் செலுத்தினார்கள். பிரித்தானியரின் குடியேற்றவாதக் கொள்கை உயர்குழாமினரை நவீன பிரிவினராகவும், தமது கொள்கைகளைப் பரவலாக்கம் செய்யும் முகவராகவும் அடையாளப்படுத்தியது. இதனால் உயர்குழாமினருக்கும், பிரித்தானிய ஆட்சியாளருக்குமிடையே நல்லுறவு நிலவியது.

**ஈழத்தமிழரில் உயர்குழாமினர்**

ஈழத்தமிழரிடையே உயர்குழாம் பிரிவினர் பிரித்தானியரின் குடியேற்றவாத காலத்திற்கு பிற்பாடு வளர்ச்சியடைந்ததென ஏற்கனவே கருதியிருந்தோம். அவ்வகையில் பிரித்தானியரின் அரசியல் முறைமை களை இலங்கைக்குள் அமுல்படுத்த முயன்றபோது அடையாளப்படுத் தப்பட்ட பிரிவினராக உயர்குழாமினர் விளங்கினர். அவர்களின் அரசியல் அபிலாசையும், மிதவாத அரசியலை முடியாட்சிக்கு மாறான தாக அமுலாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதும் மிகத் தெளிவாக வும், துல்லியமாகவும் பிரயோகப்படுத்தக் கூடியவர்களாக ஈழத்தமிழரில் ஒரு பிரிவினர் இனங்காணப்பட்டனர். அதாவது, அரசியல் அதிகாரத் தினை மிதவாத அடிப்படையில் அமுல்படுத்துவதும், உயர்குழாமினர் சமூகமாற்றத்தினை அரசியல் முறைமைகளுக்கூடாகவும், அரசியல் அதிகாரம் சார்ந்த வகையிலும் பிரயோகப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதவாதம் சார்ந்த அரசியல் மாற்றத்தினை அமுலாக்கம் செய்ய முயன்ற பிரித்தானியர் மேற்குலக மாதிரிகளை அதிகம் அரசியல் யாப்பு முறைமைகளுக்குள்ளால் முன்மொழிந்தனர். அவ்வகை முன்மொழிவுகளுக்குள் ஈழத்தமிழ் உயர்குழாம் பிரிவினர் ஈழத்தமிழரின் நவீனமயமாக்கத்தின் வடிவமாகக் கருதினர். அவ்வகை நவீனமயமாக்கல் சிந்தனை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியில் நிகழ்ந்ததைக் காட்டிலும், பிரித்தானியர் காலத்திலேயே அதிகமாகக் காணப்பட்டது. அவ்வகை வரைபியலுக்குள் ஈழத்தமிழர் மத்தியில் முதலியார், மணியகாரர், போடியார் போன்ற பிரிவினர் மேல்நிலை சக்திகளாக இனங்காணப்பட்டனர்.

ஈழத்தமிழரிடையே சில குடும்பங்களும் அவர்களின் சந்ததியினரும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் உந்துதலில் சொத்து, ஆங்கிலக் கல்வி, சாதியம் காரணமாகியது. அந்தவரிசையில் கோல்புறூக் அரசியலமைப்பின்கீழ் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்பவர் சட்டசபையின் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்றார். அவரது மறைவுக்குப் பின்பு சேனாதிராயர் எதிர்மன்னசிங்கம் சட்டசபை அங்கத்தவரானார். இவரைத் தொடர்ந்து முத்துக்குமாரசாமி ஆகிய குமாரசாமி முதலியாரின் மகன் சட்டசபையின் அங்கத்துவத்தை நிரப்பினார். அத்தோடு அவரே ஆசியாவின் முதல் "சேர்" பட்டம் பெற்றவராகவும், திகழ்ந்தார். முத்துக்குமாரசாமி பெரியாருக்கு பின்பு அவரது உறவுவழிவந்த பொன்னம்பலம் இராமநாதன் சட்டசபையின் உறுப்பினராகத் திகழ்ந்தார். மேலும் பொன்னம்பலம் அருணாசலமும், பொன்னம்பலம் குமாரசாமியும் அவ்வகை செல்வாக்குடைய உயர்குழாமின் அடையாளத்தை ஈழத்தமிழர் மத்தியில் வெளிப்படுத்தியவராகவும், குடும்பமாகவும் இனங்காணப்பட்டனர்.

## ஈழத்தமிழரின் சமூக அமைப்பும் மாற்றமும்

ஈழத்தமிழரின் சமூக கட்டமைப்பு மிக இறுக்கமானதாக அமைந்திருந்தது. சாதிவழித்தோன்றலின் பிரதிபலிப்புக்களால் வடிவமெடுத்திருந்த சமூகம் ஐரோப்பியரது வருகைக்குப் பின்பு சற்று மாற்றங்களை எதிர்கொண்டது. அதிலும் பிரித்தானியரின் வருகை அதிகமான சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்துக்கான சூழலை ஏற்படுத்தியது. சாதி, சமய கட்டமைப்புக் களைத் தகர்க்கும் வழிமுறைகளைப் பிரித்தானியர் அரசியல் அதிகாரத்தினால் ஒரு மாற்றம் செய்ய விரும்பினர். அதனால் இலங்கையில் "கறவா" (கரையாம் சாதியினர்) சாதிக்கட்டமைப்பு உயர்வர்க்க வரம்புக்குள் *(karava elites)* தம்மை அடையாளப்படுத்திய தாக இலங்கையின் வரலாற்றை அதிகம் முதன்மைப்படுத்தும் மைக்கல் றொபேட்ஸ் குறிப்பிடுகின்றார்.

இதேபோன்று ஈழத்தமிழர் பிரதேசத்திலும் உயர்வர்க்க அரசியலில் கரையாம் சாதியினர் வெள்ளாளச் சாதியினருக்குச் சமமான நிலையை அடைய முயன்று சாத்தியப்படாத சூழலில் வன்முறை அரசியலில் ஈடுபட்டதாக சாதியத்தை முதன்மைப்படுத்தும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இச்சாதிக்கட்டமைப்பு முறைக்கான சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளில் பிரதானமானவற்றைப் பிரித்தானிய ஆட்சிமுறை ஏற்படுத்தியது. கோல்புறூக் முதல் சோல்பரி அரசியல் யாப்புவரை முன்வைக்கப்பட்ட சிபார்சுகளுக்குள்ளால் ஈழத்தமிழரின் சமூக அடுக்கமைவில் காட்டிய அதேவகையான அம்சங்கள் பெண்களின் சமூகக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது.

குறிப்பாக அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்ததன் பின்புலத்தில் பிரித்தானியர் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் பிரித்தானியரது அரசியல் அதிகாரத்திற்கான அவாவினால் மேற்கொண்ட டொனமூர்க்குழுவின் அரசியல் சிபார்சு இலங்கை சமூகக் கட்டமைப்பிலும், ஈழத்தமிழரின் சமூக அசைவிலும் அதிகமான விளைவுகளை ஏற்படுத்தியது.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை குடியேற்றவாத ஆட்சியில் ஆரம்பகாலப் பகுதியில் செல்வாக்குடையவராகக் காணப்பட்டனர். குறிப்பாக 1909ஆம் ஆண்டு பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரியாக விருந்த குறூப் பிரபுவுக்கு இலங்கையின் ஆள்பதியாகவிருந்த கென்றிமக்கலம் "இலங்கை மக்களின் ஒரு பகுதியினராகிய தமிழர்கள் குடியேற்றவாத ஆதிக்கத்தின் நல்வாழ்வுக்கும், பொருளாதார நலனுக்கும் மிகவும் அத்தியாவசியமானவர்கள்" என எழுதியிருந்தார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழரிடையே எழுச்சிபெற்ற மத்தியதரவர்க்கம் படிப்படியாகக் குடியேற்றவாத மனநிலைக்குள் தம்மை வளர்த்துக் கொண்டது. மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் குடியேற்றவாத ஆட்சியின் கொள்கைகளைப் பரவலாக்கம் செய்யும் அலுவலராக ஈழத்தமிழர் நியமிக்கப்பட்டமை சமூகமாற்றத்தின் இன்னோர் பரிமாணமாகியது. இவ்வகைக் காரணிகளே ஈழத்தமிழரின் உயர்குழாம் உருவாக்கத் துக்கும், மத்தியதரவர்க்கத்தின் எழுச்சிக்கும் வித்திட்ட அம்சங்களாகும்.

மேலும் படித்த இலங்கையருக்கான தேர்தலில் சேர். பொன். இராமநாதனின் வெற்றிக்கு (1912) பிரதானமான காரணியாக அமைந்த அம்சம் ஈழத்தமிழரின் கல்வித்தரமாகவே உள்ளது. ஏறக்குறைய ஆறு இலட்சம் தமிழரில் 1346பேர் கல்வித்தகைமை அடிப்படையில் வாக்குரிமைக்கு உரித்துடையவராக இருந்தனர். இருபத்தெட்டு இலட்சம் சிங்கள மக்களில் 1748பேர் கல்வித்தகைமை அடிப்படையில் வாக்குரிமை பெற்றவராகக் காணப்பட்டனர். எனவே ஈழத்தமிழரின் கல்வியும், அதன் முக்கியத்துவமும், அவர்களை உயர்வர்க்க அடையாளத்தில் முதன்மைப்படுத்தியது.

"தேசவழமைச்சட்டத்தினை தயார் செய்த ஒல்லாந்துக்காரர் யாழ்ப்பாணத்திற்கு உரியதும், மட்டக்களப்பிற்கும் உரியதுமான தேச வழமைகளை இனங்கண்டனர். அதன்படி ஈழத்தமிழரின் தேசவழமை அடையாளம் இருகூறுகளாக இனங்காணப்பட்டது என்பதைவிட சொத்து நிலம் சார்ந்தும், அதன் பயன்கள் சார்ந்தும் முதன்மையடைந் திருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு புறம் நிலத்தை முதன்மைபடுத்திய ஈழத்தமிழர் பின்னர் கல்வியை முதன்மை இலக்காகக் கொண்ட அரசியல் அதிகாரத்திற்கான முனைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கினார்கள். இதுவே உயர்குழாமினரின் இயல்புக ளிலும், அடையாளத்திலும் இனங்காண முடிந்தது.

### ஈழத்தமிழ் உயர் குழாமினரின் பிரதிமைகள்

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை அரசியல் அதிகாரத்தை எட்டும் போது மிக வலுவான செல்வாக்குடைய சமூகமாகக் காணப்பட்டனர். உயர்குழாம் என்ற மேற்குலக அரசியல் பரிமாணத்தினை அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் பின்பற்றும் வலிமை ஈழத்தமிழரிடம் காணப்பட்டது. ஆனால் ஈழத்தமிழர் தமது உயர்குழாம் அரசியல் அந்தஸ்தினை பேணுகின்ற போது மரபுகளிலிருந்தும், பண்பாட்டுக்கூறுகளிலிருந்தும் வேறுபடாது செயற்பட முனைந்துள்ளனர். குறிப்பாக குமாரசாமியின் பரம்பரையும், பொன்னம்பலம் பரம்பரையும் ஈழத்தமிழரின் அடையாளங்களை ஒருபோதும் நழுவவிடாது பின்பற்றினர்.

பிரித்தானிய பிரபுத்துவ பிரிவினரே வியக்கும் விதத்தில் அவர்களது அடையாளங்களும், வெளிப்பாடுகளும் அமைந்திருந்தது. சேர் முத்துக்குமாரசுவாமியின் ஆடை அணிகலன்களை வியந்த பிரித்தானியக் கவிஞர்கள், *"His coat was like the show drift His pants of similar hue; His turban shone with diamonds, And his girdle – it was blue."*

என்பது கீழைத்தேச உடையலங்காரத்தை ஆங்கிலேயர் புகழ் வதாக அமைந்திருப்பது மட்டுமல்ல அவர்களின் மொழியைக் கற்று அவர்களையே வியக்கவைத்த ஈழத்தமிழரின் உயர்குழாம் அரிச்சுவடி யாகும். ஆனால் அவர்களும், அவர்களது அரசியல் சூழலும், ஈழத்தமிழரின் அடையாளத்தை பேணியது போன்று இலங்கையினது (ஈழத்தின்) தேசிய அடையாளத்தை முதன்மைப்படுத்த ஒருபோதும் தவறவில்லை. இலங்கைத் தேசியம் ஈழத்தமிழரின் உறுதிமிக்க சுலோகமாக அமைந்தி ருந்தது. அதனை முதலில் உடைத்துத் தமிழ்த் தேசியத்தை முன்வைத்தவராக சேர். பொன்.அருணாசலம் விளங்கினார்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தேசியத்திற்குத் தலைமைதாங்கிய ஈழத்தமிழர்கள் இலங்கை முழுவதற்குமான தேசியத்தை வெளிப்படுத்தினார்கள். அவ்வகை இலங்கைத் தேசியத்தின் தலைமைக்கும், பெரும்பான்மை சிங்கள தேசிய தலைமைக்கும் மோதல் ஏற்பட்டபோதே தமிழ்த் தேசியம், சிங்களத் தேசியம் என இரு அடையாளம் இலங்கைக்குள் உயர்குழாமினால் இனங்காணப் பட்டது. இருபிரிவினரும் மொழி, மதம், இனம் என்ற அடிப்படைக்குள் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை நிறுவ ஆரம்பித்தனர்.

ஈழத்தமிழரின் உயர்குழாமினரின் இன்னோர் பிரதான இயல்பான இலங்கைத் தேசியத்தை மதித்ததுபோல் பௌத்தத்தினரை மதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பும், பின்பற்றுவதும், பேணுவதும் ஓரம்சமாக விளங்கியது. பௌத்தத்தையும், பௌத்தர்களையும் முதன்மைப்படுத்துவதில் பிரித்தானியர் கால ஈழத்தமிழ்சார் உயர்குழாமினர் காணப்பட்டனர். மேலும், உயர்குழாமினர் என்ற அடிப்படையில் சிங்கள உயர்வர்க்கத்துடன் நல்லுறவையும், நட்பினையும் பேணிவந்தனர். அது அவர்களது தேசிய அடையாளத்தினை மேலும் மெருகூட்டுவதாக அமைந்திருந்தது.

ஈழத்தமிழரின் உயர்குழாமினர் நவீனத்துவப் பரிணாமமாக இனங் காணக்கூடிய அம்சமாக ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொண்டது மட்டுமன்றி அதில் பாண்டித்தியம் பெறுமளவிற்கு விளங்கினர். இதனால் ஆங்கிலேய உயர்வர்க்கத்திற்கு நிகராக ஆக்கிக்கொள்ளவும், இலங்கைக்குள் தலைசிறந்தவர்களாகக் காட்டிக்கொள்ளவும், உதவியது. அத்துடன் ஆங்கிலேயரின் நெளிவுசுளிவுகளை இனங்கண்டு பணியாற்ற வும், சேவைபுரியவும் அவர்களால் முடிந்தது. இதனால் அரசியல் அதிகாரத்தை இலகுவாக நிலைநாட்டக் கூடியவர்களாகக் காணப் பட்டனர். உள்நாட்டுக் கலவரத்தை அடக்க இராணியிடம் சென்று ஒப்புதல் பெற்று உள்நாட்டு விவகாரங்களைக் கையாளும் தந்திரம் அன்றைய ஈழத்தமிழ் உயர்குழாமிடம் காணப்பட்டது.

அரசியல் அதிகாரத்தில் இருக்கும்போதும், புலமையாளராகவும், விற்பன்னர்களாகவும், படைப்பாளிகளாகவும் விளங்கினர். இது அவர்களது உயர்குழாம் அரசியலை வழிநடத்த உதவியது. மேலும் ஈழத்தமிழரின் மத்தியவர்க்கத்தினை தமது அரசியல் அதிகாரத்தினால் அடிமைப்படுத்தாது அரவணைத்துக் கொண்டதுடன் மத்தியதர வர்க்கத்தினர் உயர்குழாமினருக்குப் பக்கபலமாக விளங்க உதவியது. அவ்வகைப் புலமையாளர்களையும், அவர்களது அறிவுரைக்கு அமைவாகவும் செயற்பட்ட ஈழத்தமிழ் உயர்குழாமினர் செவ்வையான அரசியல் அதிகாரத்தினைக் கடைப்பிடித்தனர். இது இன்றைய அரசியல் தலைமைகளுக்கும், உயர்குழாமினருக்கும் அவசியமான ஓரம்சமாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

ஈழத்தமிழரின் நவீன அரசியலுக்கு முன்னோடியாக உயர் குழாமினரே காணப்பட்டனர். ஈழத்தமிழர் முடியாட்சி முறைக்குள் இருந்தும், அடிமைத்தனத்துக்குள் இருந்தும் விடுபடுவதற்கு முன்னோடி களாக பிரித்தானியரும் அவர்களது அரசியல் முறைமையும் காரணமாகியது. உயர் குழாமினரின் செல்வாக்கு படிப்படியாக மிதவாத அரசியலை வளர்த்தெடுக்க உதவியது. அதனால் சாதிரீதியிலும், பால்ரீதியிலும் அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து விடுபட்டதுடன் மாற்று உயர்குழாமினரின் தோற்றம் தவிர்க்கமுடியாத நிலையை சாத்தியப்படுத்தியது. ஈழத்தமிழரிடையே கரையாம் சாதி சார்ந்த உயர்வர்க்கம் பெரியளவில் எழுச்சி பெறாதபோதும் செல்வாக்குடைய ஒரு பிரிவினராக அரசியலில் பிற்காலத்தில் இடம்பிடித்தனர்.

எனவே ஈழத்தமிழரின் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் பிரித்தானியர் உருவாக்கிய உயர்குழாமினர் கணிசமான செல்வாக்கினை எட்டியுள்ளார். அந்த வகையில் நவீனத்துவ பரிமாணத்துக்கான அடிப்படையாகப் பிரித்தானிய ஆட்சியாளரின் சிபார்சுகளும், அணுகுமுறைகளும் அமைந்தன. அரசியல், சட்டம், நீதி, நிர்வாகம் என்ற சமூகத்தின் ஒவ்வொரு அங்கங்களையும் சரிப்படுத்தி வழிப்படுத்தலில் பிரித்தானியர் மூலகாரணமாகினர். அவர்களது அணுகுமுறையில் குடியேற்றவாத அடக்குமுறைகள் கொடுமையானவையாக அமைந்தபோதும், அரசியல், சமூகத்தளத்தில் அவர்களின் மாறுதல்களே இன்றைய உலகமாறுதலுக்கான அடிப்படைகளாக விளங்குகின்றன.

## உதவிய நூல்கள்

1. *Hari Hara Das B. C. Choudhury: introduction to political sociology, Vikas Publishing House Pvt. Ltd, India, 1997.*

2. *Patrick Peebles : Social Change in Nineteenth Century Ceylon. N. Vrang , New Delhi, 1995.*

3. ச. ஹன்டி பேரின்பநாயகம், ஆட்சி இயல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2010, (இரண்டாம் பதிப்பு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. க. சி. குலரத்தினம், "நோத் முதல் கோபல்லாவரை", சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2008, (இரண்டாம் பதிப்பு).

5. கே. ரி. கணேசலிங்கம், தென்னாசியாவின் அரசியல் கலாசாரம், சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2008.

6. க. சண்முகலிங்கம், இலங்கையின் இனவியலும், மானிடவியலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2011.

7. குமாரி ஜெயவர்தனா (மொ.பெ), டாக்டர் மேரி ரட்ணம், சமூக விஞ்ஞானிகள் சங்கம், 2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர்களின் அரசியல் கலாசாரம் ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை

## அரசியல் கலாசாரம்

அரசியல் கலாசாரம் என்ற சொற்பிரயோகம் முதன்முதலில் அமெரிக்க ஊடகத்துறையினரால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அமெரிக்க அறிஞர்களால் கோட்பாட்டு வலிமை கொடுக்கப்பட்டு அரசறிவியல் கற்கை நெறியில் பிரதான பகுதியாக *(G. Almond, G. B. Powell ; 1966)* இணைக்கப் பட்டுள்ளது. ஓர் அரசியல்முறைமைக்குக் கீழ் செயற்படும் மக்கள் சமூகம் எத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின் றனர் என்பதை விபரிப்பதே அரசியல் கலாசாரம் என்ற கோட்பாட்டின் அடிப்படை நோக்கமாகும். இக்கோட்பாட்டின் தந்தையாக கிப்ரியல் அல்மண்ட் விளங்குகின்றார்.

அரசியல் கலாசாரம் இரண்டு பிரதான பிரிவுகளை நாகரிகமான அரசியல் கலாசாரத்தின் அடிப்படையிலிருந்து உருவாகிறது. அதன்படி கலப்பற்ற அரசியல் கலாசாரமாகவும் *(Unmixed Political Culture)* கலப்புடைய அரசியல் கலாசாரமாகவும் *(Mixed Political Culture)* இனங்காணப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் மூன்று அலகுகளாக்கப் பட்டு ஆய்வு நோக்கத்திற்காக நாடுகளையும், நாடுகளின் இயல்புகளை யும் அடிப்படையாகக் கொண்டு விபரிக்கப்படுகிறது. அவ்வகைப் பாடுகளுக்குள்:

(1) குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் கலாசாரம்

(2) எதிர்ப்புணவற்ற அரசியல் கலாசாரம்

(3) பங்குபற்றல் அரசியல் கலாசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மூன்று பிரிவுகளாக்கப்பட்டு ஆராயப்பட்டது. இது அபிவிருத்தி அடைந்த, அடைந்துவரும் பின்தங்கிய நாடுகளில் காணப்படும் அரசியல் முறைமை தொடர்பான மக்களின் இயல்புகளையும், நடத்தை வெளிப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டது. அல்மண்ட், பவல் இருவரும் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் ஐரோப்பிய - அமெரிக்க அரசியல் கலாசாரத்தின் உயர்வை முன்வைத்து செயல்பட்டதாக இந்திய பேராசிரியர் எஸ்.பி.வர்மா குறிப்பிடுவதுடன் இருவரும் அரசியல் கலாசாரத்தின் முற்போக்கான அம்சங்களை இனங்காணத் தவறிவிட்டனர் என சுட்டுகின்றார். ஒழுங்கமைப்புகளை யும், மீள் ஒழுங்கமைப்புகளையும் பற்றியே அவர்கள் கருத்தில் கொண்டனர். தனிமனித நடத்தையினால் எழும் அரசியல் கலாசாரத்தை சரிவர எடைபோட தவறினர் என்ற குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

இதனால் 1990களுக்கு பின்பு அரசியல் கலாசாரத்தின் நவீன சிந்தனை கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் நவீன சிந்தனை கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆய்வாளர்களிடமிருந்து எழுந்தது. அரசியல் கலாசாரம் அரசுக்கும், சமூகத்திற்குமான உறவாகவும், சமூகத்தில் ஏற்படும் மாற்றமாகவும், அம்மாற்றத்தால் மக்கள் அடையும் விருத்தி நிலையே அரசியல் கலாசாரமென வாதிட்டனர். இதில் மேக்ரன் கம்ரவா முன்னோடியாக திகழ்ந்தார். அவரது கருத்திற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் பேக்கர், றொபேட் பிக்னி, சாமுவேல்கன்ரிங்டன் போன்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

எனவே நவீன எண்ணக்கருவானது மாற்றம்தான் அரசியல் கலாசாரத்தின் மூலவேராகக் கொள்ளும்போது அது ஜனநாயகமாகவோ, தேசியவாதமாகவோ, விழுமியமாகவோ, தனிமனித ஆதிக்கமாகவோ அமையலாமென கூறப்படுகின்றது. அதனால் ஓர் அரசியல் விருத்தி நிலை சாத்தியப்படுதல் அவசியமானது.

**யாழ்ப்பாண அரசியல் கலாசாரம்**

**முதலாம் கட்டம்**

யாழ்ப்பாணத்தின் அரசியல் கலாசாரத்தினை அடையாளம் காண்பதென்பது பிரித்தானியர் வருகைக்குப் பின்பானதாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாட்சி முறைமையை அங்கீகரித்த யாழ்ப்பாண சமூகம் ஐரோப்பியர் வருகைக்குப் பின்பு ஏற்பட்ட அடக்குமுறைகளால் மாற்றமடைய ஆரம்பித்தது. போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் மதம், மொழி மற்றும் பண்பாட்டுக் கூறுகளை மிக மோசமான நாகரிகத்திற்கு புறம்பான மரபுக்குள்ளால் மாற்றமடையச் செய்தனர். ஆனால் பிரித்தானியர் ஓரளவு மென்போக்குடன் அரசியல் முறைமைகள் சார்ந்து செயல்பட ஆரம்பித்தனர்.

அரசியல் முறைமைகளுக்குள்ளால் மிதவாத அணுகுமுறையை பிரித்தானியர் சார்ந்து யாழ்ப்பாண மேல்நிலை வர்க்கம் செயல்பட்டது. இலங்கை முழுவதற்குமான அரசியல் ஈடுபாட்டில் முன்னோடிகளாக யாழ்ப்பாண சமூகம் விளங்கியது. சாதியத்திற்குள்ளும், இந்துமத அடையாளத்திற்குள்ளும் அகப்பட்டிருந்த யாழ்ப்பாண சமூகம் பிரித்தானியரின் அரசியல் முறைமைகளுக்குள் தளர்வடைய வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டது.

குமாரசுவாமி, முத்துக்குமாரசுவாமி, பொன்.இராமநாதன், பொன். அருணாசலம் என்ற மூத்த முன்னோடிப் பரம்பரை மிதவாத அரசியல் கலாசாரத்தின் விம்பமாக அமைந்தனர். எல்லோரும் ஆங்கிலேயருக்கு நிகராக ஆங்கிலத்தைக் கற்றபோதும் சுதேச அடையாளத்தைப் பேணுவதில் முனைப்புக்காட்டினர். இலங்கையில் மட்டுமன்றி பிரித்தானியாவிலும் தமது சுதேச அடையாளத்தை பேணி வந்தனர். ஆங்கிலத்தில் வாண்மை யும், சுதேசத்தில் பற்றும், இலங்கைத் தேசியத்தில் ஈடுபாடும் காட்டிய மேற்குறித்த மேல்நிலை வர்க்கத்தினர் ஐரோப்பிய அரசியல் சட்டாம்பிக ளாகக் காணப்பட்டனர். எவ்வாறு பிரபுத்துவ ஆதிக்கம் இங்கிலாந்தில் காணப்பட்டதோ அவ்வாறே யாழ்ப்பாணத்திலும், இலங்கை முழுவதும் உயர்வர்க்கத்தினரின் ஆதிக்கம் நிலவியது.

குறிப்பாக ஆசியாவில் முதல் சேர்ப்பட்டமும், "லிங்கொன்" அமையத்தில் கௌரவமான அங்கத்துவமும், ராணி அப்புக்காத்து என்ற பெருமையும் பெற்றவர்களாக இலங்கைத் தமிழர் விளங்கினர். இது மிதவாத ஜனநாயக அரசியலுக்கான அடிச்சுவடுகளை யாழ்ப்பாணத்தில் சமூகத்தில் பரப்புவதில் வாய்ப்பினைக் கொடுத்தது. நிலப்பிரபுத்துவ மரபுக்குள்ளால் வளர்ந்த யாழ்ப்பாண அரசியல் கலாசாரம் சாதி, மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

மரபுகளை முற்றாகத் தகர்த்ததென்றோ, சொத்து, கல்வி சார்ந்த மேல்நிலை ஆதிக்கச் சக்திகளின் செல்வாக்கைத் தகர்த்ததென்றோ கூறிவிட முடியாது. மேலும் சமூக ஒடுக்குமுறைகளும், பெண்கள் சார்ந்த அணுகுமுறையிலும் மாற்றத்தை எட்டமுடியாத சூழல் காணப்பட்டது. எனவே இது ஒரு ஜனநாயக மரபுக்கான ஆரம்பமாக வும், மிதவாத அரசியல் பிரயோகமும், மேட்டுக்குடி வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கும் ஒருங்குசேரக் காணப்பட்டதை அவதானிக்க முடியும்.

**இரண்டாம் கட்டம்**

யாழ்ப்பாண அரசியல் கலாசாரத்தின் இரண்டாவது கட்டம் முதலாவது கட்டத்தின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. அதிலும் சேர். பொன் அருணாசலம் மிக முக்கிய பாத்திரத்தினை முன்னெடுத்த வராகக் காணப்பட்டார். அவர் முதலாவது கட்டத்திற்கும் இரண்டாவது கட்டத்திற்கும் பங்காற்றினார். இலங்கைத் தேசியத்தினை நிராகரித்து விட்டு தமிழ்தேசியத்தினை முன்னெடுத்த முன்னோடியாக விளங்கினார். இவரை அடியொற்றி தமிழ்மொழி சார்ந்தும், யாழ்ப்பாண அரசியல் கலாசாரம் வேறொரு கோணத்தை நோக்கி அசைந்தது. அவ்வகை வரைபுக்குள் முகிழ்ப்புப் பெற்ற தமிழ் அரசியல் கலாசாரம் இந்திய தேசியத்துடன் இணைந்து தீவிர பிரித்தானிய எதிர்ப்பினைக் காட்ட ஆரம்பித்தது. அதில் ஹன்ரி பேரின்பநாயகம் முன்னோடியாகக் காணப்பட்டார். ஆறுமுகநாவலரின் கிறிஸ்தவ எதிர்ப்பைப்போன்று ஹன்ரி பேரின்பநாயகமும் பிரித்தானிய எதிர்ப்பினைக் காட்டியதுடன் ஆறுமுகநாவலர், சதாவதானி போன்றவர்களைப் பின்பற்றியது மட்டு மன்றி ஒருபடி மேற்சென்று இந்திய தேசிய விடுதலைப்போராட்டத் தலைவர்களுடன் உறவைப் பேணினார். அவர்களை இலங்கைக்கு அழைத்துவந்து இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைக்க முயன்றார்.

அகிம்சை, கொல்லாமை, சத்தியாக்கிரகம் போன்ற கொள்கை ளுக்கு முன்னோடியான மகாத்மாகாந்தியுடன் கைகோர்த்து கொண்டமை பிற்காலத்தில் இடதுசாரிகள் எனத் தம்மை இனங்காட்டியவர்களுக்கு பின்னூட்டலாக அமைந்தது. ஆனாலும் இக்காலத்தில்

Class No: 320
Acc No 694



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதவாதத்தன்மை யாழ்ப்பாண அரசியல் கலாசாரத்தில் தீவிரத்தன்மையை எட்டியதுடன் சேர். பொன் அருணாசலம் பிற்காலத்தில் முன்னெடுத்த தமிழ்த்தேசியமும், ஹன்ரி பேரின்பநாயகம் முன்னெடுத்த இலங்கைத் தேசியத்தையும் ஒரேகாலத்தில் அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்தின் அரசியல் தலைவர்களும், மக்களும் ஒரே திசையில் செய்யப்பட்ட அரசியல் பிரக்ஞையைக் காண முடிந்த போதும் தலைமைகளுக்குள் மோதல் நிலவியதை வெளிப்படையாகக் காண முடியாவிட்டாலும், மக்கள் சார்ந்த அணிதிரட்டலொன்று காணப்பட்டது. மக்களை அரசியலில் ஈடுபடுத்துவதென்பது தேர்தல் சார்ந்த நோக்கு நிலையிலேயே மிகைப்படுத்தப்பட்டது. ஆனால் தலைவர்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணத் தமிழர்களின் அரசியல் சார்ந்தும், அரசாங்கம் சார்ந்தும் ஆரம்பகால இருப்பும் செயற்பாடும் உயர்வர்க்க நலன்சார்ந்ததாக அமைந்தாலும் மக்களுடனான ஈடுபாடு காணப்பட்டது. மக்களுடைய பிரச்சினைகள் முதன்மைப்படுத்தப்பட்டது. சாதி அடிப்படையிலான அரசியல் புறந்தள்ளல் அக்கால அரசியல் கலாசாரமாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக ஹன்ரி பேரின்பநாயகம் தலைமையில் எழுச்சியடைந்த யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் சாதிக் கட்டமைப்பில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வினை தளர்த்துவதற்கு "சமபோச சமபந்தி" என்ற கோசத்தினை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் சாதி வேறுபாடின்றி உணவுப் பரிமாற்றத்தில் ஈடுபட்டநிலை காணப்பட்டது. ஆனால் மு. திருநாவுக்கரசு "இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்" என்ற நூலில் சமபோச சமபந்தி நிகழ்வில் கலந்துகொண்ட உயர் சாதியினர் சமபந்திக்கு வெளியே வந்து தாம் பின்பற்றிய கொள்கையை நிராகரித்தனர் எனக் குறிப்பிட்டிருந்தார். சாதியத்தின் அரசியலும், யதார்த்தமும் யாழ்ப்பாண சமூகத்தில் எப்போதும் ஒரே இயல்பையே வெளிப்படுத்தியது.

ஈழத்தமிழரின் இரண்டாவது கட்ட அரசியல் கலாசார அம்சமாக ஹன்ரி பேரின்பநாயகம் ஆரம்பித்திருந்த சமத்துவம் பற்றிய எண்ணப்பாடு வலுவடைந்து, முறைமைசார்ந்து, கோட்பாடாகி இடதுசாரித் தன்மையை எட்டியது. இடதுசாரிச் சிந்தனையில் கவரப்பட்ட ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் தென்னிலங்கையுடன் மிக



Class No
Acc No
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமான உறவைப் பேணியதுடன் இலங்கை முழுவதற்குமானதும், முதலாளித்துவத்திற்கு எதிரானதுமான அரசைப்பற்றிய உரையாட லுடன் கைகோர்த்துக் கொண்டனர். அதில் தீவிர தன்மையும், ஆயுதப்போராட்ட அணுகுமுறையும் ஈழத்தமிழர் சார்ந்து இடதுசாரி கள் மத்தியில் குறிப்பாக பழம்பெரும் இடதுசாரி எனக் கூறப்படும் தோழர் சண்முகதாஸனின் தீவிர அணுகுமுறையின் நிமித்தமே ஜனதா விமுக்திப் பெரமுன *(JVP)* தோற்றம் பெற்றது என்ற வரலாற்றுப்பதிவு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

"சண் அங்கிள்" என எல்லோராலும் அழைக்கப்பட்ட இவரே இலங்கையின் மார்க்சிஸ மரபுக்குள் சரியான கண்ணோட்டத்தைக் கொண்ட ஆயுதப் போராட்டத்தைப் பற்றிய புரிதலைச் செயல் வடிவமாக்கியவர். நாற்காலி மார்க்சிஸம் என்ற வாதத்தினை முறியடித்த மார்க்சிஸ வாதியாக சண்முகதாசன் மட்டுமே இலங்கையில் காணப்பட்டார் என்பது அரசியல் தலைமை சார்ந்த பரிணாமமாகக் கொள்ளப்படுகின்றது. இதன் தொடர்ச்சி மார்க்சிஸவாதிகளிடம் இல்லாதது மட்டுமன்றி ஈழத்து மார்க்சிஸ வாதிகள் பாராளுமன்ற அரசியல் என்ற முதலாளித்துவ மரபினையே இன்றுவரை அலங்கரிக்க விரும்புபவர்களாக உள்ளனர்.

சுதந்திர இலங்கையில் ஈழத்தமிழர் மத்தியில் இரு பிரதான அரசியல் தலைமைகள் எழுச்சி பெற்றன. அவை இரண்டும் இரு கட்சிகளையும், இரு பிரிவுகளையும் கொண்டிருந்தாலும் கொள்கைய டிப்படையில் ஒன்றாகவே காணப்பட்டன. குறிப்பாக தந்தை செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்ற இரு தலைவர்களும் தேசியம், தமிழ் தேசியம், சமஸ்டி, சமபிரதிநிதித்துவம் (50 : 50), சுதேசியம் என்ற மரபுக்குள்ளேயே யாழ்ப்பாண அரசியல் சமூகத்தை வழிநடத்தியவர்கள். இருவரும் முரண்பட்ட இலங்கைத் தேசியத்தை யும், தமிழ்த்தேசியத்தையும் ஆதரித்தவர்களாகவே காணப்பட்டனர். பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் செல்வாக்கினை உடைத்து எறிந்துவிட்டு பிராந்திய கட்சிகளாக உருவெடுத்த வரலாறு பின்வந்த ஆயுதப் போராட்டத்திற்கு மூலகாரணமாகியது. ஒரு பக்கம் தீவிர தமிழ்ப்பற்றையும், நேசிப்பையும் வெளிப்படுத்தியதுடன் தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என்ற அடிப்படையைத் தகர்க்க முடியாத சூழலை ஏற்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர இலங்கையின் ஈழத்தமிழர் அரசியல் கலாசாரத்தில் இணைந்த அரசியலும், பிணக்க அரசியலும் குசேர அமைந்த மரபைக் காண முடிகின்றது. ஆனால் எதிலும் இலங்கையையோ அல்லது பெரும் பான்மை அரசியல் சக்திகளின் அரசியல் போக்கையோ முழுமையாக தகர்க்கமுடியாதநிலை காணப்படுகிறது. இன்னோர் விதமாகக் கூறு வதாயின் இரண்டு உத்திகளாலும் அவர்களின் இலட்சியத்தை அடைய முடியவில்லை. இது ஈழத்தமிழர் அரசியல் கலாசாரத்தில் காணப்படும் சவாலாக உள்ளது.

சுதந்திர இலங்கையின் அரசியல் போக்கில் ஆயுதப் போராட்டம் தனித்துவமான அரசியல் கலாசார பரிணாமத்தை ஏற்படுத்தியது. இது பல ஆயுதக்குழுக்களாக எழுச்சி பெற்று பின் ஒரு ஆயுதக்குழுவாக மாற்றமடைந்து இறுதியில் தமது இலட்சியம் எதனையும் முழுமையாக எட்டாது ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்துள்ளது. ஆனால் ஆயுதப் போராட்டத்தின் தோற்றம், யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒட்டு மொத்தமான வெளிப்பாடாக விளங்கியது. அதற்கான விழிப்பூட்டல், சிந்தனை ஊட்டல், அரசியல் களத்தின் வெற்றிடம் என்றெல்லாம் பாரியளவான கொதிநிலையை உருவாக்கிய ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரம் அதனைப் படிப்படியாகத் தகர்க்கவும் உதவியது. ஆனால் ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய பின்விளைவுகளைப் பின்வந்த அரசியல் தலைமைகளே மக்களின் உணர்வுகளோடு தெளிவான பிரதிபலிப்பைக் காட்டத் தவறியுள்ளன. அது ஈழத்தமிழர் கடந்தகாலத் தில் ஏற்படுத்திய அணுகுமுறையின் பிரதிபலிப்பும், அதனை எதிர் கொள்ள முடியாத ஆயுதக் கலாசார சூழலும் பிரதான காரணமாகவுள்ளது.

ஆயுதக்கலாசார சூழலை ஏற்படுத்திய அரசியல் மிதவாத சக்திகள் தமது கட்டுப்பாட்டுக்குள் அவற்றைக் கைக்கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. அல்லது இன்னோர் விதமாக கூறுவதனால் அவர்களேடு கைகோர்த்து செயல்படமுடியாத நிலையினை இரு பிரிவினரும் ஏற்படுத்தியிருந்தனர்.

மேலும் ஆயுதக் கலாசாரம் ஏற்படுத்திய அதிர்வுகள் என்றும், எதிர்பார்க்கையான சமூகமாகவே ஈழத்தமிழர் சமூகம் விளங்குகின்றது. இதற்கான அடிப்படை ஈழத்தமிழர் நம்பிக்கைகளை அதிகம் பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிப்பவர்களாகவும், மத, பண்பாட்டின் அடிப்படையில் அதீதமான எண்ணப்பாங்குடைய சமூகமாகவும், தனிமனித சொத்து ஆதிக்க சமூகமாகவும், புலமைசார்ந்தும், வல்லமை பொருந்தியதுமான சமூகமாக விளங்குகின்றது. ஆயுதப் போராட்ட நிகழ்விலும், முடிவிலும் பெண்கள் அரசியலை இரண்டாவது பட்சமானதாக அடையாளமிட்ட துடன் அவ்வகைப் பெண்ணிலைவாதம் மிக உச்சமான எல்லைக்குள் வலுவிழந்ததாக தகர்ந்து போவதை காண முடிகின்றது. பெண்கள் சார்ந்த விழிப்புணர்வும், அதற்கான அரசியல் அணுகுமுறைகளும் வெற்று அரசியல் கோசங்களாகவே மாறுகின்றன. பெண்கள் மட்டு மல்ல நலிந்த சமூகங்களிடமும் ஒடுக்கப்பட்ட வறிய சமூகத்தினதும் கட்டமைப்பில் மாற்றமே எழமுடியாதநிலை காணப்படுகின்றது.

## முடிவுரை

நிலமானிய சமூகக் கட்டமைப்புடன் தோன்றி எழுச்சிபெற்ற ஈழத்தமிழர் உலகத்தின் எல்லைகள் எல்லாவற்றையும் எட்டுமளவுக்கு செயற்பட்டனர். ஆனால் அவர்களது அரசியல் வரலாறு ஒரே இயங்கிய லுக்குள் அகப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகள் கடந்த பிற்பாடும் ஈழத்தமிழர்களின் அரசியல் கலாசாரம் மாற்றமடையவில்லை. இவர்களின் அரசியல் வரலாற்றில் தமிழ் தேசியம், மார்க்சிஸம், ஆயுதப் போராட்டம், இலங்கைத் தேசியம் என்ற நான்கு பரிமாணத்துக்குள்ளும் செயல்பட்ட மரபு எந்த மாற்றத்தையும் எட்டமுடியாத நிலைக்குள் அகப்பட்டுள்ளது. இதனை மாற்றமுடியாததென்ற எண்ணப்பாட்டைக் காட்டும் விதத்தில் வரலாறு மீளமீள வலியுறுத்தப்படுவதுடன் சமகாலம் மிக வங்குரோத்தான கட்டத்தை எட்டியுள்ளது. இதிலிருந்து மாறுவதற் காக திட்டமிடலும் நகர்வும் ஈழத்தமிழர் மத்தியிலுள்ள புலமை யாளரின் நேர்த்தியான முறைமைசார்ந்த அணுகுமுறைக்குள்ளாலேயே முடியுமென்பது தெளிவாகப் புலப்படுகின்றது. காரணம் ஈழத்தமிழரின் அரசியல், கலாசார தடத்தில் புலமையாளர்கள் ஒருபோதும் முழுமை யான செல்வாக்கைச் செலுத்தவில்லை. செலுத்தும் சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. எனவே இன்றைய அரசியல் நாளைய வரலாறு என்ற மரபார்ந்த எண்ணத்திற்குள் ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரத்தின் போக்கு மிக நெருக்கடி மிக்கதாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிய நூல்கள்


1) குணசிங்கம். மு, இலங்கைத் தேசியவாதம் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வு, சிட்னி, 2003.

2) குலரத்தினம். க, சி, நோத் முதல் கோபல்லாவரை இலங்கையின் அண்மைக்கால (1796 ___ 1962) அரசியல் வரலாறு, ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம், 1966. பாகம் - 1

3) குமாரி ஜெயவர்த்தனா (மொ. பெ. சித்திரலேகா, சி. க. நித்தி) இலங்கையின் இனவர்க்க முரண்பாடு, பாரதி நிலையம், சென்னை, 1995.

4) கணேசலிங்கம். கே, ரீ, தென்னாசியாவின் அரசியல் கலாசாரம், சேமமடு பதிப்பகம், 2008.

5) *Mychal Roberts (Ed), Documents of the Ceylon National Congress in Ceylon 1929 – 1950. vol. IV, Department of National Archives, Colombo, 1977, P – 2708.*

6) *Knox, Robert, An Historical Relation of Ceylon, Published as the Ceylon Historical Journal, vol – 06 (July 1956 – April 1957).*

7) *Asoka Bandarage, Colonialisn in Sri Lanka (The Political Economy of the Kandyan High lands, 1883 – 1886) A stamfort lake publication – 2005.*

8) *Wilson, A, J, The Breat – up – of – Sri Lanka, The Sinhalese – Tamil conflicte, C. Hurst and company, London, 1988.*

9) *Ganath Obeyesekara, Retigious symbolism and Political change in Ceylon, modern Ceylon studies, Journal of the Social, vol – 1, June 1970.*

10) *Wijayawardena, The Revolt and the temple, Sinhala publication, Colombo – 1953.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் ஐக்கியதேசிய கட்சி : 2010ம் ஆண்டுத் தேர்தல் பற்றிய நோக்கு

## அறிமுகம்

இலங்கை அரசியல் வரலாற்றுடன் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட அரசியல்கட்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சி முதன்மையானது. சுதந்திர இலங்கையின் அரசியல் திருப்புமுனையின் முன்னோடியான ஐக்கிய தேசியக்கட்சி முதல் சுதந்திர அரசாங்கத்தினை அமைத்தது. இலங்கையின் ஜனநாயக மரபினையும், முதலாளித்துவ - தாராளவாத அரசியல் சித்தாந்தத்தையும் இலங்கை மக்கள் மத்தியில் நிலைப்படுத்து வதில் முன்னோடியாகத் திகழ்ந்தது. டி.எஸ்.சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர். ஜோன். கொத்தலாவல, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர்.பிறேமதாஸா என்ற அரசியல் தலைமைமகளையும் அவர்களின் ஆளுமைகளையும் கொண்டிருந்த கட்சியாக விளங்கியது. தற்போது ரணில் விக்கிரமசிங்ஹவின் தலைமைத்துவத்தில் எல்லையில்லா நெருக்கடியையும் முரண்பாட்டினையும் கொண்டிருக்கின்றது. 2010 ஆண்டு தேர்தல் உட்கட்சி ஜனநாயகத்திற்கு பாரிய சவாலையும், எதிர்ப்பு அரசியலையும் உருவாக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி 1946ஆம் ஆண்டு பிரித்தானிய ஆதரவு அரசியல் கட்சியாக உருவானது. குறிப்பாக இரண்டாம் உலக யுத்த முடிபும் உலக அரசியல் ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றமும் இலங்கை மட்டுமன்றி பிரித்தானிய குடியேற்ற நாடுகள் பலவும் சுதந்திரத்தினை நோக்கிய விதப்புரைகள் முன்வைப்பதற்கு வித்திட்டது. இதனால் இலங்கையின் ஆட்சியை முதலாளித்துவ சக்திகளிடம் கையளிக்க விரும்பிய பிரித்தானியர் ஐக்கியதேசியக் கட்சியிடம் (இனி ஐ.தே.க என அழைப்போம்) அதனை கைமாற்ற திட்டமிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோல்பரிப்பிரபு, மற்றும் சேர் ஐவர் ஜென்னிங்ஸ்[1] ஆகியோரின் அனுசரணையுடன் டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையில் ஐ.தே.க ஆரம்பிக்கப்பட்டது. 1947ம் ஆண்டு ஒகஸ்ட் - செப்டெம்பர் தேர்தலுக்கு பின்னரான முதலாவது பிரதிநிதிகள் சபை அமர்வு 1947 ஒக்டோபர் 14 திகதியன்று நடைபெற்றது.[2] இத்தேர்தலில் ஐ.தே.க 751432 வாக்குகளைப் பெற்று 42 ஆசனங்களை தமதாக்கி ஆட்சி அமைத்தது முதல் 2010 ஆம் ஆண்டு தேர்தல்வரை தனித்தும், கூட்டணி அமைத்தும் போட்டியிட்டுவருகிறது. பலதடவை தோல்வியை எதிர் கொண்டாலும் அதற்கு சமமான தடவை ஆட்சி அமைத்திருக்கின்றது.

இலங்கையின் அரசியலில் இலவசக்கல்வி, இலவசப்பாடநூல், மகாபொல, ஜனசக்தி, ஜனசவிய, வீடமைப்பு, துரித மகாவலி அபிவிருத்தி, திறந்த பொருளாதாரக் கொள்கை என நலச்சேவை *(Welfare State)* அரசை அமைப்பதில் முனைப்புக் காட்டிய கட்சியாக ஐ.தே.க விளங்குகின்றது. அவ்வகை வலிமையும், தலைமையும் நீண்ட பாரம்பரியமும் கொண்ட ஐ.தே.க வினால் கடந்த 2010 ஆண்டு தேர்தல் போன்று 2002 தேர்தலை தவிர கடந்த இரு தசாப்தங்களாக தோல்வியை சந்தித்துவருகிறது. அதற்கு சரியான காரணத்தை கண்டறிவதும், அதன்மூலம் ஐ.தே.க வின் மறுசீரமைப்பு பற்றிய விதந்துரைகளையும் இக்கட்டுரை கொண்டுவர முயலுகிறது.

## 2010ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிபுகள்

2010ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக மலர்ந்திருந்தது. நடந்து முடிந்த தேர்தகளில் ஜனாதிபதி தேர்தலும், பாராளுமன்ற தேர்தலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு *(UPFA)* உரியதாகவே அமைந்திருந்தது. இரண்டு தேர்தல்களிலும் ஐ.தே.க ஆதரவு சக்தியான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் ஜனாதிபதி தேர்தல் தோல்வியும் பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.கவின் தோல்வியும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தலின் முடிபுகளின்படி ஆசனங்களைப்பெற்ற அரசியல் கட்சிகளின் விபரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனங்கள் |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 4848388 | 144 |
| ஐ.தே.க | 2357557 | 60 |
| ஜே.வி.பி | 441281 | 07 |
| அ.இ.த.அ.க (த.தே.கூ) | 233180 | 14 |
| ஆதாரம்: *Daily Mirror, April 22,2010* | | |


விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் கீழ் இலங்கையின் கடந்தகால அனுபவத்தின்படி சாதாரண பெரும்பான்மையை எட்டுவது மட்டுமே முடிந்ததொன்றாக அமைந்திருந்தது. அதனை முறியடித்து முதல்தடவையாக 2/3 பெரும்பான்மையை அண்மித்த முடிபுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு *(144+6=150)* எட்டியுள்ளது.[3] இது இலங்கையின் அண்மைய தேர்தல் பதிவுகளில் புதிய அனுபவமாக உள்ளது. குறிப்பாக விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் 1989 இல் 125 ஆசனத்தினை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்டது. 1994 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி 105 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. 2000 ஆண்டு பொ.ஐ.ஐ.மு 107 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. 2001 இல் ஐ.தே.க *(UNP)* 109 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. 2004 இல் ஐ.ம.சு.மு 105 ஆசனங்களை பெற்றுக்கொண்டது.[4] இதனாலேயே 2010 தேர்தல் அதிமுக்கியம் பெற்றதொன்றாக காணப்படுகிறது. இதற்கான காரணமாக மக்களின் வாக்களிப்பு பிரதான கட்சியுடன் இருந்தது மட்டுமன்றி ஒரு கட்சியை நோக்கிய வாக்குக்குவிப்பு அதிகரித்துள்ளது.[5]

மேலும் உதிரிகளான கட்சிகளும், பிரிவுகளும் ஒரே அரசியல் கட்சிக்குள் இணைந்திருந்தமையும், ஒரே அரசியல் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டமையும் பிரதான காரணம் என கருதப்படுகின்றது.[6] எதுவாயினும் இலங்கையின் விகிதாசார தேர்தலின் அனுபவத்தில் 2010 தனித்துவமானது. ஆனால் ஐ.தே.க வுக்கு அதிர்ச்சியானது. இதுவரை நடந்த விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தலில் ஐ.தே.க இவ்வகை மோசமான தோல்வியை எதிர்கொள்ளவில்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை ஐ.தே.க போன்று ஜனதாவிமுக்தி பெரமுன (ஜே.வி.பி) அமைப்புக்குள் எற்பட்ட உடைவு அதன் அரசியல் வாய்ப்பினை தகர்த்திருந்தது. 1994 இல் புதிய அரசியல் பிரவேசமெடுத்துக் கொண்ட ஜே.வி.பி பொதுஜன ஐக்கிய முன்னணி யுடன் இணைந்து *(PA+JVP)* அமைத்துக்கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் கீழ் 2004 தேர்தலில் 41 ஆசனங்களை பெற்றிருந்தது.[7] அதன் முழுமையான வளர்ச்சிப் போக்கு கீழே காட்டப்படுகிறது.





ஆதாரம்:- *www. Daily mirror . lk*

கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும்போது 2010 தேர்தல் ஜே.வி.பி இன் அரசியல் மறுவாழ்வுக்கு சவாலான அம்சமாக அமைவதுடன் இலங்கை அரசியலில் சிறுகட்சிகளின் முதன்மை பலவீனமடைந்து செல்வதனைக் காணமுடியும்.

இவ்வாறே *TNA* என அழைக்கப்படும் அகில இலங்கை தமிழரசுக் கட்சியும் தனது அரசியல் எதிர்காலத்தில் நெருக்கடியான காலகட்டத் திற்குள் தள்ளப்பட்டுள்ளது. 2004 ஆண்டு தேர்தலில் பெற்றுக்கொண்ட 22 ஆசனத்திற்கு பதிலாக இத்தேர்தலில் 14 ஆசனங்களை மட்டுமே தக்கவைத்துள்ளது. இதற்குள் ஏற்பட்ட உடைவும் போட்டித்தன்மையும், போருக்கு பிந்திய அரசியலை வடிவமைப்பதில் நெருக்கடியான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஒப்பீட்டடிப்படையில் கடந்தகால தேர்தலுடன் நோக்குவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறே இலங்கை முழுவதும் மரபுசார்ந்த சிறிய, சிறுபான்மை அரசியல் கட்சிகளின் அரசியல் வடிவம் பலவீனப்படுத்தப்பட்டது. பதிலாக ஆளும் தரப்புக்குள் இணைந்து கொண்ட சிறிய சிறுபான்மை கட்சிகள் பெரியளவில் வெற்றியை அடையாதுவிட்டாலும் கணிசமான ஆசனங்களை பெற்றதுடன் ஆளும் அரசியல் கட்சியை பலப்படுத்து வதில் முன்னிலை பெற்றுள்ளன.

**ஐ.தே.க வின் கடந்தகால தேர்தல் முடிபுகள் பற்றிய ஒப்பீடு *(1989-2000)***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே தரப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் ஐ.தே.க இன் தேர்தல் முடிபுகளில் 2010 அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அரசமைக்கும்போதும் எதிர்கட்சியாக பாராளுமன்றத்தை நிரப்பீடு செய்யும் போதும் சமநிலை *(Balance)* தன்மையை பேண முயன்றிருந்தது. ஆனால் 2010 தேர்தலில் கூட்டணி அமைத்து *(UNF)* தேர்தலை சந்தித்தபோது கடந்தகால கூட்டணி அமைப்புக்களிலிருந்தும் பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ளும் நிலைகாணப்பட்டது. இதற்கான காரணத்தை ஆராய்வது அவசியமானது. இலங்கை அரசியல் அனுபவத்தில் விகிதாசார தேர்தல் முறையானது தனிகட்சி *(UNP,SLFP)* அமைப்பினை முடிபுக்கு கொண்டுவந்ததுடன் அவ்வகை கூட்டணிகள் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை சாத்தியப்படுத்த முடியுமென்பதனை கொண்டிருந்தது. இதன் உச்ச பெறுகையே 2010 தேர்தலில் ஆளும் ஐ.ம.சு.கூ பெற்றுள்ள வெற்றி என்பதை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே ஐ.தே.க நெருக்கடிக்கான காரணங்களை முதலில் பட்டியல் படுத்துவது பொருத்தமானது.

## 1. தலைமைத்துவம்

ஐ.தே.க தலைமைத்துவம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இரத்த உறவான (மருமகன்) ரணில் விக்கிரமசிங்ஹவிடம் (2010 - ஜீன் -14 வரை) உள்ளது. ரணில் விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர் மட்டுமன்றி பலதேர்தல்களில் தொடர்ச்சியான தோல்விகளை கட்சி சந்திக்கவேண்டிய நிலையிலும் தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொண்டவர்.[8] ஆனால் இவரது தலைமைத்துவம் மீது அதீதமான விமர்சனமும் மதிப்பீடுகளும் வெளிவந்துள்ளமை கவனத்தில்கொள்ள வேண்டிய அம்சம். ரணில் விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை அவரது ஆளுமையில் கவர்ச்சிகரமில்லாத *(Herismetic)* தலைவர் என்பது வெளிப்படையாக தெரிகிறது. அவரை தேசிய உடையில் காண்பதோ, விசேட அடையாளங்களை சேர்த்துக் கொள்வதையோ, சாதாரண சிங்கள மக்களுடன் கைகோர்ப்பதிலையே எந்தவிதமான முக்கியத்துவத்தினையும் கொண்டிருக்காதவராக தென்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அரசியல் சுதேச பண்பாட்டு வெளிப்பாடுகளே பண்டாரநாயக்கா முதல்[9] தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி வரை பின்பற்றுகின்ற அம்சமாக உள்ளது. பண்டாரநாயக்கா மேற்குலகில் கல்விகற்றபோதும் இலங்கையின் அரசியலுக்குள் நுழைவதற்கு சுதேச ஆடையும் சுதேச அடையாளமும் அடிப்படையாக அமைந்தது. இது ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிடம் உண்டு. களனித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தது ஜனாதிபதியான போதும் களனி நெல்வயலை மாட்டுக்கலப்பையால் உழவு செய்யும் காட்சி[10] அவரது சுதேச அடையாளமாகப் பார்க்கப்பட்டது. இவை எதையும் ரணில் தனது அரசியல் வாழ்வில் மேற்கொண்டதாக தென்படவில்லை.

ஜனநாயக அரசியல் என்பது மக்கள் சார்ந்த அரசியல். அதனை அடைவதற்கு மக்கள் பக்கம் அதிலும் கிராமிய கட்டமைப்பைக் கொண்ட இலங்கையில் அதிகம் சுதேச பண்பாட்டைச் சார்ந்து செயல்படுதல் வேண்டும். அதில் ரணில் விக்கிரமசிங்ஹவின் தலைமை முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்த்துக்கொள்வதுடன் ஐ.தே.க இன் பலத்தினை கிராமிய மட்டத்தில் உடைத்த வலுவான காரணியாக வுள்ளது. ஐ.தே.க வின் கிராமிய பலத்தை உருவாக்கியதில் டி.எஸ். சேனநாயக்காவுக்கிருந்த பலத்துக்கு[11] நிகராக ஆர். பிறேமதாஸாவுக்கும் இருந்தமையே அதன் கிராமியவாக்கினை பெறுவதில் சாத்தியப் பாட்டை எட்டியது. இதில் பிறேமதாஸா அளவுக்கதிகமான முக்கியத்து வத்தினை நகரத்திற்கு இணையாக கிராமிய மட்ட பங்கேற்பிற்கு கொடுத்திருந்தார்.

அரசியல் தலைமைகளிடம் காணப்படும் இன்னோர் இயல்பு புரட்சிகரமான *(Revaluated)* தலைவராக செயல்படுதல். அந்தவகையில் ஐ.தே.கட்சிக்குள் அதீதமான புரட்சிகரமான அரசியலை மேற்கொண்டவராக பிறேமதாஸா காணப்படுகின்றார். அவரது ஆட்சிக்காலம் குறுகியதானாலும் அக்காலப்பகுதி அரசியல் வடிவத்திற்கு புரட்சிகரமானதாகவும் புத்துணர்ச்சி ஊட்டப்படுவதாகவும் அமைந்திருந்தது. அதனோடு ஆர். பிறேமதாஸா ஏற்படுத்திய அரசியலில் புதிய சிலவிடயங்கள் அதிகார அமைப்புக்குள் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இலங்கை அரசியலில் நிறைவேற்று அதிகார முறைமை *(Executive system)* கவர்ச்சிகரமானதாகவும், ஆளுமை நிறைந்ததாகவும் அதிகாரம் பொருந்தியதாகவும் அமைந்திருந்தமை புரியக்கூடிய அம்சம். இது *West minister* முறைமைக்கும் இலங்கையின் கடந்தகாலத்திலும் காணப்பட்ட அம்சமாகும். ஆனால் நிறைவேற்றுதிகார ஆட்சிக்கு அவற்றோடு வன்முறை அரசியல் மாதிரியும் *(Violence Political)* அவசியமானது.[12] இதனை ஜே.ஆர். ஜெயவர்த்தனா மிக குறைந்த அளவில் பயன்படுத்தினார். ஆர். பிறேமதாஸா மிக உச்சளவில் பயன்படுத்தியதுடன் அதுவே அவரது ஆட்சிமுறைமைக்குரிய அடிப்படையாகவும் அமைந்திருந்தது.

அதாவது மிதவாதமும் தீவிரவாதமும் கலந்த ஓராட்சி முறைமை அதீதமாக வளர வாய்ப்பாக நிறைவேற்றுத்துறை ஆட்சி அமைந்தது. இதுவே நவீன முடியாட்சிக்குரிய இயல்பினை காண்பிக்கும் அம்சமாக உள்ளது. இதில் தேர்ச்சியும் செயல்வடிவமும் உடையவர்களே நிறைவேற்றதிகார ஆட்சியை கைப்பற்றவோ தக்கவைக்கவோ முடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. இதனை தற்போதைய ஐ.தே.க வின் தலைமையிடம் காண்பதற்கு அதிகமாக ஆளும்தரப்பிடம் குவிந்துள்ளது. இது இலங்கை அரசியலில் தவிர்க்கமுடியாத அரசியல் பண்பாடாக வளர்ந்து வருகின்றது.

ஐ.தே.கவில் எழுந்துள்ள தலைமைத்துவப்போட்டி முதனிலைத் தலைமைத்துவத்தைப் பெற்று இரண்டாம் மூன்றாம் தலைமைத்துவங் களின் போட்டியையும் அவர்கள் ஆளும்தரப்பு கட்சிதாவியதும் குறிப்பிடத்தக்க பாதிப்பாக உள்ளது. இதனால் தனிமனிதர்களது செல்வாக்கும் அரசியல் மீதான நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் தகர்ந்துள்ளதுடன் மாற்று தலைமைத்துவம் பற்றிய எண்ணப்பாடும் இயல்பாக எழுச்சியடைந்து வருகின்றது. ஜனநாயகம் நாட்டிற்கு தேவையென போதிக்கும் எந்த அரசியல் கட்சிக்குள்ளும் ஜனநாயகம் இல்லாத போக்கு காணப்படுகிறது. அரசியல் தலைமைகளின் அதிகாரம் போட்டியும் அதனைத் தக்கவைக்கும் கட்சித்தாவலும் இலங்கையில் சாதாரண விடயமாக மாறிவிட்டது. அதிகார வெறிக்குள்ளாகும் இலங்கை அரசியல் கட்சிகளின் இயல்பு பாரிய அழிவுக்கு இலங்கையை இட்டுச்செல்லும் நடவடிக்கைகள் மிக நீண்டகாலமாக நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினை, வறுமை, வேலையின்மை, அடிப்படை வசதியின்மையென பிரச்சினைகள் நீண்டுசெல்கின்றன. 1960களில் சிங்கப்பூர் தலைவர்களால் வளங்கொழித்ததென குறிப்பிடப்பட்ட இலங்கை சோமாலியா ருகாண்டாவிற்கு சமனானதாக மாறிவருகிறது. இதற்கு இவ்வகையில் அரசியல் காலாசாரத்தில் காணப்பட்ட பலவீனமே பிரதான காரணமாகும்.

## II மாறியுள்ள அரசியல் பொருளாதார கட்டமைப்பு

புதிய உலக ஒழுங்கின் வரைபு உலகளாவிய மட்டத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அது சர்வதேச, பிராந்திய அரசியலை மட்டுமல்ல உள்நாட்டு அரசியல் பொருளாதார அமைப்பிலும் மாற்றங் களை செய்யத் தவறவில்லை. அந்த வகைக்குள் இலங்கையின் அரசியலி லும் பொருளாதாரத்திலும் உலகமயவாக்கம் கொள்கை வடிவமற்ற மனித சமுதாயத்தை உருவாக்கிவிட்டுள்ளது. அரசியல் கட்சிகளோ அல்லது ஐ.தே.க கட்சியோ விலகியிருக்க முடியாதநிலை எழுந்துள்ளது. தற்போதைய அரசியற் கட்சிகளில் எவற்றுக்கும் தெளிவான வரையறுக்கப்பட்ட, சார்பான கொள்கை கிடையாது. குந்தர் பிராங் குறிப்பிடுவது போல் எதிர்முரணிய வரைபிற்குள்ளேயே கட்சிகளும், கட்சிகளின் கொள்கைகளும் அமைந்திருப்பதுபோல் அரசுகளும் அரசுகளை இயக்கும் அரசாங்கங்களும் செயற்படுகின்றன.

இவ்வகை அரசாங்கங்களை உருவாக்கிவரும் கட்சி முற்றாக குறைநிலைக்குட்பட்ட உள்நாட்டு அரசியல், பொருளாதார சமூக கொள்கைகளை வரைவதுபோல் வெளிநாட்டுக் கொள்கைகளையும் வடிவமைத்து வருகின்றன. இதனால் தெளிவான வரையறைக்குட்பட்ட கொள்கைவடிவம் அரசியல் கட்சிகளிடம் இல்லை ஆனால் அவ்வகை அரசியல் முடிவை ஐ.தே.க எடுக்கும் தலைமையை துரதிஸ்டவசமாக இதுவரை கொண்டிருக்கவில்லை. அமெரிக்காவையும் சீனாவையும் இந்தியாவையும் ஒரே தளத்தில் கையாளும் வெளிநாட்டு அரசியல் அமைப்பையும், முதலாளித்துவத்தையும், தாராள முதலாளித்துவத்தை யும் தனியார் முதலாளித்துவத்தையும் சமவுடமை தத்துவத்தையும் கலப்புப் பொருளாதார தத்துவத்தையும் சர்வதிகார அரசியல் தத்துவத்தையும் ஒருங்கே சேரும் கொள்கைப் போக்கினை ஐ.தே.க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கத் தவறிவிட்டது. ஐ.தே.க தற்போது ஒரேமுகமாக உலகத்தைப் பார்க்க விரும்புகின்றது.

பொருளாதார நலனே உலக அரசுகளின் இணைவிற்கும், பிரிவிற்கும் காரணம் என்பதை தற்போதைய அரசியல் வகுப்பினர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும். பொருளாதார இலாபங்களே அரசியல் இருப்புக்களை நிர்ணயம் செய்கின்றன. அந்த வகையில் இன்றைய பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரம் அதைநோக்கி உலக முதலீடுகளும் உற்பத்திகளும் ஒன்றுசேருகின்றதே அன்றி அரசியல் கொள்கைகளுக்காக ஒன்று கூடவில்லை. அதனால் அரசுகளையும் அரசுகளின் பொருளாதார முதலீடுகளையும் ஓர் இடத்தில் குவிப்பதற்கான உலக சந்தையை தற்போதைய ஐ.தே.க கண்டுகொள்ளத் தவறிவிட்டது.

உரிமைகளையும், ஜனநாயகத்தையும் பொருளாதார இயக்கவிதிக்காக அரசுகள் கைவிட்டுவிட்ட வரலாறு கடந்த பல தசாப்தங்களாக பதிவிலுள்ள அம்சமாகும். இதனை தென்கிழக்கு ஆசிய நாடுகள் பல தசாப்தங்களுக்கு முன்பே கைவிட்டுவிட்டன.[15] அந்த நாடுகளின் பொருளாதார சுபீட்சத்திற்காக ஜனநாயகத்தினை முடிவிற்கு கொண்டு வந்ததுடன் தனிக்கட்சி ஆதிக்கத்தினை பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே பொருளாதார இயங்கு விசையினையும் அரசியல் சமூகக் கொள்கைகளையும் புதிய உலக ஒழுங்கின் மாறுதல் காலவிதிகள் உருவாகியுள்ளன. அதனை இலங்கையிலுள்ள ஆளும் தரப்பும் அதன் தலைமையும் நுட்பமாக கையாண்டு வருகின்ற அளவிற்கு ஐ.தே.க கடைப்பிடிக்க முடியவில்லை.

2004ஆம் ஆண்டில் ஐ.தே.க தலைமையிலான அரசாங்கத்தினை கலைப்பதற்கு வழிவகுத்த ஐ.தே.க வின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகள் ஐ.தே.க தலைமையால் கருத்தில் கொள்ளப்படவில்லை. உலகத்தையும் பொருளாதார குவிவையும் கருத்தில் கொண்டிருந்ததால் ஐ.தே.க தனது ஆட்சியை தக்கவைத்திருக்க முடியும்.[16] அரசியல் பொருளாதார கட்டமைப்பு மாறிய பிற்பாடு ஐ.ம.சு கூட்டமைப்பும் ஐ.தே.கவும் ஒரே கொள்கையைக் கொண்ட இரண்டு அரசியல் கட்சிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III **ஆயுதப்போராட்டங்களால் ஏற்பட்ட மாற்றம்**

இலங்கை அரசியல் வரலாற்றில் பெரியளவில் எழுச்சிபெற்ற ஆயுதப் போராட்டங்கள் தற்காலிகமாக முடிவிற்கு வந்துள்ளது. தென்னிலங்கையில் எழுச்சிபெற்ற ஜே.வி.பி *(Janatha Vemuthi Paramuna)* இன் ஆயுதப்போராட்டமும் வடகிழக்கில் எழுச்சியடைந்த தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆயுதப்போராட்டமும் முடிவிற்கு வந்துவிட்டதென்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இவ்வகை இரண்டு ஆயுதப் போராட்டமும் ஆயுத ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆயுத ரீதியான வன்முறை மாதிரியைக் காட்டிலும் சாதாரண கிராமிய மக்கள் மத்தியில் அரசியல் மயவாக்கம் *(Political Behavioural)* கணிசமான அளவு மேற்கொண்டுள்ளன. மாக்சிஸ அரசியல் மரபுகளுடன் நெருக்கமான காரணிகளை முதன்மைப்படுத்தி அரசியல் சமுதாயமயப்படுத்தலை மேற்கொண்டுள்ளன.[17] இதனால் மக்கள் அரசியல் கட்சிகளையும் தலைமைகளையும் அவர்களின் அரசியல் நடத்தைகளையும் *(Behavioural of Politics)* இலகுவாகவும், விரைவாகவும் தெரிந்துகொள்வதில் கவனமெடுக்கின்றன. இதனால் தலைமைகளையும் அரசியல் மாற்றங்களையும் மக்கள் தீர்மானிக்கும் போது தலைவர்களினதும் அரசியல் கட்சிகளினதும் நடத்தை ஊன்றி அவதானிக்கப்படுகின்றது.[18]

ஆயுதப் போராட்டங்கள் முடிவிற்கு வந்துள்ளனவே அன்றி அவர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. இது மக்களின் வேகமான அரசியல் மயவாக்கத்தினூடாக பரவலடைந்து கொண்டுவருகின்றது. எனவே ஐ.தே.கவும் அதன் தலைமையும் மக்களின் அரசியல் மயவாக்கத்தின் தன்மைக்கு ஏற்ப நகர்வுகளையும் நடத்தைகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளமை அவசியமானது. மேற்குலகம் பற்றியும் சர்வதேச, பிராந்திய அரசியல் நடத்தைகள் பற்றிய விபரணம் சாதாரணமக்களிடம் எடுத்துச்செல்லப்பட்டுவிட்டது.

IV **பிரச்சாரம்**

அரசியல் நடிபங்கின் பிரதான சாதனமாக பிரச்சாரம் மாறிவிட்டது. குறிப்பாக மரபுசார்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களுடன் மின்னணுச் சாதனங்களின் வருகை இலங்கைக்கு அதிகமான அரசியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவைக்கும் சாதனமாகிவிட்டது. ஆரம்பத்திலிருந்தே இத்தகைய மின்னணுச்சாதனத்தை பிரயோகிப்பவர்களாக மத்தியதர வர்க்கமும் உயர்வர்க்கமும் ஈடுபட்டு வருகின்றன.[19] இவர்களே ஒவ்வொரு நாட்டின் அரசியலிலும் தீர்மானம் எடுக்கும் வலுவுடையவர்களாக விளங்குகின்றனர். மின்னணுச் சாதனங்களைப் பயன்படுத்தி தமக்கிடையே உயர், மத்திய தரவர்க்கம் தெளிவான ஒரு வலைப்பின்னலை செய்துள்ளது.

தமது எண்ணப்பாட்டையும் சிந்தனையையும் ஊடகங்கள் வாயிலாக பிறருக்கும் அவர்களின் மூளைகளை சலவை செய்வதற்கு பயன்படுத்துகின்றமை மிகப்பெரிய பிரச்சாரம் ஆகிவிட்டது. இதனால் ஆளும், எதிர்வர்க்கம் என்பதற்கு அப்பால் பிரச்சாரம் எல்லோரையும் வெற்றிகண்டு வருகிறது. அரசியல் மயமாக்கப்பட்ட பிரச்சாரம் நியாயப் பாடுகளைக் கடந்து மக்கள் மத்தியில் அதீத செல்வாக்கை செலுத்தி வருகிறது. இப்பிரச்சார அணுகுமுறையை அரசியலில் ஈடுபடுத்தும் சக்திகள் பயன்படுத்தல் அவசியமானது.

கடந்த தேர்தல்களில் ஐ.தே.கட்சியின் பிரச்சாரத்தின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாததாக இருந்தது. ஆனால் பிரச்சாரத்திற்கான உத்தியை உருவாக்குவதும் கையாள்வதிலும் பழைய மரபுசார்ந்த அம்சங்களைக் காட்டிலும் நவீனமான வழிமுறைகளைப் பயன்படுத்தும் நுட்பம்சார்ந்த அறிவினுடைய பிரிவின் பங்களிப்பு அவசியமானது.[19] அதனை உருவாக்குவதன் மூலமே அந்த அரசியல் சமூகத்தையும் கட்சியமைப்புக் களுடன் இணைத்துக்கொள்ள முடியும்.

## V. போருக்குப்பிந்திய இலங்கை

தென் இலங்கையின் கருத்துருவாக்கத்தின் படி போருக்கு பிந்திய இலங்கையின் கட்டுருவாக்கம் என்பது புதிய பரிணாமமாக மாறியுள்ளது. இதனால் முழுமையான கொள்கை மாற்றங்களும் விருத்திக்கான பங்குபற்றலும் சர்வதேச, பிராந்திய கட்டமைப்புக்களின் பிரவேசமும் அதிகரித்துவிட்டது. இதனால் போர் வெற்றிகளை காட்டிய தேர்தலாக கடந்த தேர்தல் அமைந்தாலும் அதனை முறியடிக்க முடியாத நிர்ப்பந்த மாகவே ஆளும் தரப்பிற்கு சமமாக எதிர்தரப்பான ஐ.தே.க போரில் தனது பங்கினை நிலைநாட்ட முயன்றது.[20] போருக்குப்பிந்திய தேர்தலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்கு முக்கியத்துவம் அரசியல் பங்குபற்றலில் கொடுக்கப்பட்ட நிகழ்வை மாற்றத்திற்குள்ளாக்க எந்த சக்தியாலும் முடியவில்லை. இதுவே இப்பிரச்சினையின் மீளுருவாக்கத்தில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

அரசியல் கட்சிவரலாற்றில் பாரிய நெருக்கடியை போருக்கு பிந்திய காலம் ஏற்படுத்தி வருகிறது. எனவே ஐ.தே.க மீளுருவாக்கத்திற்கான உபாயம் போருக்கு பிந்திய இலங்கையின் மீளுருவாக்கமாக அமைதல் தவிர்க்கமுடியாத சூழலாக பரிமாணம் எடுத்துவருகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் சர்வதேசப் பொருளாதார தலையீட்டின் அரசியல் தன்மையும் கட்சி அரசியலுக்குள்ளால் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வகை அரசியல் பிரவேசத்திற்குள் வேகமாக செல்லும் பலமும், சித்தாந்தமும் ஐ.தே.க வுக்கு பிற அரசியல் சக்திகளைவிட அதிகமாக இருந்தபோதும் அதனால் செயல்வடிவம் கொடுக்க முடியவில்லை.

**முடிவுரை**

இலங்கை அரசியல் தொடர்ச்சியில் இருகட்சி பாரம்பரியம் சுதந்திரத்திற்கு பின்பு வளர்ந்துள்ளது. இருகட்சிப் பாரம்பரியத்தினை ஆசியாவுக்குள் மிக நீண்டகாலமாக பின்பற்றிய நாடு என்ற பெருமை இலங்கைக்கு உரியது. அதனை முடிபுக்கு கொண்டுவரும் பதிவில் ஐ.தே.க வின் பங்கு அதிகரித்து வருகிறது. இதனால் ஏற்படப் போகும் அரசியல் வெற்றிடம் தவிர்க்க முடியாத சிறுபான்மை சமூகங்களிடம் கைமாற வாய்ப்பு உண்டு.

அதுமட்டுமன்றி ஒருகட்சி அரசியல் தென்கிழக்கு, கிழக்கு ஆசியப் பாணியில் வளருமாயின் ஐ.தே.க வின் அடிப்படையே பாதிப்புக்குள்ளாகலாம். முன்வைக்கப்படவுள்ள அரசியலமைப்பில் உருவாகும் தேர்தல் விதிகள் ஐ.தே.க வுக்கு நெருக்கடியை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அதனால் புதிய உபாயத்தையும், தந்திரத்தையும் கையாண்டு அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதே சாமர்த்தியமான பதிலாக அமையும். அதனை நோக்கி தலைமைகட்சி, பாராளுமன்ற பிரதிநிதிகள் கட்சி, மற்றும் பிரதிநிதிகள் பணியாற்றுவது தவிர்க்கமுடியாத அரசியல் நடவடிக்கையாக உள்ளது. 1977 ஆம் ஆண்டிலிருந்து 1994 வரை ஐ.தே.க ஆட்சி செய்ததைவிட சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிககாலத்தை எடுக்க வாய்ப்பு உண்டு அதனை தீர்மானிப்பது ஐ.தே.க வின் மீளுருவாக்க *(Rebirth)* நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது.[21]

ஐ.தே.க வின் தலைமைத்துவப் போட்டியும், மக்கள் சார்பற்ற தேர்தல் போட்டியும், அரசியல் முதிர்ச்சியற்ற நிலமையும், எதிர்கொள்ள முடியாத ஆளும் தரப்பின் பலமும் தொடருமாயின் ஐ.ம.சு கூட்டமைப்பின் அரசியல் வாழ்வு பலதாசாப்தங்களுக்கு நகரலாம். அவ்வகை பலமும் உறுதியும், தேசியவாத உரமேற்றலும் கொண்ட அரசியல் கலாசாரம் பாரிய பொருளாதார நெருக்கடியை தருவிக்கும். அதனால் எழும் போராட்டம் அரசியல் விதிகளை மாற்றம் செய்யும் வலுவுடையதாகும். எனவே ஐ.தே.க வின் உபாயம் பொருளாதார போட்டிக்கூடாக ஓர் அரசியல் உறுதிப்பாட்டை கட்டியெழுப்ப முடியுமென்பது உசிதமான கட்சிப் பாரம்பரியத்தினை வளர்க்கவோ உருவாக்கவோ உதவியாக அமையும்.

### அடிக்குறிப்புகள்

1. வி.ரி. தமிழ்மாறன்: அரசியலமைப்பாக்கச் சிந்தனைகள். மதுரிமலர்அகம் இரண்டாம் பதிப்பு ஏப்ரல் - 2004. பக் : 19.
2. மேற்படி நூல்
3. *Melinda seneviratine; victory is a curse will many Dimension; Daily mirror, April 22,2000, P – 48*
4. எஸ். அரசரெத்தினம் இலங்கை அரசியல் வரலாறு, குட்வின் அச்சகம், கல்முனை, யூலை 2004.
5. *Melinda Seneviratne;*
6. *Melinda Seneviratne; counter democratic communalist thrust of reinventing 'ethnic' conflict; www daily mirror. lk*
7. *M.S.M Ayub; The options Before the JVP After the General election. www daily mirror. lk*
8. *Ibid.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மு. திருநாவுக்கரசு கொழும்பு — 2007. அறிவமுது 2005. பக். 09-10

10. *T.D.S.A. Dissanayaka; J.R. Jayeweardene of Sri Lanka. Swastika press. 1977 August.*

11. *Ilica Malkanthi. Karunaratne; those unforgettable Dudley years, Daily mirror, April 13, 2010*

12. மு. திருநாவுக்கரசு பக்.16

13. அந்ரே குந்தர் பிராங், உலக அரசியல் பொருளாதாரத்தில் எதிர் முரண்நிலைகள் : பொருளியல் நோக்கு, இதழ் 17, 1991

14. கே.ரீ. கணேசலிங்கம் , ரீ. திருக்குமரன் சேதுக்கால்வாய்த்திட்டம் : அரசியல் பொருளாதார பாதுகாப்பு சுற்றுச்சூழல் நோக்கு, பிரம்ம வெளியீடு, மார்ச் 2006.

15. கலாநிதி எஸ். சந்திரசேகரம், ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும், ஆசியாவில் இலங்கையின் அனுபவம், கூடம் ஜனவரி - மார்ச் 2009. பக். 12.

16. *Jeyadeva Uyangoda; Peace watch; Polity, March – April 2004. vol .1 No.06 P.08*

17. *Jeyadeva Uyangoda; JVP Splits, Polty January - March 2004 vol.4, No.05 P.5-6*

18. புலி — யானை உடன்படிக்கை பற்றிய பிரச்சாரத்தினை தென் இலங்கையில் வேறு எந்தசக்திகளாலும் முறியடிக்க முடியவில்லை. இவ்வாறு பல அம்சங்கள் ஐ.தே.கவுக்கு தாக்கத்திற்குரியதாகியது.

19. *Joseph. Dominick; The Dynamics of Mass Communication 1994. University of Georgia. Althers, P: 556-557*

20. *Melinda Seneviratne*

21. *Dayan Jeyatilleke; The UNP: is a rebirth Possible? Daily mirror, June – 02, 2010.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையும் சமாதான முயற்சியும் பாலஸ்தீனம் – இலங்கை ஓர் ஒப்பீடு

**அறிமுகம்**

இலங்கை மற்றும் பாலஸ்தீன முரண்பாடுகளுக்கான தீர்வில் சர்வதேச சமூகத்தின் பங்கு தனித்துவமானது அத்தகைய அணுகுமுறை களாக இரு மக்களினது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு அம்மக்களது அரசியலுக்கும் சாதகமான பங்களிப்பும், பாதகமான பங்களிப்புக்கும் வாய்ப்புக்கள் காணப்பட்டுள்ளன. இனமுரண்பாடு களுக்கும், பகைமையினால் எழுந்த போர்களுக்கும் சுமூகமான தீர்வை காணும் நோக்குடன் பொதுவான பொறிமுறை ஒன்று சர்வதேச சமூகம் வகுத்து செயல்பட்டு வருகின்றது. அத்தகைய பொறிமுறைக்குள் அகப்பட்ட இரு தேசிய இனப்பிரச்சனைகளுக்குமான தீர்வு உபாயங்கள் பலவற்றை முன்வைத்தபோதும் அவை தீர்வின்றி அரசியலாக நகர்வதாகவே தெரிகின்றது.

சமாதானம் என்ற பொறிமுறை இலங்கை இனப்பிரச்சனையோடு ஆழமான பதிவுகளை கடந்த காலங்களிலும் தற்போதைய சூழலிலும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் ஒருபுறம் தீர்வற்ற போக்கு நகர மறுபக்கம் பாதிப்பின் வடிவம் போராட்டமாக வளர்ந்து செல்கின்றது. இராணுவ உபாயங்களோடு மட்டுமல்லாது அரசியல் ரீதியில் மக்கள் மயப்படுகின்ற விதத்தில் நிர்வாக அமைப்பு சார்ந்த மட்டத்தில் வளர்ச்சியை நோக்கிய தாக மாறுகின்றது. நாடுகளின் எல்லைக்குள் அகப்பட்டிருந்த இனப் பிரச்சனையும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் பிராந்திய மட்டத்திற்கு விரிவடைந்து தற்போது சர்வதேச மயப்பட்டுவிட்டது. இது புலம் பெயர்ந்த மக்களது உணர்வுகளையும் பெருமளவு தாக்கத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாக்கியிருக்கின்றது. போராட்டம் சார்பான உணர்வில் பெருமளவான புலம்பெயர்ந்த சமூகங்கள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே சர்வதேசத்தின் சமாதானம் என்ற பொதுவான பொறிமுறைக்குள் மக்களின் விடுதலைப் போராட்டம் சிக்கி சிதைந்து போகாமல் பாதுகாக்க முடியாத நிலையென்றும் எழுந்துள்ளது.

## சர்வதேசத்தின் இலக்கு

சமாதானத்துக்கான சர்வதேச பொறிமுறை ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களை உலகம் எப்படி கையாளு கின்றது என்பது பற்றிய ஆய்வாகும். பொதுவாகவே அரசு என்ற கட்டமைப்புக்குள் இருந்து இன்னோர் அரசை இன, மத, மொழி, சார்பு நிலையில் தோற்றுவிக்க முயலுகின்ற தன்மை ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க கண்டங்களில் அதிகமாகக் காணப்பட்டன. பெரும்பான்மை இனங்கள் தமது தேசிய எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்த சிறுபான்மை இனங்களை ஒடுக்குகின்ற சூழல் ஏற்பட்டபோது அதற்கு எதிராக ஆயுதப் போராட்டங்கள் வளர்ச்சியடைந்தன. இவ்வாயுதப் போராட்டங்கள் அரசுக்குள் இன்னோர் அரசை சாத்தியப்படுத்த முயன்றன. இது பனிப்போர் முடிந்த பின்பு பலவீனமடைய ஆரம்பித்தது. ஏனெனில் பனிப்போர் காலத்தில் சோவியத் யூனியன் முகாமும், அமெரிக்க முகாமும் ஒன்றுக்கு எதிராக இன்னொன்று செயல்பட்ட போது விடுதலைப் போராட்டங்களில் இருபக்கங்கள் இருந்தன.

இருதுருவ அரசியலில் சோவியத்யூனியன் முகாம் ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆதாரவாகவும், ஒத்துழைப்பாகவும் விளங்கியதுடன் மறைமுகமாக ஆயுதப் போராட்டங்களை தமது நலன்களுக்காக பரஸ்பரம் இரண்டு சக்திகளும் ஆதரித்தன. ஆனால் சோவியத்யூனியன் அடக்குமுறைக்குள்ளான தேசிய இனங்களுக்கு அதிக ஆதரவை வழங்கியது. இச்சூழல் சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்பு இல்லாது போனதுடன் அமெரிக்கா என்ற தனியரசு உலக வல்லரசாக மாறியது. இம்மாறுதல் உலகமயப்படுத்தல் என்ற *(Globalization)* முதலாளித்து வத்தின் சிந்தனையை அமெரிக்க மயப்படுத்தலாக *(Americanization)* ஆக்குவதில் ஒரு வளர்ச்சிப் பரிமாணத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது. ஒருபக்கம் சோவியத்தின் சரிவு மறுபக்கத்தில் அமெரிக்கமயப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இரண்டும் கூட்டாக தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளிவைக்க முயற்சித்தது. இதில் இன்னோர் பரிமாணமும் செப்ரம்பர் தாக்குதலுக்குப் பின்னர் (9/11) நிகழ்ந்தது.

அதாவது அமெரிக்கா மீதான ஒசமா பின்லேடனின் தாக்குதல் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தும் போராட்ட அமைப்புக்களின் அணுகுமுறையில் மாற்றம் கொண்டுவர காலாய் அமைந்தது. பின்லேடன் பின்னான உலக ஒழுங்கில் பயங்கர வாதம் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது. அது பயங்கரவாதத்தை யும்,விடுதலைப்போராட்டத்தையும் இனங்காண்பதில் ஒரு தெளிவற்ற போக்கைக் கடைப்பிடித்திருந்தது. இதனை உபாயமாக கொண்டு பெரும்பான்மை அரசுகள் சிறுபான்மை இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் மீது பயங்கரவாதம் என்ற முத்திரையை பதிக்க முயன்றன. அதில் பல அரசுகள் வெற்றியுமடைந்தன. இத்தகைய சூழலுக்குள் தமிழர்களின் விடுதலைப் போராட்டமும், பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் எத்தகைய யதார்த்தத்தை கொண்டிருந்தன என்பதை நோக்குவது அவசியம்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் முகாம் அரசியலுக் கும் அதிக நெருக்கம் இல்லை என்றே கூறலாம். தமிழர் விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு முக்கியமானதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. அது படிப்படியாக குறைந்து 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்பு முற்றாகவே இந்தியாவின் நலனும், அதன் புவிசார் அரசியலும் மிகத் தெளிவாக அம்பலப்படுத்தப்பட்டது. அதன் பின்பு ஏற்பட்ட மாறுதல்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் சூழலை ஏற்படுத்தியது. இது புதிய உலக ஒழுங்கு *(New World Order)* உருவான பிற்பாடு மாறுதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை சந்தித்தது. அதாவது பிராந்தியத்தினை தாண்டி சர்வதேச மட்டத்தில் தமிழர் விடுதலைப் போராட்டம் எடுத்துச் செல்லப்படும் போதே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் உலக விடுதலைப் போராட்டங்கள் போன்றதொரு நெருக்கடி ஏற்பட்டது. இது ஒரு வகையான, முன்னேற்றகரமான நெருக்கடியாகவே *(Adwance Crisis)* அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழலை விடுதலைப் போரட்டத்தின் முன்னோக்கிய பாய்ச்சலாகவும் நெருக்கடியாகவும் கருதலாம். அவை இரண்டையும் தீர்மானிக்கின்ற பலம் தமிழ்மக்களிடமும் விடுதலைப்புலிகளிடமுமே காணப்பட்டது. அத்தகைய நெருக்கடிகள் பலவற்றை முறியடித்து விடுதலைப்புலிகள் விடுதலைப் போராட்டத்தையும், தமிழ்மக்களின் அரசியலையும் முன்னோக்கி நகர்த்த முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் சர்வதேசம் இலங்கை விடயத்தை கையாளத்திட்டமிட்ட போது இதர உலக நாடுகளில் காணப்படும் தேசிய விடுதலைப் போராட் டங்களை முறியடித்தது போலவே இதனையும் கையாள விரும்பின. அல்லது உலக விடுதலைப் போராட்டங்களுக்கு முன்வைத்த அதே பொறிமுறையையே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திலும் அமுல்படுத்த முயன்றன. அப்பொறிமுறையின் தன்மையை முதலில் நோக்கும்.

இங்கு சர்வதேச சக்தியாக கருதுவது அமெரிக்காவையும் அதன் அமெரிக்கமயப்படுத்தல் கொள்கையையும் ஆகும். இவ் அமெரிக்க மயப்படுத்தல் என்பது உலகம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டிலும் செல்வாக்குக்குள்ளும் வைத்திருப்பதுடன் தனது கட்டளைகளை ஏற்றுக் கொள்ளும் உலகமாக உலகத்தை மாற்றுவதே அதன் நோக்கமாகும். அத்தகைய சூழலுக்குள் விடுதலை, சுதந்திரம் என்பனவற்றை கைவிட்டு ஒரே அமைப்புக்குள் உட்படுகின்ற ஆட்சியை பகிருகின்ற அதிகாரத்தை பரவலாக்குகின்ற சூழலை உருவாக்ககுவதே தீர்வுக்கான அரசியலாக அமைந்திருந்தது.

ஏனெனில் அரசுகள் பிரிவதும் விடுதலை பெறுவதும் இனங்கள் தமது தனித்துவங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாப்பதற்கு சமமானதாகும். அத்தகைய நிலை அமெரிக்க மயப் படுத்தலை சாத்தியப்படுத்தாது. மேலும் மேலும் அரசுகள் உருவாகின்ற போது அவற்றுக்கென கொள்கையும் வலுவும் சாத்தியப்படும் போது முரண்பாடும் மோதலும் அரசுகளுக்காக அமையுமே அன்றி உலகத்தின் பொது நியதிக்கானதாக அல்லது அமெரிக்க நியதிக்கானதாக அமையாது. இதனால் அரசுகளுக்கான பிரிவினை தடுக்கப்பட்டதுடன் செப்ரம்பர் **9/11** தாக்குதலை விடுதலை அமைப்புக்களோடு இணைத்துப் பார்க்கும் தன்மையும் வலுவான அரசியல் பரிமாணமாக வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளர்ச்சிக் கட்டத்தில் உலக விடுதலைப்போராட்ட அமைப் புக்கள் மீது அமெரிக்காவும் அதன் நட்புச்சக்திகளும் போராட்டத்திற்கு பதிலாகவும், தனிநாட்டுக் கோரிக்கைக்கு பதிலாகவும் இணக்கப் பாட்டை சாத்தியப்படுத்தி சமரசமான தீர்வை புகுத்த திட்டமிட்டன. இவ்வகையான தீர்வில் விடுதலைப்போராட்ட பிரதேசம் சார்ந்த மக்களும் விடுதலைப் போராட்ட அமைப்புக்களும் அதன் தலைமை யும் அதிக விட்டுக்கொடுப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையும், சிறுபான்மை மக்கள் எதிர்த்து போராடிய அரசுகளுக்கு தீர்வுக்கு வருவதற்கு நிர்பந்திக்கப்பட்டன. இதனால் விடுதலைப் போராட்ட அமைப்புக்களும் அதிக நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சர்வதேச சமூகம் வகித்த பொறிமுறைக்குள் ஜனநாயகம், மனித உரிமை, சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை, பொருளாதார உரிமை என்ற காரணிகள் இணைந்திருந்தன. இவை விடுதலைப் போராட்டம் நிகழுகின்ற நாடுகளின் அரசுகளுக்கு அல்லாமல் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்குரியதாகவே முன்வைக்கப்பட்டது. அவற்றின் அணுகுமுறைகளில் காணப்பட்ட பல அம்சங்களை சர்வதேச சமூகம் நிராகரித்ததுடன் நல்லிணக்கத்துக்கான பொறிமுறையை சுபீட்சமான சுதந்திரமான பிரவாதமாக வெளிப்படுத்தியது. கணிசமான உடன்பாடு கள் அரசுகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் சாதகமானதாக அமைந்தி ருந்தது. அந்த வகைப்பாட்டுக்குள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அமைதி வழியில் போராடும் மக்களின் அபிலாசைகளையும், அதிகாரத்தையும் பெறுவதே உலக ஒழுங்குக்கும் அதன் நலன்களுக்கும் பொருத்தமானதாக அமைந்தது.

உலக அரசியல் பொருளாதார ஒழுங்கு அமெரிக்க அல்லது உலக மயப்படுத்தலை கொண்டிருந்ததனால் உலக அமைதி, சமாதானம் என்பன அவசியமானதுடன் போரை நிகழ்த்துகின்ற சக்திகளாக அமெரிக்க வல்லரசும் அதன் உலகமயப்படுத்தல் சக்திகளதும் (ஆதிக்கசக்திகள்) நலன்களுக்கும் இலக்குகளுக்கும் உரியதாக அமைந்திருந்தது. போரை நிகழ்த்துவதும் அமைதியை ஏற்படுத்துவதும் ஆதிக்க சக்திகளின் விருப்புக்களில் தங்கியிருந்தது. ஏனெனில் இனமோதல்கள் அல்லது தனிநாட்டுக்கான போராட்டங்கள் பிராந்திய மட்டத்திலும், சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்திலும் நெருக்கடியையும், குழப்பத்தையும் ஆதிக்க சக்திகளுக்கு விளைவிப்பதுடன் ஆதிக்க சக்திகளுக்கு சவாலாக போராட்ட அமைப்புக்களை தயார் செய்து நகர்த்தும் சில பிராந்திய அரசுகளின் இலக்காக அமைந்திருந்தது.

இதனால் சவால்விடும் பிராந்திய அரசுகளையும் அவற்றின் நலன்களையும் ஆதிக்க சக்திகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்ற வகைப்பாட்டுக்குள் விடுதலைப் போராட்டங்கள் மீதான அழுத்தங்களை ஆதிக்க சக்திகள் மேற்கொள்ள ஆரம்பித்தன. இதில் காஸா- ஜெரிக்கோ உடன்பாடு, வெள்ளிக்கிழமை உடன்பாடு, சூடான் உடன்பாடு என்பன போராடும் மக்கள் மத்தியில் மதிப்பை ஏற்படுத்தக் கூடிய உடன்படிக்கைகளாக இருந்தன. இதில் அதிகமான பாதிப்பை அனுபவித்துவரும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் அதன் நெருக்கடிக்கு வழிவகுத்த காரணிகளையும் தேவைகருதி ஆய்வுக்குட் படுத்துவோம்.

**பாலஸ்தீன விடுதலைப் போராட்டம்**

பாலஸ்தீன விடுதலைப் போரட்டத்தின் ஆரம்பக்கட்டமும் அரசியல் தலைவர் அரபாத்தும் உலக மட்டத்தின் முன்னுதாரணமானவை யாகவே காணப்பட்டன. பனிப்போர் முழுவதும் எழுச்சிகரமான போராட்டமாக பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் அரபு உலகத்தின் ஐக்கியமும் அமைந்திருந்தது. இஸ்ரேலுக்கு எதிராகவும் ஐ.நா சபையின் பிரிவினைத் திட்டத்துக்கு கட்டுப்பட்டும் செயல்பட முயன்ற பாலஸ்தீன மக்களை விடுதலைப் போராட்ட அமைப்பும் அரபு உலகமும் தமக்குரிய போராட்டமாக மாற்றியதுடன் இஸ்ரேலினை மேற்காசியப் பிராந்தியத்திலிருந்து அகற்ற பல யுத்தங்களை நிகழ்த்தியது.

ஆனால் எந்த யுத்தத்திலும் அரபுக்கள் முழுமையான வெற்றியை அடைய முன்பே இஸ்ரேலியத்தரப்பு தனது ஆட்சிப்பரப்பை விஸ்தரித்துக்கொள்வதிலும் பாலஸ்தீனப் பிரதேசத்தைக் கடந்து ஜோர்தான், சிரியா, லெபனான், எகிப்து போன்ற நாடுகளின் ஆட்சிப் பிரதேசங்களையும் கைப்பற்றியது. அதனால் யூத இராட்சியத்தின் விஸ்தரிப்பும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டதாக போர்கள் முடிந்தன. 1979ஆம் ஆண்டு பாலஸ்தீனப் பிரச்சனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாளுவதற்காக பாலஸ்தீனர்கள் சம்பந்தப்படாத உடன்பாடென்று எட்டப்பட்டது. அதனை "காம்டேவிட்" உடன்பாடு என அழைத்தனர். அவ் உடன்பாடிக்கையில் எகிப்து, இஸ்ரேல், அமெரிக்கா என்பன இணைந்து உடன்படிக்கையை செய்தன. இதனால் இஸ்ரேலினை எகிப்து அங்கீகரித்ததுடன் பாலஸ்தீன விடுதலைப் போரட்ட (*PLO*) அமைப்புக்கான ஆதரவை விலக்கிக்கொண்டதாக முடிந்தது. இதன் பின்னர் அரபாத்தும் *PLO* வும் படிப்படியாக அயல் நாடுகளால் நிராகரிக்கப்பட்ட போதும் சோவியத் யூனியனின் மறைமுக ஆதரவும் கிடைத்தது.

ஆனால் போராட்ட வட்டத்தில் பல கட்டங்களை அரபாத் அறிமுகப்படுத்திய போதும் இஸ்ரேலின் பக்கம் அமெரிக்க ஆதரவும் முழு முதலாளித்துவ சக்திகளது ஒத்துழைப்பும் கிடைத்தமையால் *PLO* ஆல் பெரிதாக எதனையும் சாதிக்க முடியாமல் போனது அதுமட்டு மன்றி அயல்நாடுகளின் ஒத்துழைப்பு *PLO* வுக்கு குறைவடைய அரபாத் சர்வதேச சக்திகளின் வலைக்குள் விழும் நிலை படிப்படியாக ஆரம்பித்தது. இந்தக்கட்டத்தில் சோவியத் யூனியனும் சரிந்தது. அதனால் ஏற்பட்ட ஈராக் மீதான முதலாவது யுத்தத்தில் அரபாத் சதாம் உஷைன் பக்கம் சாந்ததனால் அதிக நெருக்கடியை இஸ்ரேல் மட்டு மன்றி அமெரிக்காவும் கொடுக்க ஆரம்பித்தது. இந்த சந்தர்ப்பத்திலேயே 1993 ஆம் ஆண்டு காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கை எட்டப்பட்டது.

காஸா - ஜெரிக்கோ சமாதான உடன்படிக்கையே மிகப் பலவீன மானது. இதனை நிர்வாகப் பிரதேசமாக கொள்வதென்பதே கடினமான தாக அமைந்ததுடன் இரண்டு பிரதேசத்தையும் தனித்தனியாகவே இஸ்ரேல் பிரித்து வைத்திருந்தது. அத்தகைய உடன்படிக்கையைக் கூட அமுல்படுத்த முடியாது மீளவொரு "வைநதி உடன்படிக்கை" ஒன்று (*Wye River memorandum*) கைச்சாத்திடப்பட்ட சமாதான பொறி முறையை காணலாம். 1993ஆம் அண்டு மேற்கொள்ளப்பட்ட உடன் பாட்டின்படி 1998 ஆம் ஆண்டின் ஏப்ரல் - ஜீலைப் பகுதிக்கிடையில் இஸ்ரேல், பாலஸ்தீன அதிகாரப் பிரதேசத்திடம் காஸா - ஜெரிக்கோ பிரதேசம் ஒப்படைக்கப்பட வேண்டும். 1998 வரை அமுல்படுத்தாத துர்ப்பாக்கிய நிலையினால் 1999 இல் மீள அமுல்படுத்துவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைநதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (இது அமெரிக்காவின் வைநதிக்கருகிலிருந்த மாளிகையில் செய்யப்பட்டதால் அவ்வாறு அழைக்கப்பட்டது) என்றுமே காஸா-ஜெரிக்கோ உடன்பாட்டில் எட்டப்பட்டவற்றில் அடிப்படையான எந்த விடயமும் அமுலாக்கப் படவில்லை. மாறாக காஸாப்பகுதியிலிருந்து படைகளை இஸ்ரேல் விலக்கிக் கொள்வதாக கடந்த 20 ஆண்டுகளாக கூறிவருகின்றது. காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயம் என்ற வகையில் பார்த்தால் சமாதானப் பொறிமுறையின் போக்கு நன்றாகவே புலனாகும். இஸ்ரேல் அமெரிக்கக் கூட்டு அடிப்படையான ஒரு வேலையே சாதித்துள்ளது. தற்போது யசீர் அரபாத்தும் இல்லை பாலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பு இப்போது ஆயுதப் போருக்குரிய அமைப்புமல்ல. எனவே மேற்குலகம் மிக நாகரிகமாக பேசி சமாதானம், ஜனநாயகம் என்ற மாயைக்குள் *PLO* வையும் விடுதலைப் போராட்டத்தையும் முடிபுக்கு கொண்டுவந்துவிட்டது.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் மரணத்துக்கு யசீர் அரபாத்தும் ஒரு காரணம் என்பதை எந்த வரலாற்றாய்வாயினும் மறுக்கமுடியாது. காரணம் யசீர் அரபாத் அதீதமான மிதவாத சிந்தனைக் குள்ளும், பிரதேசங்களில் தங்கியிருக்கும் விடுதலைப் போரையுமே வழிநடத்துபவராக விளங்கினார். ஆயுதப் போராட்டத்தை பிறநாடு களில் தங்கியிருக்கும் நிலைமைக்குள் வைத்திருந்ததுடன் இராணுவ ரீதியிலும், மிதவாத அரசியலிலும் தன்னை ஒரு பிரபலமான அரசியல்-இராணுவத் தலைவராக காட்டிக் கொள்ளமுயன்றார். இதனால் அரபாத் உலகம் தெரியும் மனிதராக விளங்கியதோடு மிதவாத அரசியலுக்குள் மூழ்கிப்போனார். அது அவரது மக்களையோ போராட்டத்தையோ வளர்ப்பதற்கு பதிலாக அரபாத்தை வளர்த்துவிட்டது.

மிதவாத அரசியலுக்குள்ளும், ஐ.நா அரசியலுக்குள்ளும் அரபாத் நகரும் போது விடுதலைப் போராட்டமும் போராளிகளும் போராட்ட களத்திலிருந்து அந்நியப்பட ஆரம்பித்தனர். இதனைப் பயன்படுத்திய அமெரிக்க நட்புச் சக்திகள் போராளிகளை சுகவாழ்வுக்குள்ளும், சொகுசான வாழ்வுக்குள்ளும் அதன் அனுபவத்துக்குள்ளும் அதிகமாக ஈடுபடுத்தும் விதத்தில் செயல்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கு வசதிகளையும், வாய்ப்புக்களையும் அள்ளி அள்ளி மேற்கு அரசும் அவற்றின் ஆக்கிரமிப்பு ஏஜெண்டுகளுடன் அரசசார்பற்ற அமைப்புக் களும் வழங்கின. இதனால் அவர்கள் ஆயுதத்தை கைவிட்டு, போராட் டத்தை கைவிட்டு, சுகபோகவாழ்வை அனுபவிப்பவர்களாக மாறினர். இதனால் அரபாத்தினாலோ, அல்லது வேறு எந்தத் தலைமையி னாலையோ அவர்களை மீளவும் ஆயுதம் தரிக்கவோ, போர்புரியவோ, வைக்க முடியவில்லை. இதனால் அரபாத் அமெரிக்க இஸ்ரேலிய காலடியில் விழும் வீரனாக மாறினார். மிதவாதத்தினாலேயே தோற்கடிக்கப்பட்டார்.

எனவே மேற்குலகம் உருவாக்கிய பொறிமுறைக்குள் அரபாத் ஜனாதிபதியானார். பாலஸ்தீனர்கள் வாக்களிப்பவராக மாற்றினார்கள் ஆட்சிமாற்றத்திற்கும், அதிகார கைமாற்றலுக்கும் பாலஸ்தீன பிரதேசம் தயாராகியது. ஆனால் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு வடிவங்களான முள்வேலிகளுக்குள்ளும் பிரிக்கப்பட்ட வாழ்வுக்குள்ளும் சிறைசாலைக ளிலுமே பாலஸ்தீனர்கள் வாழ்வு அமைந்திருந்தது. கற்களை எதிரிகள் மீது வீசுகின்ற மிக ஆரம்பகால மனிதனின் போராட்ட அணுகுமுறை யுடனேயே இன்றும் பாலஸ்தீனர்கள் வாழும் துயரம் அவர்களுக்கு கிடைத்துள்ளது. இதற்கு அரபாத்தும் பாலஸ்தீன விடுதலை அமைப்புமே பிரதான காரணமாகவே கொள்ளவேண்டும்.

அரபாத்தின் மரணத்திற்கு காரணமானவர்களில் மேற்குலகத்திற்கு அதிக பங்குண்டு அரபாத் போன்ற தலைமைகளை அவர்களது மரணத்தால் தோற்கடிக்கும் உபாயத்தையே மேற்குலகம் பின்பற்றி வருகின்றது அதுவரை போராட்டத்தையும் அந்த மக்களையும் போலி யதார்த்தங்களைக் கூறிக்கொண்டு காலத்தை கடத்துவதும் இழுத்த டிப்பதுவுமே அவர்களது தந்திரமாக அமைந்துள்ளது.

அரபாத்தை தேசியமட்டத்தில் போற்றப்படும் தலைவனாகவும் சமாதானத்துக்கான நோபல் பரிசுக்குரியவராகவும் மாற்றிய மேற்குலகம் அவரால் பாலஸ்தீனத்தில் எந்த விடுதலையை ஏற்படுத்த முடியாதவராக ஆக்கியது. உலகம் போற்றும் தலைவனாகவும், வீரனாகவும் மதிக்கப் பட்ட யசீர் அரபாத் வெளிப்படையாகவோ, அல்லது திட்டமிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலோ சுதந்திரமான பாலஸ்தீன அரசை உருவாக்க முடியாமல் போயிருந்தது. மக்கள் அரபாத்தை மதித்தளவுக்கும், முதன்மைபடுத்திய அளவுக்கும் அரபாத் அந்த மக்களுக்காக விடுதலையை பெற்றுக் கொடுக்கமுடியவில்லை.

அரபாத் உருவாக்கிய மிதவாத அரசியல் மேற்குலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல் இருந்தாலும் அது போலியான நியாயப்பாடற்ற தந்திரோபாயமான நடத்தையாகவே அமைந்திருந்தது. ஒருபக்கம் அரபாத்தையும், விடுதலையையும் ஆதரிப்பது போல் அமைந்திருக்க மறுபக்கத்தில் தோற்கடிப்புக்கான திட்மிடலுடன் மேற்கின் ஆதரவைப் பெற்று இஸ்ரேல் செயல்பட்டது.

யூதத்தலைவர்கள் அரபாத்துடன் பேசிக் கொண்டும் சமாதானத் துக்காக கைகுலுக்கிக் கொண்டும் விட்டுக்கொடுப்புக்கு தாம் தயாரென உலகம் முழுவதும் பிரச்சாரப்படுத்திக் கொண்டும் பாலஸ்தீனர் மீது தாக்குதலை மேற்கொண்டே வந்தனர். சிறுவர்கள், பெண்கள், முதிய வர்கள் என்ற வேறுபாடின்றி படுகொலைகளை மேற்கொண்டுவந்தது. இப்படுகொலைகளை நிறுத்துவதற்கான எந்த முயற்சியையும் PLO எடுக்காத நிலையில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்கள் பதில் தாக்குதல்களை நிகழ்த்தின. அப்போது தற்கொலை என்ற புதிய தாக்குதலைப் பிரயோகித்து இஸ்ரோலியரை அச்சுறுத்த ஹமாஸ் மிகத்தீவிரமாக செயல்பட ஆரம்பித்தது.

காஸா - ஜெரிக்கோ சமாதான பேச்சுவார்த்தையின் பின்னர் மிகப்பலமான அமைப்பாக ஹமாஸ் வளர்ந்தது. இதனை ஆரம்பத்தில் கணிசமான பங்கு சிரியா, ஜோடான், ஈரான் போன்ற நாடுகளுக்கு இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் ஆரம்ப நடவடிக்கை ஒருவகை யில் *PLO* வுக்கு எதிரானதாகவே அமைந்திருந்ததனால் அமெரிக்க-இஸ்ரேல் தரப்பு ஹமாஸின் வளர்ச்சியையும் அதன் நடத்தையையும் அதிகம் அலட்டிக்கொள்ளாமல் இருக்கவே விரும்பினர். இதனால் படிப்படியாக வளரத்தொடங்கிய ஹமாஸ் காஸா- ஜெரிக்கோ உடன்பாட்டுக்கு பின்பு தீவிரம் பெற்றது. பின்னர் *PLO* வின் இடத்தை நிரப்பும் இன்ரிபடாவுக்கு ஒப்பான போராட்ட அணுகுமுறைக்கு தயாரானது. அதனால் பாலஸ்தீன இளைஞர் மத்தியிலும், மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் அதிகமான செல்வாக்கைப் பெறும் சக்தியாக மாறியது. தற்போது யூதர்களின் முள்வேலிகளையும் தடுப்புச்சுவர்களையும் தாண்டி தாக்குதல்களை அதிகம் நிகழ்த்தி யூத அரசுகளை நெருக்கடிக் குள்ளாக்கும் சக்திகளாக ஹமாஸ் மட்டுமே விளங்குகின்றது.

ஹமாஸின் அணுகுமுறை பயங்கரவாதத்திற்குட்பட்டதாக அமைந்தாலும் இஸ்ரேலிய- அமெரிக்க கூட்டின் உபாயங்களை முறியடிக்க முடியாத நிலை *PLO* வால் ஏற்பட்டதுடன் தொடர்ந்து யூத அரசாங்கம் திட்டமிட்டு பாலஸ்தீனர்களை அழிப்பதை நிறுத்தவும், படுகொலைகளை கட்டுப்படுத்தவும் ஹமாஸின் அணுகுமுறை பாலஸ்தீனர்களுக்கு கைகொடுப்பதாக அமைந்துள்ளது.

யசீர் அரபாத்தை குற்றச்சாட்டுக்கு உட்படுத்துவது இவ்வாய்வின் நோக்கம் அல்ல. அரபாத் சிறந்த ஆயுதப் போராட்ட வீரன், கவர்ச்சியும் தனித்துவமும், ஆளுமையும் கொண்ட தலைவன் அவனது தலைமை யில் பாலஸ்தீனமே உருவாகும் நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது. ஒடுக்கப் பட்ட மக்களுக்கெல்லாம் ஒருகாலத்தில் முன்னுதாரண வீரனாகச் செயல்பட்டவர் அரபாத். ஆனால் அரபாத் யதார்த்தத்தையும், சர்வதேசம் விரித்த பொறியையும் கணக்குப் போடத்தவறிவிட்டார். அவர் கணக்குப் போட்டு பணியில் இறங்கமுன்பு சர்வதேசம் முந்திக் கொண்டதெனக் கூறலாம். ஏனெனில் அரபாத் மிதவாதத்துக்குள் நுழையும்போது ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு நுழையவில்லை. இரண்டையும் சமமாகவே மதித்து செயல்பட வேண்டுமென திட்டமிட்டிருந்தார். அதன்படி அவரால் அதிக காலம் செயல்படமுடியவில்லை. காரணம் முழுமையாக மிதவாதம் பிரச்சனையை தீர்க்குமென எண்ணினார் அல்லது எண்ணவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டார். அந்த நிர்ப்பந்தம் மேற்குலகத்தின் சமாதான பொறிமுறையாலே ஏற்பட்டதாகும்.

ஆயுதப்போராட்டம் அற்று மிதவாத அரசியல் அணுகுமுறையு மற்று நிர்க்கதியான நிலையிலேயே அரபாத்திற்கு மரணம் ஏற்பட்டது. ஒருவகையில் அரபாத் காஸா - ஜெரிக்கோ உடன்படிக்கை எட்டப்பட்ட போதே போராட்டத்தின் அடுத்த பரிமாணம் பற்றிய இயலாமை ஏற்பட்டுவிட்டது. தேசிய இனவிடுதலைப் போராட்டங்களை பாதுகாக்கவும், அடுத்த கட்ட பரிமாண வளர்ச்சியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடுவதற்காகவே உடன்படிக்கைகளையும் சமாதான உரையாடல் களையும் விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் மேற்கொள்கின்றன. ஆனால் பாலஸ்தீன விடுதலைப் போராட்டமோ அழிவின் இறுதிக் கட்டத்தில் நின்றுகொண்டு மீட்டெடுக்க முடியாத ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை கைவிடுகின்ற உத்தரவாதத்தையும், இஸ்ரேலிய - அமெரிக்க கூட்டுப்போடுகின்ற எச்சங்களுக்காக கையேந்தி நிற்கின்ற நிலையிலுமே எட்டப்பட்ட உரையாடலாகவும், உடன்பாடாகவும் காணப்பட்டது.

சமகால சர்வதேச அரசியலுக்குள் ஜனநாயகம், மனிதஉரிமை, பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை, சந்தைவாய்ப்பு, உலகப் பொரு ளாதார வலைப்பின்னலுக்குள்ளான இசைவு, என்ற புதிய சுலோகங் களும், கோஷங்களும் உபாயங்களாக பின்பற்றப்படுகின்றது. இந்த உபாயங்களை பின்பற்றுகின்ற அரசியல் இராஜதந்திர திட்டவகுப்புக் களுக்குள்ளும். போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற மக்கள் கூட்டத்தின் ஆதரவுமே அவசியமாகின்றது. போராட்டத்தினை நடத்தும் தேசிய இனம் முழுமையாகவும், சலிப்படையாமலும் அதற்கான சூழல்கள் ஏற்படாத வகையிலும் போராட்டம் வகுக்கப்பட வேண்டும். இதற்கு சமமாக அல்லது இதனைவிடவும் பல நூற்றாண்டு கள் பழைமைவாய்ந்த அயர்லாந்துப் போராட்டம் இன்றும் வலுவிழந்து போகாதது மட்டுமன்றி மாற்றங்களையும், போராட்டத்தின் யதார்த்தத் தையும் மக்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற நிலை காணப்படுகின்றது.

சமகாலப் போக்கை புரிந்துகொண்டு உபாயம் வகுக்கின்ற போக்கு சின்பெயின் அமைப்பிடமும் அதன் தலைமையிடமும் உண்டு. *(Sinn Fein and IRA)* இதுவரை பன்னிரண்டு உடன்பாடுகளை அயரிஸ் விடுதலைக்கான போராட்ட சக்திகள் இங்கிலாந்துடன் மேற்கொண்டி ருப்பதுடன் இறுதியாக செய்யப்பட்ட வெள்ளிக்கிழமை உடன்பாடும் *(Friday Agreement)* நிறைவேற்றப்படாத சரத்துக்களையும், அலகுகளை யும் கொண்டிருக்கின்றது. இருந்த போதும் பாலஸ்தீன மற்றும் ஈழவிடுதலைப் போராட்டத்தை விட காலத்தால் முந்தியதென்றாலும் முற்றாக விழுங்கப்பட்டாமலும் காணப்படும் போராட்டமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசீர் அரபாத்தின் மரணத்துக்குப்பின்பு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட முகமட் அபாஸ் பாலஸ்தீன விடுதலை அமைப்பையும், பாலஸ்தீன அதிகாரப் பிரதேசத்தையும் நிர்வகித்துவருகின்றனர். அரபாத்தை ஏற்றுக்கொள்ளாத இஸ்ரேலும் அமெரிக்க நிர்வாகமும் அபாஸை அதிகம் அரவணைத்து செயல்பட்டு வருகிறது. அபாஸ் இஸ்ரேலுடனும் அமெரிக்காவுடனும் இசைந்து செயல்படுபவராக காணப்படுகின்றார். அபாஸ் மிதவாதத்தில் அதிக நம்பிக்கை கொண்டவராக இருந்ததுடன் அரபாத்தின் நம்பிக்கையானவராகவும் தேர்தல் காலத்தில் காட்டிக்கொண்டார். ஒருபக்கம் மேற்கின் ஆதரவாள ராகவும், பாலஸ்தின விடுதலைக்கு ஆதரவாளராகவும் காட்டியதனால் தேர்தல் வெற்றியை இலகுவாகப் பெறமுடிந்தது.

ஆனால் அவரது நடத்தை, பாலஸ்தீன பிரதேசம் மீதான இஸ்ரேலியரின் அணுகுமுறையை நிராகரிப்பதற்குப் பதிலாக பாலஸ்தீன நிர்வாகத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதில் கவனம் காட்டினார். அபிவிருத்தியும், மீள்கட்டுமானமும் ஆயுதப் போராட் டத்தை தடுப்பதற்கான மாற்றுவழியென அமெரிக்கா மட்டுமல்ல அபாஸீம் கருதுகின்றார். அபாஸ் அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் குறிப்பிட்ட "2008 இல் பாலஸ்தீனம் தனிநாடாகும்" என்ற செய்தி மீது அதிகம் நம்பிக்கை வைத்துள்ளார். இதே செய்தியைத்தான் முன்னாள் ஜனாதிபதி வில்லியம் கிளின்டனும் கூறியிருந்தார். அவர் 2005 ஆம் ஆண்டில் பாலஸ்தீனம் தனிநாடாகும் என்றார். அமெரிக்க ஜனாதிபதி கள் கூறுவது போல் பாலஸ்தீன மிதவாத தலைமைக்குரிய பிரச்சினை யாகும். பாலஸ்தீனம் என்ற அரபு நாடு ஆயுதப் போராட்டத்தால் வெல்லுவதன்றி அதன் புரட்சிமிக்க தலைமைகளால், தலைமைதாங்கும் நிலைமாறி, தேசிய விடுதலையானது சுயநிர்ணயமான விடுதலையாக வன்றி உருவாகும் பாலஸ்தீனத்தையே அமெரிக்க ஜனாதிபதிகள் கூறுகின்றனர்.

அமெரிக்க ஆதிக்கத்திற்கும் இஸ்ரேலிய இராட்சிய அமைப்புக்கும், அமெரிக்கமயப்படுத்தல் பொருளாதாரத்துக்கும் இசைவுபடுவதுமான தேசமாக பாலஸ்தீனத்தை உருவாக்குவதில் அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டு அதிக கவனம் செலுத்துகின்றது. அவ்வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலஸ்தீனத்தால் பாலஸ்தீன மக்களுக்கோ, தேசிய விடுதலைக்கோ எந்தவிதமான பயனும் கிடைக்கப் போவதில்லை. அது இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் சாதகமான தனிநாட்டுக்குரிய காலம் தற்போதில்லை என்பது மட்டும் யதார்த்தமாகும்.

தற்போதைய ஜனாதிபதி அபாஸ் அடிப்படியான நிலையிலேயே ஜனாதிபதியாக விளங்குகின்றார். அமெரிக்க- இஸ்ரேலிய அரசுகளின் விருப்புக்கு ஆடும் பொம்மை மட்டுமே. அரபாத் இத்தகைய சூழலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். அபாஸ் அதனையே தனது கடமையாகக்கருதிச் செயற்படுகின்றார். எனவே பாலஸ்தீனத்தை மீட்டெடுப்பதோ, சுதந்திரதேசமாக மாற்றுவதோ கடினம் ஹமாஸ் மட்டுமே தற்போது தீவிரவாத அணுகுமுறையோடு போராட்ட உணர்வைக் கொண்டிருக்கின்ற பாலஸ்தீன அமைப்பாகக் காணப்படுகின்றது. ஆனால் இவ்வமைப்பும் அதிக வரலாற்றுத் தவறுகளையும் பிழைகளையும் பின்பற்றி வருகின்றது. அடுத்துவரும் தசாப்தங்களில் முன்னிக்கு வந்தாலும் எதிர்காலத்தில் மீண்டுமொரு *PLO* வாக மாறிவிடுமா என்ற ஐயப்பாட்டையே கொடுக்கின்ற அமைப்பாகக் காணப்படுகின்றது.

எனவே, இறுதியாக பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் தோற்றுப்போனதற்கான காரணங்களை பின்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

- புவியியல் ரீதியாக பாலஸ்தீன மக்களுக்கென வாக்களிக்கப்பட்ட பிரதேசத்தில் பாலஸ்தீன மக்கள் தொடர்ச்சியாக வாழ முடியாமை குறிப்பாக காஸா - ஜெரிக்கோ பிரதேசங்கள் இரண்டும் தனித்தனியான அலகுகளாகக் காணப்பட்டதுடன் இஸ்ரேலியரால் பிரிக்கப்பட்ட நிலையும் காணப்பட்டது.
- சர்வதேச, பிராந்திய அரசியல் சூழலை சரியாக கணக்குப்போடத் தவறியதுடன் அத்தகைய சக்திகளை எதிரிகளாக பாலஸ்தீனம் பார்த்ததே அன்றி அவற்றை தந்திரமாகவோ சமாதான பூர்வமாகவோ அணுகத்தவறியமை.
- பிராந்திய அரபுநாடுகளில் அதிகம் தங்கியுள்ளதுடன் அவை பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தவும், தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்களின் நலன்களுக்காகக் காட்டிக்கொடுக்கவும் முயன்றபோது கூட போராட்டத்தை பாலஸ்தீன பிரதேசத்துக்கு மாற்றத்தவறியதுடன் அதனை அச்சுறுத்தலாகக் கருதத் தவறியது.

- மிதவாதத்தையும், ஆயுதப்போராட்டத்தையும் சமநிலைப்படுத் தாது ஒரு காலத்தில் ஆயுதப் போராட்டத்தையும் இன்னோர் காலத்தில் மிதவாதத்தையும் தனித்தனியாக நம்பியிருந்த நிலமை.
- பாலஸ்தீன மக்களை ஆயுதப் போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளத் தவறியதுடன் முழுமையான அரசியல் மயப்படுத்தலை செய்யத்தவறியமை.

விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் தனித்து போராடுவதை மட்டும் உத்தியாகக் கொள்வது போராட்டத்தின் தோல்விக்கும், மக்களின் எதிர்ப்புக்கும் வழிவகுத்துவிடும். எப்படி அரசுகளும், சர்வதேச வல்லரசுகளும் இராஜதந்திரத்தினை பிரயோகிக்கின்றனவோ அவ்வாறான தந்திரமாகவும் அரசியல் மாதிரிகளை பிரயோகிப்பதுடன் பாதுகாப்புடனும், எச்சரிக்கை உடனும் போராட்டத்தை நகர்த்தினால் மட்டுமே எந்த தேசிய இனமும் விடுதலையை அடையமுடியும்.

தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் ஆயுதம் தனித்தும் முதன்மை பெறுமாயின் சமகால அரசியலில் அது பயங்கரவாதமாகி விடும். அதேபோன்று ஆயுதத்தை கைவிட்டு அரசியல் மாதிரிகளிலும், சமாதான அரசியலும் அதிக நம்பிக்கை கொள்ளுமாயின் உலகத்தின் பொறிக்குள் வீழ்வதாக அமைந்துவிடும் இரண்டையும் அரசுகள் கையாளுவது போன்று அரசுக்காக போராடும் தேசிய இனமும் அதன் தலைமையும் கையாளவேண்டும். இது கத்திமுனையில் நடப்பதற்கு ஒப்பானது இதனை சரிவர கணக்குப் போட்டு நகர்த்தும் தலைமையும் போராட்ட அமைப்புக்களுமே நிலைப்பதுடன் தாம் போராடும் தேசிய இனங்களுக்கு விடிவையும் விமோசனத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதற்கு மிகப்பிந்திய சிறந்த உதாரணமாக விளங்குவது கிழக்கு திமோரின் விடுதலையாகும்.

கிழக்கு திமோரின் விடுதலைக்குப் பின்னால் பெரும் அரசியல் தந்திரம் அமெரிக்காவின் நகர்வாக அமைந்தாலும் விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை வழிநடத்திய தலைமையும் கிழக்கு திமோரிய மக்களும் யதார்த்தமாகவே உழைத்துள்ளனர். வலுவான இந்தோனேசியாவை தோற்கடிப்பதில் பிராந்திய, சர்வதேசக் கூட்டாளிகளை தமக்கு ஏற்ப வளைத்துப்போட்டதுடன் தமது தனிநாட்டுக்கான கோரிக்கையை சர்வதேச மயப்படுத்துவதில் தீவிரம் காட்டியிருந்தனர். வேறுநாட்டு முகங்களைக்கூட முகவர்களாக அமர்த்தி அவர்களுக்கு கோடிக் கணக்கில் டொலரினை விரயம் செய்து பிராந்திய, சர்வதேச ரீதியில் பிரச்சாரம் செய்தனர்.

கிழக்கு திமோரியர் ஒருபக்கம் பிரச்சாரமும் மறுபக்கம் மக்களை வீதியில் அணிதிரட்டவும் தயாராகினர். இறுதியில் மக்களின் போராட்டத்தை முதன்மைப்படுத்தியே விடுதலையை உறுதிப்படுத்தினர். கிழக்கு திமோரியரின் விடுதலை சமகால விடுதலைப் போராட்டங்களுக்கு முன்னுதாரணமாக உள்ளது. பிராந்திய சக்திகளையும் சர்வதேச சக்திகளையும் திருப்திப்படுத்தி வெற்றிபெற்ற கிழக்கு திமோரியர், விடுதலைக்கு பின்பும் தமது நாட்டை பாதுகாக்க வேண்டும். அவர்களின் விடுதலையோடு அமெரிக்காவுக்கும் அதிக தொடர்பு உண்டென்பது நிராகரிக்க முடியாத செய்தியாகும்.

சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள பொறிமுறையானது அரசியல் பொருளாதார இராணுவ பின்புலங்களோடு இணைந்து செயல்படுகின்றது. உலக மயப்படுத்தல் என்ற இயங்குவிசையை மிக நேர்த்தியாக அமுல்படுத்தக் கூடிய பொறிமுறையாகவே சர்வதேசப் பொறிமுறை இயங்கிவருகிறது.

அது விடுதலைப் போராட்டம் நிகழுகின்ற நாட்டில் ஏற்படக்கூடிய பாதிப்பென்று கருதாது அத்தகைய போராட்டங்களால் அந்தப் பிராந்தியத்திற்கும், முழுஉலகத்திற்கு எத்தகைய பாதிப்பு ஏற்படலாமென கருதியே செயல்படுகின்றது. அதனடிப்படையிலேயே உலகப் பொருளாதாரத்தின் போக்கும் அரசியல் இராணுவப் பாதுகாப்பும் தங்கியிருக்கின்றது. சர்வதேசத்தின் பிரதான சக்தியான அமெரிக்கா சுயநிர்ணயத்திற்கு உட்பட்ட விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதும், நிராகரிப்பதும் அதன் நலன் தொடர்பான விடயமாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு போராடும் தேசிய இனங்களின் தனிநாட்டுக் கோரிக்கை கூட அமெரிக்காவின் நலனோடு இசைவுபடுமாயின் அதனை அமெரிக்கா ஏற்றுக்கொள்கிறது. வெறும் பொருளாதாரக் கண்ணோட்டத்துடனும், அரசியல் - பொருளாதார, இராணுவ கண்ணோட்டத்துடனும், அமெரிக்கா உலக விடுதலைப் போராட்டங்களை வகைப்படுத்திப் பார்க்கின்றது. இதனால் சில நாடுகளில் காணப்படும் விடுதலைப் போராட்டங்களுக்கு அதிக அதிகாரத்தை கையளிக்கும் சமஷ்டி முறைமையையும், அகச் சுயநிர்ணயத்திற்குட்பட்ட அதிகாரப் பகிர்வையும் சிபார்சு செய்துவருகின்றது. அனேக அரசுகளை தனியாக பிரிந்துவிடாது தேசிய ஒருங்கிணைப்புடனான ஸ்திரமான அரசுகளை உருவாக்க விரும்புகின்றது. அதிகாரப் பகிர்வு மிக உயர்வாகக் காணப்படும்.

சமஷ்டி மாதிரிகளையோ ஏற்றுக்கொள்ளும் நிலை சாத்தியப் படாத போது மட்டுமே தனிநாடுகளை உருவாக்க தற்போதைய சர்வதேச ஒழுங்கு விரும்புகின்றது. அத்தகைய தனிநாடுகளை அங்கீகரிப்பதிலும் உள்வாங்குவதிலும் அமெரிக்கா முதன்மை வகிக்க விரும்புகின்றது. போராட்டங்களை அழிப்பதிலும் நிராகரிப்பதிலும் முன்னணி பெறவிரும்பும் அமெரிக்கா அத்தகைய வழிமுறை சாத்தியப் படாத போது அதனை அங்கீகரிப்பதிலும் முன்னணி பெறவிரும்புகின்றது.

**ஈழவிடுதலைப் போராட்டம்**

இனி தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும் சர்வதேச சக்திகளின் உபாயங்களையும் ஆராய்வோம்.

சர்வதேச சக்திகளின் உபாயம் என்பது சாதகமான தங்குநிலை அரசியல் தளமல்ல அது ஒரு போர்க்களமுமல்ல. ஆனால் ஆபத்தான, அபாயமான களம் என்பது மட்டும் உறுதியாக தெரிகின்றது. இதனை சாதாரணமானதாக கருதி கையாள நினைப்பது ஆபத்திற்கு கொண்டு செல்வதாக அமையும். முன்கூட்டியே திட்மிட்டு நகர்த்தினால் மட்டுமே எந்த சக்தியும் வெற்றி பெறமுடியும்.

சர்வதேச சக்திகளின் தலைமைதாங்கும் நாடாக இன்றுவரை அமெரிக்கா விளங்குகின்றது. அமெரிக்காவுடன் ஜப்பான், நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பிரித்தானியா, கனடா என்பனவும் தமிழர்களின் சமாதான அரசியலோடு புதிய உபாயங்களை வகுத்து வருகின்றன. அமெரிக்காவின் ஆதிக்க விஸ்தரிப்பு வாதம் முழு உலகத்திலும் நிகழ்ந்து வருகின்ற ஓரம்சம் சோவியத்யூனியனின் சரிவுக்கு பின்னர் அமெரிக்க ஒவ்வொரு பிராந்தியத்தின் மீதும் அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் ஆதிக்கம் செலுத்திவருகின்றது. இலங்கையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினைவிட *(PA)* ஐக்கிய தேசிய முன்னணி *(UNF)* அரசாங்கத்தின் காலத்தில் அமெரிக்க நலன் அதிகம் பாதுகாக்கப் பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மேற்கு சார்பான கொள்கை சுதந்திர இலங்கையின் ஆட்சியமைத்த டி.எஸ். சேனநாயக்கா அரசாங்கம் முதல் இன்றுவரை அமுலாக்கிவரும் கொள்கையாகும். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகனான ரணில் விக்கிரமசிங்கா மாமனாரின் கொள்ளையை அடியொற்றியே செயல்பட்டு வருகின்றார்.

இலங்கையை உலகமயப்படுத்தலில் ரணில் விக்கிரமசிங்கா காட்டும் தீவிரமான போக்குகளும் தெற்காசியாவுக்குள் இலங்கை முன்னோடி நாடு என்றவகையிலும் மேற்குலகத்திற்கு ரணில் நெருக்கமானவராக விளங்குகின்றார். ரணில் விக்கிரமசிங்கா டோக்கியோவில் நடந்த நிதிவழங்கல் மாகாநாட்டில், "பூகோள சந்தையில் இலங்கையின் தொழில் முயற்சிகளுக்கும் போட்டிபோட அனுமதிக்கத்தக்கதான சூழ்நிலை ஏற்படுத்துவது கட்டாயமானதாகும்." என்றார் அவர் பதவிக்குவந்த கையோடு சிங்கப்பூருக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது சிங்கப்பூரின் முன்னாள் பிரதமரும் சிங்கப்பூரின் சிற்பியுமான லீ-குவான்-யூவை பலமணிநேரம் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். சிங்கப்பூர் பூகோளமயப்படுத்தலில் பெற்றிருந்த அனுபவத்தினை ரணில் பகிர்ந்து கொண்டதுடன் லீ-குவான்-யூ வை பின்பற்றும் தென்னாசியராக சிங்கப்பூர் ஊடகங்களால் போற்றப்பட்டிருந்தார் ரணில் விக்கிரமசிங்கா.

ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் ஆட்சியிலிருந்தபோது தென்இலங்கையை பாரிய வெள்ளப்பெருக்கினால் அழிவுக்குள்ளாக்கியது. அப்போது அமெரிக்கா 467 மில்லியன் அமெரிக்க டொலரையும், நோர்வே 99 மில்லியன் அ.டெலரையும் அவசர உதவியாக வழங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவும் தனது பங்குக்கு தொழில்நுட்ப மற்றும் பொருள் உதவிகளை வழங்கியது. இதேபோன்று டோக்கியோ நிதிவழங்கல் மகாநாட்டிலும் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி இலங்கைக்கு கிடைப்பதற்கு அதிகம் உழைத்தவர் அமெரிக்காவின் முன்னாள் பிரதி வெளிவிவகார செயலாளரான றிச்சாட் ஆர்மிடோஜ் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது இலங்கை விஜயம் யாழ்ப்பாண வருகை என்பதெல்லாம் அமெரிக்க அரசின் நகர்வுகளில் வடிவங்களாக அரசியல் நோக்குனர் புரிந்துகொண்டிருப்பர். ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் பதவி ஏற்றபின்பு யாழ்ப்பாணத்திற்கு அவர் வருகை தந்த போது பலாலி விமானநிலையத்தில் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரத்திற்கான இராஜதந்திரி கிறிஸ்ரினா ரொக்காவை சந்தித்து பல மணிநேரம் உரையாடியது இலங்கையுடனான அமெரிக்க உறவின் வலுவைக் காட்டக்கூடிய ஓரம்சமாகும். ரணில்ஆட்சிக்காலம் வெளிப்படையாகவே அமெரிக்க செல்வாக்கு நிலவிய காலமாக விளங்கியது.

மேலும் ரணில் அரசாங்கத்தை கலைக்க திட்டமிட்ட ஜனாதிபதி குமாரதுங்கா மூன்று அமைச்சுக்களை முதலில் பறித்த போது ரணில் அமெரிக்காவில் இருந்தது மட்டுமன்றி ரணில்-புஷ் இணைந்து வெளியான புகைப்படம் அமெரிக்க-ரணில் உறவை கண்டுகொள்ள போதுமானது. அதனைக்காட்டி ஜனாதிபதியை மடக்கலாம் என்ற இறுமாப்புடனேயே ஆரவாரிப்பின்றி ரணில் இலங்கைக்கு வருகை தந்தார்.

ஆனால் களநிலவரம் ரணில் விக்கிரமசிங்காவிற்கு சாதகமாக அமையவில்லை. இருந்தபோதும் அமெரிக்கா முற்றாக இலங்கை விடயத்தை கைவிடவில்லை. அமெரிக்கா எப்போதும் நபர்களைவிட நாடுகளின் உறவுகளைவிட அமெரிக்க நலனில் அக்கறையாகவே செயல்படுவதை காணலாம். இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபிறகும் தனது உறவையும் கவனத்தையும் அமெரிக்கா முற்றாக கைவிடவில்லை. ஆனால் அமெரிக்கா விரும்புவது போல நகர்த்த முடியாத சூழல் இலங்கை அரசியலுக்குள் ஏற்பட்டுள்ளது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கத்தின் பலத்தினால் அல்ல பிராந்திய அரசான இந்தியாவின் தலையீட்டினால் ஏற்பட்ட குழப்பமாகும்.

**ஒஸ்லோ மகாநாடு**

இலங்கைக்கு நிதிவழங்கும் நாடுகளினதும், நிதிநிறுவனங்களின தும் ஆதரவைத் திரட்டும் முன்னோடி மகாநாடாக வோசிங்டன் மாநாடு ஏப்ரல் 14-15, 2003 இல் நடைபெற்றது. இதற்கு முதல் நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலும் நவம்பர் 25, 2002 இல் நிதிவழங்கு வதற்கான ஆதரவைப் பெறும் நோக்கில் ஒரு மகாநாடு நிகழ்ந்தது. இறுதியாக டோக்கியோவில் நடந்த நிதிவழங்கல் மகாநாட்டுக்கு முன்னோடியாகவே மேற்குறிப்பிட்ட மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டார். இம்மகாநாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டதுடன் ஆசிய - பசுபிக் வட்டகையிலிருந்து 37 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். வடஅமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளும் பங்குகெடுத்துக் கொண்டன. நோர்வேயின் வெளிவிவகார மந்திரி ஜோன் பீற்றர்சன் *(Jan Petersen)* நிகழ்வை ஆரம்பித்துவைத்ததோடு பிரதான உரையையும் ஆரம்பித்தார். அவரது உரையில் பினவரும் விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன.

"சர்வதேச சமூகம் வடக்கு கிழக்குக்கு அவசரமாக நிதியுதவியை செய்யவேண்டும். அதனால் சமாதானம் முன்னேற்றமடையும். நிரந்தர மான சமாதானத்தை கட்டாயம் ஏற்படுத்தவும் மக்கள் நாளாந்த வாழ்வில் சமாதானம் அவசியம் என்பதை உணர்ந்துள்ளனர். சர்வதேசத்தின் ஆதரவு இல்லாவிட்டால் அது அழிந்துவிடுமெனக் கருதுகின்றனர்" என்றார்.

அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கா குறிப்பிட்ட விடயத்தின் சாராம்சமாக பின்வரும் அம்சத்தை தெளிவாக அவதானிக்க முடிந்தது.

போரினால் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையின் பொருளா தாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியை கோரி நிற்கின்றோம். சர்வதேசத்தின் உதவியும் ஒத்துழைப்பும் தொடர்ச்சியாக கிடைக்காது போகுமாயின் சமாதானத்தையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களையோ மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்பட்டுவிடும். உறுதியான மீள் உருவாக்கத்தை சமாதான பேச்சுக்களில் ஏற்படுத்துவ துடன் சமாதான முன்னேற்றத்திற்கும் சர்வதேசத்தின் ஒத்துதுழைப்பு அவசியமானதாக உள்ளது.

கடந்த பதினெட்டு வருடங்களாக ஆயுத முரண்பாட்டினால் நாம் அதிகமான வலிகளை அனுபவித்துள்ளோம். ஆனால் கடந்த பத்து மாதங்களாக சமாதானத்தின் கனிகளை மக்கள் நன்றாகவே சுவைத்துள்ளனர். இலங்கை மக்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக உள்ளது. எமது எதிர்கால சந்ததியினருக்கு எந்த மாற்றுவழியுமின்றி, பயன்பாடுக்கான உபாயமுமின்றி நெருக்கடி மிக்க வாழ்வுக்குள் அகப்பட்டுள்ளனர். எப்படியாவது இலங்கையின் சமாதானத்தை நிரந்தரமான உதவிகளை வழங்கி காலதாமதமின்றி விரைவாக மீட்டெடுக்க வேண்டும்.

அமெரிக்க அரசின் பிரதி செயலாளர் ரிச்சட் ஆர்மிரோச் *(Richard Armitage)* சமாதான முன்னேற்றத்திற்கும் நல்லாட்சிக்கு அமெரிக்க அரசாங்கம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் என்றார். அவர் மேலும் நாம் விடுதலைப் புலிகளுக்கு அழைப்புவிடுகின்றோம். வனமுறையை கைவிடுங்கள் அல்லது வன்முறையிலிருந்து விலகுங்கள் என்று, அரசியல் தீர்வுக்கான பொறுப்பினை புலிகள் உருவாக்கவேண்டும். முரண்பாடு களை கைவிட்டு ஒரு இணக்கப்பட்டுக்கு வருதலே முழு சமாதானத்தின் அர்த்தமாகும். பயங்கரவாதத்திலிருந்தும், வன்முறையிலிருந்தும் புலிகள் விலகிவிட்டனர் என்பதை இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும். தனிநாட்டுக் கான ஆயுதப் போராட்டத்தையும் கைவிடவேண்டும் என்றார்.

இம்மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக கலந்து கொண்ட அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டவற்றில் முக்கியமானவற்றை பின்வருமாறு நோக்குவோம்.

- போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை விரைவாக வழங்க முன்வந்த சர்வதேச கொடையாளி நாடுகளுக்கு மதிப்பளிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடந்த ஒன்பது மாதங்களாக வடக்கு கிழக்கில் மிக மோசமான வன்முறைகளோ கொடுமையான போரோ நிகழவில்லை.

- சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான தூரநோக்கு சரியாக நகர்ப்பட்டாலும் பொதுமக்கள் அதிக நெருக்கடிகளையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். காரணம் அவசரமானதும் முதன்மையானதுமான மனிதாபிமான தேவைகளுக்கான வழங்கல் காலதாமதமாவதும் இல்லாமல் போவதுமேயாகும். தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிகழ்ந்த யுத்தம் தமிழ் மக்களின் வாழ்வையும் அவர்களின் மனிதத்தையும் தகர்த்துவிட்டது. இன்னுமே தமிழ் மக்கள் மனிதாபிமானத் தேவைகள் அவர்களிடம் சென்றடையவில்லை.

- இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடியைப்பற்றி கவனம் கொள்கிறதேயன்றி போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப்பற்றி அதிகம் கவனத்தில் கொள்ளாதது துரதிஷ்ட வசமானதே.

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் மிகத்தெளிவாகவே உரையாற்றி னார். ரணில் விக்கிரமசிங்காவும், ரிச்சட் ஆர்மிரோச்சும் ஆற்றிய உரைகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் அன்ரன் பாலசிங்கத்தின் உரை விளங்கியது. சர்வதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமெரிக்கரின் உரை விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கும் நடவடிக் கையாகவே அமைந்திருந்தது. அக்கருத்தினை ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளோ ஜப்பானியர்களோ எதிர்க்காது ஏற்றும் கொண்டதுடன் அதுவே சர்வதேசச் சமூகத்தின் உண்மையான தோற்றமாக இருந்தது. இலங்கை அரசாங்கத்தை தட்டிக் கொடுத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டிக் கொண்டு பலவீனமான நிலைக்குள் போராட்டத்தையும், தமிழ்மக்களின் நிலையையும் உருவாக்குவதே அவர்களின் உபாயமாகும்.

ஆனால் ஒஸ்லோ கொடையாளி மகாநாட்டில் விடுதலை புலிகள் கலந்து கொண்டமை, தமிழ் மக்கள் பற்றிய கருத்துக்களை அந்த மகாநாட்டில் குறிப்பிட முடிந்தமை என்பன எல்லாம் சிறப்பான ஆரம்பமாக அமைந்தது. அதுமட்டுமன்றி மகாநாட்டின் மறுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்த சந்திப்பில் சர்வதேச அரசாங்கங்கள் 70 மில்லியன் அமெரிக்க டெலரினை உடனடி மனிதாபிமான உதவிக்கு வழங்குவதாக உறுதி யளித்தனர். இம்மகாநாடு விடுதலைப்புலிகளுக்கு அதிக சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியதென்றே கூறலாம். இலங்கையின் சமாதானத்திற்கும் நிதிஉதவிக்கும் இடையிலான பிணைப்பினை சர்வதேச சமூகம் வலியுறுத்த முயன்ற மகாநாடாகக் கூட மதிப்பீடு செய்துகொள்ளலாம்.

குறிப்பாக சர்வதேச அரசியலில் பிரதான இடம்வகிக்கும் அதிகார அரசுகள் இலங்கையின் சமாதான அரசியலில் பங்கெடுத்துக் கொண்டமை. சிறப்பான அரசியல் பொருளாதார நகர்வாக அமைந்திருந்தது. அந்த நாடுகளின் பொருளாதார, புவிசார் அரசியல் நலன்களே *(Economic and Geo- Political Interst)* அத்தகைய ஈடுபாட்டுக்கு காரணமாக கொள்ளப்பட்டாலும் இதனால் இனப்பிரச்சனையானது அல்லது அதற்கான சமாதான தீர்வானது சர்வதேச மட்டத்தில் முதன்மைப்படுத்த உதவியது. இது மட்டுமன்றி இலங்கை வரலாற்றிலும், பிராந்திய அரசியலிலும் அபிவிருத்தி மீள்கட்டுமானம் என்பவற்றிலும் பல திருப்பங்களை ஏற்படுத்திய மகாநாடாக அமைந்திருந்தது.

**வோசிங்டன் மகாநாடு**

டோக்கியோ மகாநாட்டுக்கான பங்களிப்பினை அதிகரிப்பதற்காக ஏப்ரல் 14-15 ஆகிய திகதிகளில் அமெரிக்காவின் தலைநகரில் நிகழ்ந்த கொடையாளி மகாநாடே வோசிங்டன் மகாநாடென அழைக்கப்பட்டது. இம் மகாநாட்டில் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை கொண்ட பிரதான சர்வதேச நாடுகளும் அதன் அமைப்புக்களும் கலந்துகொண்டன. இலங்கை அரசாங்கமும் இம்மகாநாட்டில் அதிக ஆதிக்கம் செலுத்தும் போக்கு காணப்பட்டது.

ஆனால் பேச்சுக்களிலும் ஏனைய மகாநாடுகளிலும் இலங்கை அரசுக்கு சமமாக மதிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அழைக்கப்பட வில்லை என்பது பிரதான செய்தியாக அமைந்திருந்தது காரணம் அமெரிக்கா விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ளது. தடைசெய்துள்ள அமைப்புடன் அரசாங்கத்திற்கு சமமான முக்கியத்துவம் எப்படி வழங்குவதென கூறப்பட்டது. இது விடுதலைப்புலிகளின் ஜனநாயக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பணிக்கு அதிர்ச்சியான செய்தியாகவும் விளங்கியது.இது தொடர்பாக ஏப்ரல் 04 திகதி விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம், கிளிநொச்சியிலிருந்து ஓர் அறிக்கையை வெளியிட்டது.

வடக்கு கிழக்கை மீளக்கட்டமைப்பதற்கான வோசிங்டனில், ஏப்ரல் 14 இல் நடைபெறவுள்ள சர்வதேச மகாநாட்டில் விடுதலைப் புலிகளை விலக்கியுள்ளமை ஏமாற்றமளிக்கிறது. இனப்பிரச்சினைக் கான தீர்வில் முகவரராகவும் மத்தியஸ்தம் வகிப்பவருமான நோர்வே அரசாங்கம் ஏற்கனவே விடுதலைப்புலிகளையும் *(LTTE)* சிறிலங்கா அரசாங்கத்தையும் *(GOSL)* சமமான பங்காளர்களாக அங்கீகரித்துள்ளது.

மேலும் பலகட்டங்களாக சமாதான உரையாடல்களை நிகழ்த்தி யுள்ளதுடன் இணைப்பங்காளர்களாக வட- கிழக்குக்கான மீள்கட்டு மானம், மீளமைப்பு என்பனவற்றுக்கான சர்வதேச நிதி வழங்கும் நாடுகள் ஆதரவளித்துள்ளன. மீள்கட்டுமானம் உடனடி மனிதாபிமான தேவைகளுக்கான உபகுழுவில் சமத்துவமான பங்காளர்களாக அணுகியமை சுட்டிக்காட்டக்கூடிய அம்சமாகும். அதன்படி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த கொடையாளி மகாநாட்டில் *(November 25, 2002)* இருதரப்பும் சமத்துவமாக மதிக்கப்பட்டதுடன் அம்மகா நாட்டில் சர்வதேச கொடையாளி நாடுகள் யுத்தத்தால் பாதிப்படைந்த வடகிழக்கு தமிழ் பிரதேசத்திற்கான மீள்கட்டுமானத்திற்கான அதிக பங்களிப்பு ஜப்பானில் நடைபெறும் டோக்கியோ மகாநாட்டில் தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

அமெரிக்க மகாநாடு இலங்கை அரசாங்கத்தை முதன்மைப்படுத்தி விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தியிருப்பது சமபங்காளர் என்ற வலுவை பாதிப்பதாக உள்ளது. இது விடுதலை புலிகளையும் சிறிலங்கா அரசாங்கத்தையும் சமாதானப் பேச்சுக்களுக்கு எதிரானவர்களாக மாற்றுவதற்குரிய ஏற்படாகவும் அமைந்திருந்ததொன்றே கருத இடமுண்டு. மீளமைப்பும் சமாதானமும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் விடயம் என்பதை சர்வதேச நாடுகள் புலப்படுத்தியுள்ளன. அதனால் அமெரிக்காவில் நிகழும் மகாநாடு ஒரு பின்னடைவானதாகவே விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்புலிகளில்லாத வோசிங்டன் மகாநாடு தொடர்பான எதிர்பினை அரசாங்கத் தரப்பு கருத்தில் எடுக்கத் தவறியதனால் மீண்டும் ஒரு அறிக்கையினை ஏப்ரல் 12 திகதி விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

வோசிங்டன் மகாநாட்டுக்கான ஏற்பாட்டில் விடுதலைப்புலிகளை கலந்துகொள்ளாது தவிர்த்தமையால் டோக்கியோவில் நடைபெறவுள்ள கொடையாளிகளின் பிரதான மகாநாட்டையும் எதிர்க்கப் போவதாக விடுதலைப் புலிகள் முடிவெடுத்துள்ளனர் என்பதை பகிரங்கப்படுத்தினர்.

இருந்த போதும் வோசிங்டன் மகாநாடு உரிய காலத்தில் நடைபெற்றது. 21 நாடுகளின் இராஜதந்திரிகளும், 16 சர்வதேச அமைப்புக்களும் பங்கெடுத்துக் கொண்டதுடன் 3.5 மில்லியன் அ.டொலர் தேவை என்பதனை ஊடகங்களுடனான சந்திப்பில் சிறிலங்கா அரசாங்கம் மீள்கட்டுமானத்திற்கும், அபிவிருத்திக்குமாக விண்ணப்பித்திருந்தது. அம்மகாநாட்டில் உரையாற்றிய ரிச்சட் ஆர்மிரோஜ் *"Our Position is crystal clear the Liberation Tigers of Tamil Eelam must unequivocally renounce terrorism, in word and deed"* என்றார்.

**டோக்கியே மகாநாடு**

ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் இலங்கைக்கு நிதிவழங்கும் கொடையாளி நாடுகளுடனான சந்திப்பு 2003 யூன் 09-10 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இதற்கான பூர்வாங்க மகாநாடுகள் ஒஸ்லோவிலும், வோசிங்டனிலும் நடைபெற்றது. டோக்கியோ மகாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்கவில்லை என்பதுடன் பேச்சுவார்த்தைகளிலிருந்தும் விலகிக்கொள்வதாக புலிகள் தெரிவித்திருந்தனர். இதனால் டோக்கியோ மகாநாடு விடுதலைப்புலிகள் இன்றியதாக அமைந்திருந்ததுடன் பிரச்சனையின் பிரதான தரப்பின் பங்களிப்பின்றி அனேகவிடயங்களை சர்வதேச கொடையாளி நாடுகள் கையாள முடியாத நிலை ஏற்பட்டது. இருந்த போதும் டோக்கியோ மகாநாட்டில் அமைச்சர்கள் மட்டத்திலான நாடுகளின் பிரதிநிதிகளும், 22 சர்வதேச அமைப்புக்களும் கலந்து கொண்டன. ஜப்பானியப் பிரதமர் யுனிகிரோ கொசுமி *(Junichiro Koizumi)* இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாசியும் பிரதான பிரதிநிதிகளாகவும் பேச்சாளர்களாகவும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோக்கியோ மகாநாட்டின் இலக்குகள் வேறுபட்ட தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டமையை உணரமுடிந்தது. குறிப்பாக இலங்கையின் அபிவிருத்தியும் சமாதான முன்னேற்றமும் முதன்மை இலக்குகளாக இருந்தன. வட- கிழக்கு அபிவிருத்தி மட்டுமன்றி வட- கிழக்குக்கான நிர்வாக கட்டமைப்பின் *(Administrative Structure)* அவசியமும் உணரப்பட்டது. வட- கிழக்கில் பாதிக்கப்பட்ட முழுப் பிரதேசமும் மீளபுணரமைக்கப்பட்டதுடன் எல்லாச் சமூகங்களில் நலன்களையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும் என்ற கருத்தும் முன்மொழியப் பட்டது.

டோக்கியோ மகாநாட்டில் பங்கெடுத்த அனைத்து தரப்பும் ஆயுத முரண்பாட்டுக்கு சமாதான பூர்வமாக தீர்வுகாண வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியிருந்தனர். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பு *(Federal Structure)* முறைமையிலான சமாதான தீர்வினை சர்வதேச சமூகம் வலியுத்தியது. வடக்குக் கிழக்குக்கான மனிதாபிமான உதவிகள் முதன்மைப்படுத்தப்பட்டதுடன். பிரதேச வேறுபாடின்றி அபிவிருத்திக்கான *'Need Assesment'* பற்றியும் முன்மொழியப்பட்டது. இதில் *'Regaining Sri Lanka'* என்பதன அவசியத்தையும் நேநன *Assesment* இன் முக்கியத்துவத்தையும் மாநாட்டின் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருந்தனர்.

இம்மகாநாட்டின் முடிபில் கொடையாளி நாடுகளும், சர்வதேச நிதிவழங்கும் அமைப்புக்களும் 4.5 பில்லியன் அ.டொ 2003-2006 வரையான காலப்பகுதியில் வழங்குவதென தீர்மானித்தன. இதில் தொழில்நுட்பம் தொடர்பான உதவிகளையும் ஒன்றிணைந்திருந்தன. மேலும் இம்மகாநாடு சமாதானத்தின் உத்தரவாதத்தினை மேற்படி நிதி வழங்குவதற்கான உபாயத்தையும் உள்ளடக்கிய கருத்து நிலையை வலியுறுத்தியிருந்தன. சமாதானத்திற்கான முன்னேற்றத்தினை பொறுத்தே நிதிவழங்குவதென்ற நிலைப்பாட்டை சர்வதேச கொடையாளி நாடுகளும், நிதி நிறுவனங்களும் வெளிப்படுத்தின.

மேலும் நிதி கையாளுவதற்கான வாய்ப்புகள் பலவற்றை உறுதிப்படுத்த முயன்றதுடன் வட-கிழக்கு மீள்கட்டுமான நிதியம் *(North- East Reconstruction Fund- NERF)* விரிவாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் மகாநாடு வலியுத்தியதுடன் அதனை வரவேற்றிருந்தது. ஆனாலும் சர்வதேச, உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புக்களை வட-கிழக்கு மனிதாபிமான மற்றும் உதவிகளை மேற்கொள்ளவும், அவை ஏற்கனவே வடகிழக்கில் மேற்கொண்டுவரும் கருத்திட்டங்களை பயன்படுத்துவதெனவும் கூறப்பட்டது. எல்லாவற்றையும் நிர்வகிக்கும் பிரதான அமைப்பாக உலகவங்கி வடக்கு கிழக்குக்குரியவற்றை மேற்கொள்வதெனவும் மகாநாட்டில் கூறப்பட்டது.

சர்வதேச உதவி வழங்கும் நாடுகள் வறுமையை ஒளிக்கவும், நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் தனியார் மயப்படுத்தலை ஊக்குவிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியது. ஒஸ்லோப் பிரகடனத்தின் கீழ் தீர்வு எட்டப்படுவதற்கு சமாதான அணுகுமுறை அவசியமானதென்பது தெளிவுபடுத்தப்பட்டது. அவ்வாறே தீர்வுகாணப்படும் போது மனிதஉரிமை, ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பனவற்றுக்கு முதன்மை வழங்குவதும் வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச சமூகம் சமாதானத்திற்கு மிக நெருக்கமாகவும், நெருக்கடி ஏற்படாத வகையிலும் இரண்டு தரப்பும் நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்தியதுடன் அவற்றுக்கான பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென கோரியிருந்தது.

1. இருதரப்பாலும் போர்நிறுத்த உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

2. வட-கிழக்குக்கான அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகள் செயல்பூர்வமான விளைவுகளை தரவேண்டும்.

3. தாய்லாந்தில் நடந்த நான்காவது கட்டப் பேச்சுக்களின் உடன் பட்ட முஸ்லீம்களின் பங்குபற்றல் உறுதிப்படுத்த வேண்டும்.

4. சமகாலத்திலேயே ஒஸ்லோ பிரகடனத்திற்கு அடிப்படையில் இறுதி அரசியல் தீர்விற்கு தயாராக வேண்டும்.

5. ஆயுத முரண்பாட்டுக்கு இவ்விடயங்கள் தீர்வாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எல்லா மக்களது மனித உரிமைகளின் பாதுகாப்பினையும், சிறப்பான முன்னேற்றத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. சமாதான உருவாக்கத்தின் பால் சமத்துவத்தையும் *(Gender equity)* முரண்பாட்டுக்கான தீர்வுகளிலும், அத்தகைய முயற்சிகளுக்கான பிரதிநிதித்துவத்திலும் பெண்களுக்கான சமத்துவம் மற்றும் தீர்மான எடுப்பதில் அவர்களின் பங்கு என்பனவற்றையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

8. சிறுவர்களை *(Underage)* படையில் சேர்ப்பதனை தவிர்ப்பதுடன் சமூகத்தை மீளகட்டி எழுப்புவதற்கும், ஒன்றிணைப்பதற்கும் அவர்களை கண்காணிப்பாளர்கள் மூலம் விடுவிப்பதற்கும் *(Unicef- Action Plan)* யுனிசெப் இன் நடத்தைத்திட்டம் உதவியாக அமையும்.

9. மீளக்கட்டமைப்பதில் வடக்கு கிழக்கிலுள்ள போராளிகளையும் யுத்தத்தால் உடல், உளரீதியில் பாதிக்கப்பட்டவர்களையும் இணைத்துக்கொள்ளல் அவசியம்.

10. விடுதலைப்புலிகளும், இலங்கை அரசாங்கமும் தற்போதைய காலத்தில் உடன்பாட்டில் எட்டப்பட்டது போன்று இயல்பு வாழ்கைக்காக இராணுவத்தை விலக்கிக்கொள்வதும் இராணுவத்தைப் படிப்படியாகக் குறைப்பதுவும் நிகழ்வதுமட்டு மன்றி விடயத்திலுள்ள மீதிப்பகுதியையும் இருதரப்பும் நிறைவேற்றுதல் வேண்டும்.

இத்தகைய உத்தரவாதங்களையும், கட்டுப்பாடுகளையும் சமர்ப்பித்ததுடன் அவற்றை நிறைவேற்றும் முயற்சியில் முன்னேற்றம் காணும்பட்சத்தில் நிதி உதவிகளை வழங்க முடியுமென டோக்கியோ மகாநாடு தீர்மானித்தது. நோர்வே தொடர்ந்தும் மத்தியஸ்தம் பணியை மேற்கொள்வதுடன் ஐரோப்பிய யூனியன் அமெரிக்கா என்பனவற்றுடன் ஜப்பானும் இலங்கையின் சமாதான முயற்சிக்கான ஆலோசனையாளர்களாக விளங்குவதென மகாநாட்டில் முடிவு எட்டப்பட்டது.

டோக்கியோ மகாநாட்டில் அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரிட்சட் ஆர்மிடோஜ் ஆற்றிய உரையின் சில விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானத்திற்கு கொள்ளப்படுதல் வேண்டும். காரணம் விடுதலைப் புலிகள் டோக்கியோ மகாநாட்டில் கலந்துகொள்ளாத சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் அணுகுமுறை எப்படியானதென்பதை அவரது உரையி லிருந்து அறியமுடியும். சர்வதேச பொறிமுறையின் கொள்கைகளை வகுக்கும் பிரதான நாடுகளின் தலைமை நாடு அமெரிக்கா என்பதைக் கருத்தில் கொண்டே ஆர்மிடோஜ் உரை பரிசீலிக்கப்படுகின்றது. இலங்கை இனப்பிரச்சினையின் தீர்விலும், இலங்கைத் தீவின் உறுதிப்பாட்டிலும் அமெரிக்கவுக்கு அதிகமான பங்கு உண்டு என்பதை டோக்கியோவிலும் அது நிறுவத்தவறவில்லை. இவ் உரையில் இரண்டு பிரதான விடயத்தை ஆர்மிடோஜ் வெளிப்படுத்தினார்.

1. இனப்பிரச்சனைக்கான தீர்வில் எவ்வகையான விடயம் பற்றி அமெரிக்கா கருத்தூன்றி நிற்கிறது என்பதையும்

2. விடுதலைப்புலிகளை எச்சரிக்கைகளுக்கூடாக உரையாடல்களில் ஈடுபடவைப்பதாகவுமே, அவைஅமைந்திருந்தன.

முதலில் இனப்பிரச்சனைக்கான தீர்வில் சமஷ்டிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட உள்ளக சுயநிர்ணய உரிமையை முதன்மைப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டப்பட்டது. குறிப்பாக ஏற்கனவே முன்வைக்க திட்டமிட்டிருந்த இடைக்கால வரைபுபற்றிய அம்சம் உள்ளக சுயநிர்ணயத்தை சார்ந்த விதத்தில் உருவாக்கப்பட்ட வேண்டும். என்ற கருத்தினை ஆர்மிடோஜ் தனது உரையில் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

மேலும் இலங்கையின் அபிவிருத்தியோடும், இனப்பிரச்சினைக் கான தீர்வோடும் அமெரிக்காவுக்கு நீண்ட நெருக்கமுண்டு கடந்த சில ஆண்டுகளாக அது மேலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக இனமுரண் பாட்டை தீர்ப்பதற்காக டசின்கணக்கான கருத்திட்டங்களை அமெரிக்கா வடக்கு, கிழக்கு இலங்கை உட்பட இலங்கையின் முழுப் பிரதேசங்களிலும் மேற்கொண்டுவருகிறது. அந்தவகையில் நிலக் கண்ணிகளை அகற்றுதல், புதிய பாடசாலைகளை அமைத்தல், புதிய பிரிவுகளை உருவாக்குவதற்கான கருத்தமர்வுகளை ஆரம்பித்தல் என அமெரிக்க செயல்படுவதற்கென 54 மில்லியன் அ.டொ ஒதுக்கியிருக் கிறது என்றார். இவையாவும் மேலோட்டமாகவோ, அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலெழுந்தவாரியாகவோ நோக்கமுடியாது ஆழமாகவும் இவற்றின் உள்நோக்கங்களையும் விளங்கிக்கொள்ளுதல் அவசியமானது.

இரண்டாவது விடயம் பற்றி அவர் நீண்ட உரையையும், அதிக முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். குறிப்பாக விடுதலைப் புலிகளின் மனிதாபிமான உதவிகளைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் அதாவது அக்காலப்பகுதியில் தென்இலங்கை பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது விடுதலைப் புலிகளின் உடனடி உதவிக்கான நடவடிக் கையை விரைந்து வழங்கியிருந்தமையை நினைவுபடுத்திய ஆர்மிடேஜ் விடுதலைப் புலிகளிடம் தனிப்பட்ட கோரிக்கை ஒன்றை விடுத்ததோடு எச்சரிக்கைப்பாணியில் தனது உரையை நிகழ்த்தியிருந்தார்.

குறிப்பாக விடுதலைப் புலிகளே உங்கள் மக்கள் மத்தியிலும் முழு இலங்கை மக்கள் மத்தியிலும் சமாதான உரையாடலூடாகவே தீர்வை எட்டவிரும்புகிறீர்கள் என்பதை நிறுவுங்கள் அப்படியான சந்தர்ப்பத்தில் கொடையாளி நாடுகள் உங்களுக்கு உதவ முன்வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் அப்படியான சந்தர்ப்பத்துக்கு பின்பு பேச்சு மேசைக்கு வாருங்கள் என்றார்.

மேலும் அவர் குறிப்பிடும் போது விடுதலைப்புலிகளை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டுவருவதற்கு உந்துதலை கொடுத்து வருகி றோம். கடந்த ஏப்ரலில் (வோசிங்டன் மகாநாடு) நடந்த மகாநாட்டில் அவர்களை அனுமதிக்க முடியவில்லை. அந்தச்சூழல் மிக இறுக்கமாக இருந்தது. விடுதலைப் புலிகள் சிறந்த அமைப்பென்பதை அறிவோம். அவர்கள் தமது பிள்ளைகளை மனிதவெடிகுண்டுகளாக உருவாக்கு வதில் முன்னோடிகள் அந்தவழியூடாக உலகத்தை திருப்திப்படுத்த முடியாது.

இலங்கை சட்டத்தின் ஆட்சிக்கூடான அரசியல் வாழ்வைக் கொண்ட நாடு அதனையே உலகமும் விரும்புகின்றது. அமெரிக்கா விடுதலைப் புலிகள் சட்டரீதியாக ஆட்சியை அமைப்பது தேவையானதொன்றாக நம்புகிறது. குறைந்தது எங்கள் கண்களையாவது விடுதலைப் புலிகள் நம்பவேண்டும். இலங்கை அரசாங்கமும் பிரதமமந்திரியும் (ரணில் விக்கிரமசிங்க) கடும் பிரயத்தனத்தின் மத்தியில் இந்த மகாநாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கெடுத்துள்ளனர். இலங்கை முழுப்பிரதேசத்திற்குமான பொருளாதார அபிவிருத்தியில் கவனம் கொண்டிருக்கும் பிரதமர் முரண்பாட்டை சமாதானத்தினூடாக தீர்க்க முடியுமென்ற நம்பிக்கையோடு செயல்படு கின்றார். பலகட்சி ஜனநாயகத்தை உடைய இலங்கை அரசாங்கம் நெருக்கடிகளையும் கட்சிவேறுபாடுகளுக்கிடையில் தீர்வை எட்ட முயலுகின்றது. முழு இலங்கை மக்களும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விடுதலைப் புலிகள் எல்லோரும் சமாதானத்தை உத்தரவாதப்படுத் துங்கள் என்றார்.

அவரது உரையின் சாராம்சம் விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவருதற்காக இருந்தாலும் அதனை ஒரு மிரட்டல் கலந்த தொனியில் நிறைவேற்றுவதாகவே அமைந்திருந்தது. விடுதலைப் புலிகள் டோக்கியோ மகாநாட்டிலிருந்தும் பேச்சுக்களிலிருந்தும் விலகியிருப்பது சர்வதேசப் பொறிமுறையின் அட்டவணைக்கு பெரும் பிரச்சினையாகவும், சிக்கலாகவும் அமைந்திருந்தது. அதனை கருத்தில் நிறுத்தியிருந்த ஆட்மிடோஜ் தனது உரையை அதற்கேற்ற வகையில் நிகழ்த்தியிருந்தார்.

பொருளாதார அபிவிருத்தி என்ற சர்வதேச மாதிரிக்குள் விடுதலைப் புலிகளை அகப்படுத்த திட்டமிட்ட ஆர்மிடோஜ் அதன் முன்மொழிவு களை சாதகமாக்கி விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையை தகர்ப்பதுடன் விடுதலைப் புலிகளை அரசியல் சார்புடைய அமைப்பாக மாற்றும் முயற்சியிலும் ஈடுபாட்டைக் காட்டினார் உலகிலுள்ள அனேக விடுதலைப் போராட்டங்களை பொருளாதார அபிவிருத்தியை முன்வைத்து முறியடித்துள்ள வரலாற்றுப் பாடத்தை தமிழர் தாயகப் பகுதியிலும் விடுதலைப் புலிகள் மீதும் திணிக்கமுயன்றுள்ளமை அவரது உரையிலிருந்து புலப்படும் இன்னோர் அம்சமாகும்.

ஆர்மிடோசன் உரையை அடியொற்றியே இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் உரை அமைந்திருந்தது. அதனை விபரமாக ஆராய்வோம்.

நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதும் அபிவிருத்தி செய்வதையுமே பிரகடனமாகக் கொண்டுள்ளோம். இதுவே முதலாவதும் மிக முக்கியமானதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயமாகும். ஏனையவை அனைத்தும் பின்பு மேற்கொள்ளலாம். அல்லது மேற்கொள்ள முடியும் இலங்கை மக்களுக்கான அரசாங்கம் சமாதான முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையுமே நோக்காகக் கொண்டுள்ளது. சமாதானத்தின் இலக்கை அடைய வைப்பதுவும் இப்பயணத்தை பூர்த்தி செய்வதிலும் பங்காளிகளான கொடையாளி நாடுகளான உங்களிடமே தங்கியுள்ளது.

1. டோக்கியோவில் தற்போது திட்டமிட்ட செயல்பணிக்கான முயற்சி உங்களது பங்கு பற்றலைக் காட்டுகின்றது. (ஏற்கனவே ஒஸ்லோவில் போடப்பட்ட செயல்பணிக்கான திட்டமிடல் டோக்கியோவில் மாறியுள்ளது என்பதை ரணில் கோடிட்டுக் காட்டியிருந்தார்)

2. இலங்கையின் பணிநிர்வாக அமைப்பில் ஏற்பட்டுள்ள தடங்கல் களையும் தாமதங்களையும் தகர்த்து பயனுள்ள அதிவேகமான ஆக்கப்பணியமைப்பை உருவாக்க வேண்டும்.

3. தொடர்ச்சியாக சமாதானத்திலும் அபிவிருத்தியிலும் ஈடுபாடு காட்டுதல் வேண்டும்.

4. இலங்கையின் சமாதான முன்னேற்றத்திற்கு உலகளாவிய ஆதரவை திரட்டவேண்டும் என்றார் பிரதமர்.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவின் முழுமையான உரையிலும் பொருளாதார அபிவிருத்திக்கான ஏற்பாடும் அதற்கான மேற்குலகின் ஆதரவும் தொனிப்பொருளாக இருந்தது இலங்கைக்கு அவசியமானதும், தந்திரமான இலக்காகவும் இலங்கையை மீளமைப்பது அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார். சமாதானத்தின் இலக்கு முழு இலங்கை மக்களின் பாதுகாப்பையும் இறையாண்மையையும் தனித்துவத்தையும் உருவாக்குவது என டோக்கியே மகாநாட்டின் உரையில் ரணில் வெளிப்படுத்தியிருந்தார்.

டோக்கியோ மகாநாட்டின் போது *Mou* எட்டப்பட்டு 15 மாதங்கள் நிறைவுற்ற நிலையில் டோக்கியோ மகாநாடு நடைபெற்றது. அம்மகாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைவிட திட்டமிட்டு தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை தமிழ் - ஆங்கில ஊடகங்கள் வாயிலாக தெரியவந்தது. இருந்தபோதும் அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளாதற்கு பதிலளித்த விடுதலைப்புலிகள் பின்வருமாறு தமது உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட்டனர்.

கொழும்பு அரசாங்கம் மத்தியத்தர்களையும் அவர்கள் சார்ந்த சர்வதேசத்தையும் சேர்த்துக்கொண்ட ஒரு தந்திரமான கூட்டை உருவாக்கி விடுதலைப்புலிகளை ஏமாற்றமடைய முயற்சிக்கின்றது. இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. ரணில் விக்கிரமசிங்கா முன்வைத்த பிராந்திய நிர்வாகக் கட்டமைப்பு *(Provisional Administarative Structure)* கடந்தகாலங்களில் முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக உள்ளது என்பதுடன், புதிய சொற்பதமாகவே *PAS* அமைந்துள்ளது. அதில் புதியதாக ஏதுவுமில்லை. *Apex Council,* க்கு ஒப்பானதாகவே *PAS* அமைந்துள்ளது. நிர்வாகக் கட்டமைப்பில் தமிழர்களின் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழர்களை அங்கீகரித்தல் என்பவற்றுக்கு இணையான ஓர் அரசாங்கத்தை இடைக்கால தன்னாட்சி மூலமான இறுதி தீர்வொன்றை இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகள் முன்வைக்கும் வரைபுக் கமைய ஏற்படுத்ததும் என்ற எதிர்பார்க்கை மாறாக சாத்தியப்படாத இலக்கை பற்றிய நடவடிக்கை ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அண்மையில் சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பை *(International Safety Net)* உருவாக்கிக் கொண்டு நாட்டின் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முயற்சிக்கிறது.

**முடிவுரை**

விடுதலைப்புலிகள் முறைப்படி டோக்கியோ மகாநாட்டில் கலந்து கொள்ளமையினால் டோக்கியோ பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதில் சாத்தியமில்லை என்பதை தெளிவுபடுத்துவதாக அறிக்கையின் சாரம் அமைந்திருந்தது. இதனால் மீளவும் போர் ஏற்பட்டது. போரில் விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டமும் முடிபுக்கு வந்தது. ஏறக்குறைய பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் போன்று ஈழவிடுதலைப்போராட்டமும் முடிபுக்கு வந்தது.பாலஸ்தீன மக்களுக்கு கிடைத்தளவு அங்கீகாரம் கூட தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை என்பது இன்றுள்ள விமர்சனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிய நூல்கள்


1. *Patrick Mendis,Sri Lanka plays Geopolitics Games with China,India, and United States,Colombo page,August 10,2012.*

2. *A.J.Wilson; The Breaking –up-of Sri Lanka, The Sinhalese –Tamil conflict, London 1988.*

3. *Rnjan Philips (Ed) Sri Lanka global challenges and national crises, Economical institute of study on Diologue and Socal Scientist Association, 2001.*

4. *Sunil Bastian; The politics of foreign aid in Sri Lanka, promoting markets supporting peace. ICES Colombo, 2007.*

5. *Jadave Uyangoda; Beyond Negotiations; Towards Transformative Peace in Sri Lanka ,Colombo,2001.*

6. *John Gooneratne; Negotiating with the Tigers (LTTE) 2002 – 2005. A Stamford Lake publication 2007.*

7. *Camilla Orjuela,. Sunil.Bastian, Sepali Kottegoda,.&,Jayadeva Uyangoda.(Ed),Power and politics, in the Shadow of Sri Lanka's arms conflict.SIDA Studies, Colombo No.25, 2010.*

8. *Sergei.,De Silva. Ranasinhe " Another Bead in the "String of Pearls"?*

   *Interpreting Sri Lanka's Foreign Policy Realignment", Journal of China Security, Issue 19, pp. 57-67,2011 World Security Institute.*

9. *Saman,Kelegama.South Asian Regionalismand Sri Lanka,Social science Association,2001.*

10. *Jonas .Lindberg, Camilla. Orjuela, Seimon .Wezeman, And Linda. Akerstrom, (Ed) Arms Trade with Sri Lanka, Global Business Local Costs, Swedish Peace and Arbitration Society, 2011.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான
# இந்திய – சீன போட்டி
## ஓர் மதிப்பீடு

### அறிமுகம்

இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து *(The Pearl of the Indian Ocean)* என ஜவகர்லால் நேருவால் அழைக்கப்பட்ட தீவாகும். இந்து சமுத்திரத்தின் மத்தியிலும், இந்தியாவிற்கு தெற்கேயும் மிக அண்மை யிலும் அமைந்திருக்கும் இலங்கை உலக அரசுகளால் இலகுவில் கவரக்கூடிய கேந்திர முக்கியத்துவத்தில் காணப்படுகின்றது. இலங்கைத்தீவின் வரலாறு முழுவதும், அந்நிய சக்திகளின் தலையீடும், ஊடுருவலும் தவிர்க்கமுடியாத அரசியல், பொருளாதார, கலாசார கட்டமைப்பினைத் தந்துள்ளது. பாரிய வலுவான பிராந்திய சக்திகளை யும், சர்வதேச சக்திகளையும் கையாளும் வல்லமை இலங்கைத் தீவின் அரசியல் தலைமைகளுக்கும், மக்களுக்கும் இயல்பான பரிணாமமாக உள்ளது. இதில் மிக நீண்டகாலம் ஐரோப்பியரும், இந்தியர்களும் மாறி மாறிக் கையாளும் களத்தை இருபதாம் நூற்றாண்டு முடியும்வரை காணமுடிந்தது. இருபத்தியோராம் நூற்றாண்டில் அக்களம் இந்தியரிடமும், சீனரிடமுமாகமாறியுள்ளது. இந்த மாற்றத்தை அளவிடுவதுடன் இருதரப்பிலும் வெற்றிபெற முனைப்புக் காட்டும் சக்தியை மதிப்பிடுவதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

இரு நாடுகளதும் செல்வாக்கின் வளர்ச்சிக்கட்டங்கள்.

### இந்தியா-இலங்கை நட்பு

சுதந்திர இலங்கைக்கு முற்பட்ட காலத்தில் இந்தியர்கள் இலங்கைத்தீவில் இன, மத, மொழி அடங்கிய பண்பாட்டுத் தளத்திலும், படையெடுப்புக்கள் மூலமும் நேரடியான செல்வாக்கைச் செலுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர்.[1] பொருளாதார முகவர்களாகவும், முதலீட்டாளர்களாகவும் இலங்கைத்தீவை ஆளுகை செய்த இந்தியர்களின் செல்வாக்கு[2] ஐரோப்பியரது வருகையைத் தொடர்ந்து நெருக்கடிக்குட்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது. ஐரோப்பியர் இலங்கைத் தீவை இந்தியாவி லிருந்து தனித்தியங்கவும், இந்தியாவுக்கான பாதுகாப்பு அரணாகவும் கையாண்டு வந்தனர்.[3] ஐரோப்பியரின் பிரித்தாளும் தந்திரம் இலங்கைத் தீவின் ஆட்சியாளரின் மாற்றீடு பற்றிய அரசியல் பரிபாலனத்தை ஆரம்பிக்க உதவியது. இந்தியர்களுக்கு மாறீடாக மேற்குலகுடன் பலமான உறவு வளர ஆரம்பித்தது. இதனால் இந்தியா கட்டற்ற உபாயங்களைக் கையாள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. இது அரசியலாகி, பொருளாதாரமாகி, இராணுவ வாதமாகப் பரிணாமம் எடுத்தது. சுதந்திரத்திற்கு பின்பு இந்தியாவின் இலங்கைத்தீவு பொறுத்த அணுகுமுறை தீவிரம் பெற்றது.

சுதந்திர இலங்கை பிரித்தானிய சார்புப் போக்கினைக் கடைப் பிடிக்க எடுத்த முடிவினால் இந்தியாவின் நேரடியான அவதானிப்புக்குள் இலங்கைத்தீவு மாறியது. இலங்கைத் தீவிலிருந்த இனங்களுடன் இந்தியாவுக்கிருந்த உறவானது இலங்கை - இந்திய உறவை தீர்மானித்தது. இலங்கைத் தீவில் அடையாளப்படுத்தப்பட்ட இனங்களை அடிப்படை யாகக் கொண்டு இந்தியாவின் செல்வாக்குக் கலாசாரத்திலும் ஏனைய அரசியல், பொருளாதார, இராணுவ அம்சங்களிலும் வளர்ந்தது. இதனை மிகச்சுருக்கமாக நோக்குவோம்.

- இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை இந்தியாவுடன் இணைந்தி ருக்க வேண்டும் என்ற கருத்தினை ஜவகர்லால் நேரு முதல் பட்டாபி சீதாராமையா வரை கொண்டிருந்தனர்.[4] கட்சி வேறு பாடின்றி தேசிய அடையாள வேறுபாடின்றி இந்தியத் தலைவர் கள் அனைவரும், அக்கொள்கையை வலியுறுத்தினர்.

- 1947 - 1948இல் டி. எஸ் சேனநாயக்கா - நேரு பேச்சுவார்த்தை, 1953இல் டட்லி சேனநாயக்கா - நேரு பேச்சு, 1954 ஜனவரி, அக்டோபர் காலங்களில் கொத்தலாவல - நேரு உடன்படிக்கை யாகப் பரிணாமம் எடுத்தது.[5] இது இலங்கை இந்திய வம்சாவழியினர் பிரச்சினை என்பதைக் கவனத்தில் கொள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். 1964இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மிக முக்கியமான பதிவாக அமைந்தது. 1971இல் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்க இந்திய இராணுவம் வருகை தந்தமை குறிப்பிடத்தக்க இராணுவப்பரிமாணமாக அமைந்தது.

- 1974இல் கச்சதீவு தொடர்பாக எட்டப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை[6] இந்திய செல்வாக்கை மேலும் உயர்வான நிலைக்குக் கொண்டு சென்றது.

- 1977களுக்குப் பின்பு ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்ட வளர்ச்சியும், தீர்வு முயற்சிகளிலும் இந்தியா அதீத செல்வாக்குச் செலுத்தியது. திம்புப் பேச்சுவார்த்தை, இணைப்பு "சீ", இலங்கை மீதான உணவுப் பொட்டலங்களை விமானமூலம் வீசியமை, இறுதியில் இலங்கை - இந்திய உடன்படிக்கை[7] என பல அம்சங்களில் நேரடியாகக் கவனம் செலுத்தியது.

- இலங்கை - இந்திய உடன்படிக்கைகளில் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த கடிதப் பரிமாற்றத்தில் திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தை இந்தியாவின் அனுமதியின்றி இலங்கை எந்த[8] அரசுக்கும் கைமாற்ற முடியாதென்பது இந்தியாவின் செல்வாக்கின் உச்ச எல்லையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

- அவ்வாறே விடுதலைப் புலிகளுடனான போரும் போருக்குரிய ஆயுத தளபாட, பயிற்சி மற்றும் புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்களை வழங்கியதில் இந்தியாவின் செல்வாக்கு முக்கியம் வகித்தது. இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முழு ஒத்துழைப்பினையும் இந்தியா வழங்கியது.[9] அவ்வாறே புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நிகழ்ந்த பேச்சுவார்த்தையிலும்[10] இந்தியாவின் செல்வாக்கு காணப்பட்டது.

- போர் முடிவடைந்த நிலையிலும் வடகிழக்கு பிரதேசத்தின் மீள்கட்டுமானத்திலும், அபிவிருத்தியிலும் அரசியலிலும் இந்தியாவுக்கு அதிக பங்கு உண்டு என்பதனை அவதானிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. குறிப்பாக மீள்குடியேற்றத்திற்கான வீடுகள் அமைக்கும் திட்டம், பெருந்தெருக்கள், ரயில்சேவைக்கான பாதை அமைப்பது, காங்கேசன்துறை பலாலி போன்ற துறைமுக அபிவிருத்தி எண்ணெய் அகழ்வுக்கான கருத்திட்டம்[11] என பல்வேறு விடயங்களில் இந்தியாவின் பங்கு முக்கியமானதாக உள்ளது.

இந்தியா அரசியல் மாற்றங்களிலும் நடைமுறையில் ஏற்படும் நெருக்கடிகளை தீர்ப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இலங்கை அரசாங்கம் மீதான போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை இந்தியா இலங்கையை பாதுகாப்பதுடன் தமிழர் தரப்பில் எழுந்துள்ள தீர்வு பற்றிய விடயங்களில் கரிசனை காட்டுவது[12] போல் செயல்பட்டு வருகின்றது.

எனவே இலங்கையின் அரசியல் பொருளதார, கலாசார, இராணுவ விவகாரங்களில் மிக நீண்ட காலமாக இந்தியா கவனமும் கரிசனையும் எடுத்து வருகிறது. புவிசார் அரசியலில் இந்தியாவின் பங்கு மேலானதாக உள்ளது. இலங்கை ஒரு தனியரசாகியபோதும் இந்தியாவின் பாதுகாப்பு வலயத்தில் மிக முக்கிய பிரதேசத்தில் காணப்படுவதனால் இந்தியாவின் முக்கியத்துவம் அதீதமானதாக காணப்படுகிறது.

### சீனா-இலங்கை உறவு

அபிவிருத்தி அரசியலில் நாடுகளுக்கு இடையில் நிகழும் உறவு மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. சீனா 1949ஆம் ஆண்டு புரட்சியை வென்று சோஸலிஸ நாடாக மாவோ-சே-துங்கினால் அடையாளப்படுத்தப்பட்டது. இலங்கையின் சுதந்திரமும் சீனாவின் புரட்சியும் அடுத்தடுத்து அமைந்தமை வரலாற்றில் இரு நாடுகளுக்குமான உறவை பலப்படுத்த உதவியது. இலங்கை ஆட்சியாளர்கள் பதிலீடு என்ற அம்சத்தில் பெரிய இந்தியாவை எதிர்கொள்ள பெரியசீனாவை பயன்படுத்திக் கொண்டது மட்டுமன்றி தற்போதைய (2011) இலங்கை அரசாங்கம் இந்தியாவைப்போல ஒரு நாடு சீனா என்ற நிலையை முன்னெடுத்துவருகிறது. சீனா பொருளாதார அடிப்படையில் கடந்த தசாப்தம் முழுவதும் ஏறக்குறைய 10.32 சதவீத வளர்ச்சியை காட்டி வருவது[13] மட்டுமன்றி 2030 இல் உலகில் முதல்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சியடைந்த நாடாக மாறிவிடும் என்ற உலக வங்கியின் கணிப்பீடு சீனாவை நோக்கிய இலங்கையின் உறவுக்கு வலுச்சேர்க்கும் காரணியாக உள்ளது. அந்த வகையில் இலங்கை மீதான சீனச் செல்வாக்கின் வளர்ச்சிக் கட்டத்தை அவதானிப்போம்.

- *1948-1956* காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 1952ஆம் ஆண்டு சீனாவுடன் மிக முக்கிய உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டது. அரிசி - றப்பர் *(Rubber-Rice Agreement)* உடன்படிக்கை.[14] மிகப் பிரதான உறவின் அடிப்படையானது. இவ் உடன்படிக்கை ஐந்து வருடத்திற்கொரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டிருந்தது.

- *1956-1965* காலப்பகுதி சிறிலங்கா சுதந்திர கட்சி அரசாங்கமும் சீனாவுடனான இராஜதந்திர உறவை *(Diplomatic Relations)* 1957ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ஏற்படுத்திக் கொண்டது. பரஸ்பரம் தூதரகங்களை நிறுவித் தூதுவர்களை அமர்த்திக் கொண்டதில் நெருக்கமான உறவு பலமடைய ஆரம்பித்தது.[15] இலங்கை *"One China"* என்ற கொள்கையை ஆதரித்ததுடன் அரசியல், பொருளாதார, வர்த்தக உறவைப் பலப்படுத்தியது. இக்காலப்பகுதியில் குறிப்பாக 1958இல் சீனப் பிரதமர் இலங்கை வருகை, 1963இல் இலங்கைப் பிரதமர் சீனா விஜயம், 1964இல் மீள சீனப்பிரதமர் இலங்கை வருகை வரலாற்றின் மிக முக்கிய மான திருப்பமாக அமைந்திருந்தது. இலங்கைப் பிரதமரின் சீன விஜயம் குறிப்பிட்ட விடயங்களில் இரு நாட்டுக்குமான நெருக்கம் அதிகரித்தது. கொழும்புத்திட்டம் *(Colombo Plan)* பற்றிய விளக்கமளித்ததுடன் அதற்கான ஆதரவைச் சீனாவிடம் பெற்றுக் கொண்டமை, திருகோணமலை துறைமுகத்தினைச் சீன வர்த்தகத்திற்காக இலங்கை உடன்பட்ட ஒப்பந்தமொன்றி னைக் "கடல் கொள்கை" என்ற கருப்பொருளில் கைச்சாத்திடப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *1970 - 1977ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி சீனாவின் செல்வாக்கு இடமளிக்கும் விதத்தில் செயற்பட்டது.*

இந்துசமுத்திரப் பிராந்தியத்தினை அமைதி வலயமாக்குவதற்கான இலங்கையின் பிரேரணையை சீனா உடன்படிக்கையாக ஆதரித்தமை.[16]

1971ஆம் ஆண்டு ஜனதா விமுக்திப் பெரமுனவின் கிளர்ச்சியை அடக்கச் சீனா தனது கப்பலை கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பியமை.[17]

1972ஆம் அண்டு இலங்கைப் பிரதமர் சீனாவுக்கு விஜயம் செய்தமை.

1976ஆம் ஆண்டுக்குப் பின்பு சீனா இலங்கையின் மிகப் பெரும் கூட்டாளியாக மாறியமை.

மீளப்பெறப்படாத 265 மில்லியன் ரூபா விவசாயக் கடன் வழங்கியமை.[18]

ஐந்து அதிவேக கடற்படைக்கான இயந்திரப் படகுகளை வழங்கியமை.[19]

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் *(BMICH)* கட்டுவதற்கு 35 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியமை.[20] போன்ற வரலாற்று முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணியது. குறிப்பாக இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் அமைதியை பேணுவதும், இலங்கை இனப் பிரச்சினையைப் பொறுத்து இந்தியாவின் நிலைப்பாட்டினை நிராகரிப்பதற்காக சீனாவுடன் உறவை மேம்படுத்தலும் அதற்காக 1983இல் இலங்கையின் விசேட தூதுவர் ஹக்டர் ஜெயவர்த்தனாவை சீனாவுக்கு அனுப்பியதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை அடுத்து 1984இல் 3000 தொன் நிறையுடைய *Guided* ஏவுகணைகளையும் சீனக் கடற்படைக்கப்பல் மூலம் பரிமாற்றியமையும்,[21] சிறிய ஆயுத தளபாடங்களை இலங்கை தருவித்தமையும் முக்கிய திருப்பமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 1986 மார்ச்சில் சீன ஜனாதிபதி லீ இலங்கைக்கு வருகை தந்தமையும் 1987இல் ரணில் விக்கிரமசிங்கா சீனாவுக்கு அரசமுறைப் பயணம் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் *Jian -07* ஜெற் விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், *JY – 11 3D* விமான ராடர்களும்[22] சீனா வழங்கியதுடன் ஆண்டுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரினை இலங்கைக்கு ஆயுதத் தளபாடக் கொள்வனவுக்கு வழங்குவதாக முன்வந்தது.

சீனாவுடனான உறவுபற்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்ற உரையாடலின் போது,

"இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவு பொருளாதார, இராணுவ மட்டத்தால் பாரம்பரியம் மிக்கது. தேசிய பொருளாதாரத்துடன் தேசிய அபிவிருத்தியிலும் சீனாவின் உதவிகள் இலங்கைக்கு மிக நீண்ட காலமாகக் கிடைத்து வந்தது. இலங்கையில் நிகழும் சமாதான நடைமுறைகளில் தலைமைத்துவத்தையும், முக்கியத்துவத்தையும் சீன அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதுடன் சீனாவின் ஆதரவினை எமது அரசாங்கம் கோரியிருக்கின்றது".[23]

மேலும் சீனாவின் ஆதரவு என்பது இலங்கையின் பொருளாதார அடிப்படையில் மட்டுமன்றி இராணுவம் மற்றும் ஆயுத தளபாட விடயங்களிலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் சர்வதேச மட்டத்தால் எழும் மனித உரிமை தொடர்பான சர்ச்சைகளிலும் இலங்கைக்கான உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு அதீத பங்காற்றும் நாடாக சீனா விளங்குகின்றது. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த பிற்பாடு சீனாவுக்கும் இலங்கைக்குமான உறவு மேலும் பலமடைந்துள்ளது.

- இலங்கையில் ஜனாதிபதி அரசமுறை காரணமாக 2012 வரை எட்டுத் தடவை சீனாவிற்கு விஜயம் செய்தார்.
- சீனாவின் "முத்துமாலை" கடல் கொள்கைக்கு இசைவாக அம்பாந்தோட்டைத் துறைமுக விருத்தியை சீனா இலங்கைக்கு 90% மான முதலீடுகளை முன்வைத்து செயற்படுத்தி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சீனாவின் அனுசரணையுடன் புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கான திட்டமிடல்களை மேற்கொண்டு வருகின்றது.
- பண்டாரநாயக்கா ஞாபகார்த்த *BMICH* மீளச் சீரமைப்பதற்கான நிதிஉதவிகளையும், கட்டுமானப் பணிகளையும் சீனா மேற்கொண்டு வருகின்றது.
- மன்னாரில் காணப்படும் எண்ணை வளத்தினை ஆய்வு செய்யவும், அவற்றின் உரிமத்தினை அனுபவிக்கவும், சீனாவிற்கு உரிமை அல்லது பங்குண்டு என்பதனை எட்டபட்ட உடன்படிக் கைகளில் கைச்சாத்திட்டுள்ளமை.
- பாரிய கிராம அபிவிருத்திக்கான கருத்திட்டங்களைச் சுதந்திர வலயங்களாக வகைப்படுத்தி சீனாவிற்கு வழங்கியுள்ளமை
- வடக்குக் கிழக்குப் பகுதிகளின் மீள்கட்டுமானத்திற்கான கருத்திட்டங்களைக் கையளித்தமை.
- அம்பாந்தோட்டையில் இருந்து கிழக்கு மாகாணம் ஊடாக பலாலி வரையான தரைப்பாதை அமைப்பதற்கான கருத்திட்டங் களை வரைந்தமை.
- சீனாவிற்குச் சார்புடைய நாடுகளோடும் மிக நெருக்கமான அயல் உறவுக் கொள்கைகளை வகுத்துள்ளமையும், இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கினைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

**முடிவுரை**

எனவே இரு நாடுகளதும் இலங்கை மீதான செல்வாக்குப் போட்டித் தன்மைக்குரியதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளும் இணைந்து உலகில் அரைவாசிக்கு மேற்பட்ட சனத்தொகை யினைக் கொண்டிருப்பதுடன் வேகமாகப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் நாடுகள் என்ற நிலையை எட்டியுள்ளன. இந்தியாவைவிட சீனா ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றிருப்பதுடன் சர்வதேச பொருளாதார நிலையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இறுக்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்டமைப்பையும், அரசியல் உறுதிப்பாட்டையும், உலகளாவிய சந்தைப் பரம்பலையும் கொண்டிருக்கின்றது. மேலும் இலங்கையில் BMICH, அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானம் மற்றும் பாரிய உதவிகளையும், ஒத்துழைப்பினையும் நல்கும் நாடு என்ற வகையில், பிரதான இடம்பிடித்துள்ளது.

இந்தியா உலகளாவியரீதியில் சீனாவுக்கு அடுத்தடுத்த நிலையில் இருப்பதுடன் அரசியல் உறுதிப்பாடின்மை, உள்நாட்டுக் கட்டுமானத்தில் பலவீனம், சமூக, இன உணர்வுகளில் போட்டித்தன்மை, பழங்குடி வாழ்க்கை முறைமையை அதிகம் பேணுவது எனப் பாரிய பாதகமான நிலையை எட்டியிருக்கிறது. இந்தியாவின் இலங்கை மீதான அழுத்தங்களும், படையெடுப்புக்களும், அழிவுகளை தந்துள்ள நாடு என்ற பதிவை இலங்கை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. இது சிங்கள அரசியல் தலைவர்களிடமும் சிங்கள தேசிய வாதிகளிடமும் அதிகமாக காணப்படுகின்றது. 1971, 1987 ஆண்டுகளிலும் 2009 மே நடவடிக்கையும் அரசியல் மட்டத்திலும், இராணுவ மட்டத்திலும், பொருளாதார அடிப்படையிலும் பாதகமான நிலையை எட்டியுள்ளது. எனவே இந்தியாவின் புவிசார் அரசியல் செல்வாக்கைக் காட்டிலும் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் மிகத் தீவிரமாக வளர்ந்துள்ளமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

### அடிக்குறிப்புகள்

1. *V.L.B.Mendis; Foreign Relations of Sri Lanka from earliest times to 1965, Dehiwela, 1983 , P.24.*
2. *Shelton.U. Kodikara, Indo-Ceylon relations since independence, Colombo . 1965, P,34-35.*
3. *Ibid .P.36.*
4. *HSS Nissanlea International Relations and Geo-Politics, Vikas Publishing House Pvt Ltd. 1997, P.89-90.*
5. *Ibid*
6. *Shelton.U. Kodikara.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. *S.U.Kodikara,(Ed), Indo-Lankan Agreement of July 1987, University of Colombo, 1989, P5-7.*

8. *Ibid, Annex Page. 2.2* இல் "திருகோணமலை மற்றும் ஸ்ரீலங்காவின் இதர துறை முகங்கள் இந்தியாவின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் எந்த ஒரு நாட்டின் இராணுவ வசதி களுக்காகவும் அளிக்கப்படமாட்டாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. *Ministry of External Affairs Brief of Indo-Lanka Relations , http/ meaindianki.*

10. *Ibid.*

11. *Lasanda Kurukjulasuriya; Indo-Lanka Relations – a grave of Chinese Checkers. www Srilankannews .com/html.*

12. *N.Suryanarayan, Explaing Chgina's Growing influence in Sri Lanka. wwww.asiastudies.org/index.php.*

13. *Ibid.*

14. *Ibid.*

15. *Ibid.*

16. *HSS Nissanka, International Relations and Geo-Politics , Vikas Publishing House Pvt. Ltd, 1997, P90-91.*

17. *Ibid.*

18. *Ibid.*

19. *Ibid.*

20. *N.Surianarayan, op.cit.*

21. *Ibid.*

22. *Hansard Government Publication 25 November 2002, P. 1374.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்குப் பிந்திய இலங்கை –சீன உறவு ஓர் நோக்கு

## அறிமுகம்

போருக்குப் பின்பான இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெறவேண்டிய நிலையை எதிர்நோக்கியுள்ளது. போரினால் பாதிக்கப் பட்ட இலங்கை மிக மோசமான பொருளாதாரப் பாய்ச்சலை ஏற்படுத்துவது நாட்டின் சுபீட்சத்திற்கு அவசியமானது. ஆனால் இன்றைய உலகப் பொருளாதாரம் நாடுகளின் எல்லைகளுக்குள்ளும், கொள்கைகளுக் குள்ளும் இல்லாதனவையாக விளங்குகின்றது. உலகப்பொருளாதார வளர்ச்சிப்போக்கில் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளதாக, சர்வதேச மட்டத்தில் வெளிவரும் ஆய்வுகள் உணர்த்துகின்றன[1] உலகத்தில் சீனாவின் பொருளாதார பங்கு அதிகரித்திருப்பதுடன் சீனாவிடம் கடன் வாங்கும் நிலையில் அமெரிக்கப் பொருளாதாரம் நெருக்கடிக்குள் அகப்பட்டிருப்பதென்பதுவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதனால் இலங்கை சீன சார்புப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துவது முன்னோடியான நடவடிக்கையாக அமைய வாய்ப்பு உண்டென்பது இலங்கை அரசாங்கத்தின் பொதுவான வெளிநாட்டு பொருளாதார கொள்கையாகும். போரும் அதன் விளைவுகளும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமும் மேற்கு நாடுகளுடனான இலங்கை பொருளாதார உறவை பாரியளவில் பாதித்தது. ஜீ.எஸ்.ரீ வரிச்சலுகை மட்டுமன்றி கடன் பரிமாற்றம், வர்த்தக நடவடிக்கை போன்ற அம்சங்களும் ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளு டன் இலங்கையின் ஒத்துழைப்பினை முற்றாக பாதித்தது. மனித உரிமையும், போரும் மேற்குலக நாடுகளின் பேரம்பேசலாக மாறியிருந்தமை உறவை மேலும் விரிசலடையச் செய்தது[2] இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுடனான நெருக்கம் நியாயப்பாடுடையதாகவும், அபிவிருத்தி சார்ந்தததாகவும் காணப்பட்டது.

## சீனா- இலங்கை உறவு

சீனாவுக்கும் இலங்கைக்குமான இராஜதந்திர உறவினை சூ-எல்லாய் ஆரம்பித்து வைத்தபோதும் வர்த்தக ரீதியில் பாரிய உடன்பாடுகள் எட்டப்பட்டு மிக சிறந்த பொருளாதார ஒத்துழைப்பு நாடாக சீனா இலங்கைக்கு விளங்கியுள்ளது. அதனை மிகச்சுருக்கமாக நோக்குவோம்.

- கி.மு.5ஆம் நுற்றாண்டிலிருந்து கடல் ரீதியாக பட்டுப்பாதை *(Silk Sea Route)* வியாபாரம் இலங்கையுடன் சீனா பேணியதுடன் தூர கிழக்காசியாவுக்கும் பிற தேசங்களுக்குமான வர்த்தக நடவடிக்கைக்குரிய முக்கிய நாடாக இலங்கை விளங்கியதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.[3]
- இலங்கையின் வரலாற்றில் சீன அட்மிரல் செங் கீ இன் வருகை குறிப்பிடத்தக்க வரலாற்றுப்பதிவாக உள்ளது. அட்மிரலே காலியில் கல்வெட்டினை நிறுவினார் என்றும் அவர் பலகோடி பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு அன்பளிப்பாக கொடுத்ததாக கூறப்படுகிறது. இவரது வருகையை முதன்மைப் படுத்தும் ஜானக குணத்திலக இலங்கையை சீனப் பேரரசின் ஒரு சிற்றரசாக்க முனைந்தே அட்மிரல் வருகை தந்ததாக குறிப்பிடுகின்றார்.
- 1411 இல் மீண்டும் வருகை தந்த அட்மிரல் செங் கீ அப்போது கோட்டை இராசதானியை ஆண்டு வந்த வீர அழகேஸ்வராவைக் கைது செய்து சீனாவுக்கு நாடு கடத்தியதாகவும் அவரது பரம்பரை இப்போதும் சீனாவின் குவான்சென மாகாணத்தில் வாழ்வதாகவும் வரலாற்று தகவல்கள் கூறுகின்றன. இதன் பின்பே ஆறாம் பராக்கிரமபாகு கோட்டையை தலைநகராக்கி ஆட்சி செய்ததாக வும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது. இதன் பின்பு 1416 மற்றும் 1420 இல் ஆறாம் பராக்கிரமபாகு சீனாவுக்கு விஜயம் செய்ததாகவும் "இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை" என்ற நூலில் வி.எஸ்.பி மெண்டிஸ் குறிப்பிடுகின்றார்.[4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுதந்திரத்திற்கு பின்பு 1957இல் சீன பிரதமரான சூ-என்-லாய் *(Chou En Lai)* இலங்கைக்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்க இராஜதந்திர உரையாடலை ஆரம்பிக்க வழிவகுத்தது.[5]
- 1952இல் அரிசி - றப்பர் உடன்படிக்கை *(Rice-Rubber Pact)* தலைசிறந்த இருநாட்டு உறவுக்கான அடித்தளமாக அமைந்தது.[6] இவ்வுடன்படிக்கை ஐந்து வருடத்திற்கொரு தடவை புதுப்பிக்கப்பட்டது.
- 1982 இல் பொருளாதார - வர்த்தக ஒத்துழைப்புக்கான உடன் படிக்கையில் *(Economic and Trade Cooperation)* இரு நாடுகளும் ஒப்பமிட்டன. இதன் விரிவாக்கம் 1984, 1992, 1996 மற்றும் 2000 ஆண்டுகளில் இரு நாடுகளாலும் மேற்கொள்ளப்பட்டது.
- இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக பரிமாற்றத்தினை பின்வருமாறு ஒரே பார்வையில் நோக்குவோம்.

| ஆண்டு | இறக்குமதி (மில்லியன் ரூபா) | ஏற்றுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| 1985 | 1921 | 464 |
| 1988 | 3336.2 | 762.6 |
| 1989 | 3695.9 | 128.5 |
| 1992 | 5302.3 | 65.0 |
| 1993 | 7224.6 | 142.5 |
| 1994 | 7731.6 | 91.3 |
| 2000 | 19227 | 258 |
| 2004 | 45965 | 1742 |
| 2005 | 63370 | 2864 |
| 2008 | 120069 | 5181 |

*(Source: Custom Statistics)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போருக்கு பிந்திய சீன - இலங்கை உறவு**

இவ்வகை நெருக்கமான சீன-இலங்கை உறவு போருக்கு பின்பு பொருளாதார அடிப்படைக்குள் மிக வேகமாக வளர்ந்துள்ளது. இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் மிக முக்கிய பொருளாதார, வர்த்தக, முதலீட்டு ஒத்துழைப்பு சக்தியாக சீனா இனங் காணப்பட்டுள்ளது. இந்திய, யப்பானிய, ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்புக்களை மிஞ்சுமளவுக்கு சீனாவின் பங்கெடுப்பு அதிகரித் துள்ளது. அதனடிப்படையில் சீனாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும், முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் தெளிவாக அவதானித்தல் பொருத்தமான முடிவாகவுள்ளது.

1. பாரிய கிராமிய அபிவிருத்திக்கான கருத்திட்டங்களை சுதந்திர மான வலயங்களாக வகைப்படுத்தி சீனாவின் ஒத்துழைப்பினை பெறுதல்.

2. வடக்கு கிழக்குப் பகுதியில் மீள்கட்டுமானப்பணிக்கான கருத்திட்டங்களை சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளுதல்.

3. ஹம்பாந்தோட்டை துறைமுகம் இராணுவ - கடற்படை நடவடிக்கைக்காக திறந்து வைக்கப்பட்டதுடன் இரண்டாம் கட்ட துறைமுக விருத்திக்கான கருத்திட்டங்களை சீனா ஆரம்பித்துள்ளது. அதனடிப்படையில்,

    - எரிவாயுவை உருவாக்குவதற்கான கருத்திட்டம் *(Gas – Fired Power Project)*
    - கப்பல் திருத்த வேலைக்கான பிரிவு ஆரம்பித்தல் *(Ship repair Unit)*
    - தாங்கிகளை சீர் செய்யும் பிரிவு *(Container repair Unit)*
    - நிலநெய் சுத்திகரிப்பு பிரிவு *(An Oil refinery Unit)*
    - கப்பல்களுக்கு எண்ணெய் பரிமாற்றும் பிரிவு *(A bunkering terminal)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கான அபிவிருத்திக்குரிய நடவடிக்கையை அடுத்துவரும் இருபது ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவதுடன் அதற்காக 600 மில்லியன் டொலரினை சீனா வழங்கியுள்ளது.[7]

இலங்கையின் பொருளாதார ஒத்துழைப்புக்கான சீனசார்பு வெளியுறவுக் கொள்கையை பயன்படுத்தும் விதத்தில் இலங்கை அரசின் தலைவரும், அமைச்சர்களும், பாராளுமன்ற ஆளும் தரப்பினரும் சீனாவுக்கு விஜயம் செய்வதுடன் பல உடன்படிக் கைகளில் ஒப்பமிட்டுள்ளனர். மேலும் சீன இராஜதந்திரிகளும், அரசியல் தலைவர்களும் பல தடவை இலங்கைக்கு அழைக்கப் பட்டதுடன் பல ஒத்துழைப்பு உடன்பாடுகளில் ஒப்பமிட்டு வந்துள்ளனர். அவற்றினை நோக்குவோம்.

4. 17, நவம்பர் 2010இல் பொருளாதாரத்திற்கும், தொழில்நுட்பத் துக்குமான உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.[8] இதன்கீழ் இலங்கையின் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிப்பதுடன் இலங்கையின் தொழில் நுட்பத்தினை மேலும் வளர்த்துக்கொள்ள உதவுமென கருதப்படுகின்றது.

5. 2010 நவம்பர் 18 அன்று அபிவிருத்திக்கும் முகாமைத்துவத் திற்குமான புரிந்துணர்வில் இரு நாட்டு அரச தரப்பினரும் கையெழுத்திட்டுள்ளனர். இதன் முதல் நடவடிக்கையாக சீனாவினால் கட்டப்பட்ட பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபம் (BMICH) உடனடியாக புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள சீனா முன்வந்துள்ளது.[9]

6. 2010 யூன் 11 இல் சீனாவுக்கு விஜயம் செய்த இலங்கையின் பிரதம மந்திரி டி.எம்.ஜெயரட்ண பொருளாதார, கல்வி, கலாசார மற்றும் சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதுடன்[10] இலங்கையின் விருத்திக்கு சீனா பாரிய பங்களிப்பினை வழங்க முன்வந்தமை சிறப்பான அம்சமாகும்.

7. மேலும் பிரதமரின் விஜயத்தின்போது பொருளதார - வர்த்தக அடிப்படையில் மேலும் நெருக்கமான ஒத்துழைப்பினை இரு நாடுகளும் மேற்கொள்வதென முடிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் சீன விஜயத்தின் போது ஆறு உடன்படிக்கைகளில் ஒப்பமிடப்பட்டது.[12] அவற்றில் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கான நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இலங்கையின் உட்கட்டுமான கட்டமைப்பினை விருத்தி செய்வது, தகவல் தொழில் நுட்பத்திற்கான அடிப்படை அம்சங்களை விருத்தி செய்தல். இலங்கையில் பிரதான போக்குவரத்து வீதி அபிவிருத்தியினை மேற்கொள்ளல் மற்றும் தொடர்பாடல் விருத்தியினை அதிகரித்தல், துறைமுக விருத்தியினை வேகப்படுத்தல் எனப் பல்வேறு அம்சங்களில் ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதென முடிவாகியது.

9. மிரிகம அபிவிருத்தித் திட்டத்திற்கான 28 மில்லியன் அமெரிக்க டொலரினை சீனாவின் ஹொங்ஹொங் *Conghomorate Huichen* நிறுவனம் முதலிட்டுள்ளது.[13] இது கொழும்பு நகரத்திற்கும் சர்வதேச விமானநிலையத்திற்கும் அண்மித்த பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினை இலங்கைக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

10. கொழும்பு - கட்டுநாயக்கா விரைவுப்பாதை, தெற்கு விரைவுப்பாதை[13] *(Pinnaduwa to Godagama)* அமைப்பதற்கான ஒத்துழைப்பு உடன்படிக்கையும், நிதி ஒதுக்கீடும் சீனா மேற்கொண்டிருப்பதுடன் அதற்கான பூர்வாங்க வேலைகளில் சீனா ஈடுபட்டு வருகிறது.

11. இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தினை *(IT)* விருத்தி செய்வதற்காக 500000 மில்லியன் அமெரிக்க டொலரினை சீனா வழங்க முன்வந்துள்ளது.[14] அதில் தகவல் தொழில்நுட்பத்தினை இளம் சமூகத்தினர் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கான பயிற்சித்திட்டங்களையும் நாடு முழுவதும் ஆரம்பிக்க திட்டமிட்டு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

போருக்கு பிந்திய இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியில் சீனா பாரியளவான பங்குபற்றலை எடுத்துள்ளது. இலங்கையின் வெளி யுறவுக் கொள்கையிலுள்ள போக்கும் இலங்கையின் எதிர்காலமும் சீனா சார்ந்ததாகவே கருதப்படுகின்றது. இலங்கையின் சாதாரண நடவடிக்கையிலிருந்து அனைத்து பொருளாதார நடவடிக்கையிலும் சீனா பங்கெடுத்து வருகின்றது. இதனால் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதென்பதைவிட இலங்கையின் மேற்குடனான நெருக்கடியை சரிசெய்ய வளர்ச்சியடைந்துள்ள சீனாவின் ஒத்துழைப்பு தவிர்க்க முடியாததாகும். தத்துவார்த்தரீதியிலும், புள்ளிவிபரரீதியிலும் தகவல் களை அவதானிக்கும்போது கிடைக்கும் முடிவுகள் இலங்கையின் அபிவிருத்திக்குரிய ஒத்துழைப்பினை வழங்குவதாகவே உள்ளது.

## அடிக்குறிப்புகள்

1 *Economical Zone, The Hindu, August,15,2009.*

2 *Ibid*

3 *Sihalavattupakarana (5AD), Sahassavattuppakarana (94D) Buthsarana and 5 ataka Atuwa Getapada ya (12AD) and pujawaliya (13 AD)* என்பன வரலாற்றுக்கால சீனா-இலங்கை உறவை கோடிட்டுக் காட்டுகின்றன. மேலும் **1911**ஆம் ஆண்டு காலியில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டினை பிரித்தானிய பொறியியலாளர் ரொம் வின்சன் கண்டுபிடித்தார். அதில் "உலகமே போற்றும் உத்தமபுத்தரின் பின்னால் தனது கருத்துக் களை கூறிய மாட்சிமை பொருளாகிய சீன சாம்ராஜ்யத்தின் மிங் சக்கரவர்த்தி புனஸ்சிங்கொ மற்றும் வாங்சிங்லெயின் ஆகியோரை அனுப்பி வைத்தார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 *See,V.L.B Mendis; Foreign Policy of Sri Lanka from earliest times to 1965, Dehiwela, 1983.*

5 *T.K.Premadas'a A glimpse of trade between SriLanka and China Global Reach October , 2009, P.30.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 *Ibid,* ஆரம்பத்தில் குறுகிய கால உடன்படிப்கையினை அமைந்த போதும் நீண்டகால உடன்படிக்கையாக விஸ்தரிக்கப்பட்டது. 80,000மெற்றிக்தொன் அரிசியை இலங்கை பெற்றுக்கொண்ட நிலை 270,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. இது ஒவ்வொரு ஆண்டுக்குமான பரிமாற்றமாக அமைந்திருந்தது. அவ்வாறு 50,000தொன் ரப்பர் ஆண்டுக்கு சீனா பெற்றுக்கொண்டது.

7 *www oregonlive.com/business/index/ssf/2008/26.*

8 *www.fl.lk / Srilanka –China Sign. agreement on economic and technical – cooperation.*

9 *www.colombo page com/archive/10c/No.17.*

10 *lk .China –embassy org/eng/xwdt.*

11 *news xinhuanet . com.english 2010 /china*

12 *www daily mirror.lk, 2010*

13 *www Oregon live .com, 2011*

14 *www.youtube.com,2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய நாகரிகத்திற்கெதிரான மேற்குலகத்தின் போர்

## அறிமுகம்

உலக நாகரிகங்களில் இன்றுவரை நிலைத்திருக்க போராடிக் கொண்டிருக்கும் ஒரு நாகரிகமாக இஸ்லாம் விளங்குகின்றது. நாடுகாண் பயணங்களுக்கு வித்திட்ட ஐரோப்பிய சமூகம் பிற தேசங்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்திய முதல் சுலோகமும், அம்சமும் கீழைத்தேச நாகரிகங்கள் மீதான அழிப்பாகும். அவ்வகை அழிப்புக்குள் பல பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு போராடிவரும் இஸ்லாம் நிலைத்திருக்க முயன்று வருகின்றது. இதனை முறியடிக்க இஸ்லாமிய நாகரிகத்தின் முதுகெலும்பை உடைக்க மேற்குலகம் தனது இருபத்தோராம் நூற்றாண்டின் திட்டமிடலில் முதன்மை கொடுத்துள்ளது.

இவ்வகை முதன்மைக்குள் அகப்பட்டிருக்கும் இஸ்லாமிய சமூகம் மீதான மேற்கின் அணுகுமுறை பல உபாயங்களை உள்ளடக்கியுள்ளது. வெளிப்படையாகப் பரந்து விரிந்துள்ள எதிர்ப்பு, எதிர்ப்புவாதம், அமைதியான ஆரவாரிப்பின்றிய அழிப்புவாதத்தையும், தந்திரோபாயத் தையும் கையாண்டு வருகின்றது. இவ்வகை அணுகுமுறைக்குள் அகப்பட்டு அழிவடைந்த சோசலிஸம் போன்று இஸ்லாம் அழிவடை யாமல் பாதுகாக்கப்படுவது அவசியமானது. நாகரீகங்களைக் காலாவதி யாக்கும் மரபுரிமை வாதங்களை நிராகரிக்கும் உலகத்திற்குள் இஸ்லாம் கீழைத்தேசத்தின் நாகரிகமாக நிலைத்திருக்க தவறுமேயாயின் மேற்கின் ஆதிக்கம் அடுத்துவரும் பல நூற்றாண்டுகளுக்கு இயற்கையின் பாற்பட்ட மனித நாகரிகத்தைக் காணவே முடியாத நிலையை உருவாகும். அதில் அதிகம் ஆசியா, கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க பிராந்தியங்களே பாதிப்படையும். நாகரிகங்களின் பாற்பட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்களும், தேசியங்களும், தேசிய உணர்வுகளும் வெளிக்கிளம்புகின்றன. ஹான்ஸ் கோனின் *(Hans Khone)* சிந்தனைக்குள் மட்டுமன்றி இருப்புக்களையும் தேசிய அடையாளங்களையும் தொலைத்துவிடும் துயரம் ஏற்பட்டுவிடும்.

இவ்வகை அணிதிரள்வுக்குள் மேற்குலக, மரபுரிமைத்தன்மைக்குள் இந்திய ஆட்சியாளர்களும், சீன ஆட்சியாளர்களும் ஜப்பானிய ஆட்சியாளர்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இஸ்லாமிய முகாமை கொண்ட நாடுகளும் ஆட்சியாளர்களும் இந்தப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

இவ்வாய்வு இஸ்லாத்துக்கெதிரான உலக அணிதிரட்டலை அடையாளப்படுத்துவதுடன் இதிலிருந்து மீள்வதற்கான உபாயங்களை கண்டறிய முனைகின்றது. இதற்கு முன்னோடியான ஆய்வாக சாமுவேல் ஹன்ரிங்டனின் *(Samuel P.Huntington) "Clash of civilization"* பயன்படுத்தப்படுவதுடன் அவரது முறையியல்களையும் அதுதொடர்பில் எழுந்துள்ள கருத்தாடல்களையும் ஆய்வுகளையும் ஆதாரமாகக் கொண்டு முடிவை எட்ட முயல்கின்றது.

நாகரிகங்களை ஒரு பிரதேசம் என்ற வரையறைக்குள் சிறைப்படுத்த முடியாது என மார்சல் கொட்ஜன் *(Marshal Hodgeson)* குறிப்பிட்டது[1] போல் இஸ்லாமிய நாகரிகமும் உலக வியாபகம் கொண்டது. நாகரிகம் என்பது மேன்மைமிக்கது. உயர்வுடைய எண்ணங்களின் பிரகாசிப்பினை வெளிப்படுத்துவது. பழைமையானது ஆனால் பின்தங்கியது கீழ்த்தரமானது என்ற வரலாற்று வாதங்களை வெறும் புரட்டல் வாதிகளும் மேற்குலக ஆதிக்கவாதிகளும் பரப்பி வரும் பொய்ப் பிரசாரமாகும். இஸ்லாமிய நாகரிகத்தின் வரலாறு துன்பியல் நாடகமெனவும் மிலேச்சதனமானது எதேச்சதிகாரத்தினதும் பண்பாட்டுத் தேக்கத்தினதும் வெளிப்பாடென்ற முறையியல் மேற்குலகவாதிகளால் சித்தரிக்கப்பட்டது.

ஆனால் உண்மையில் இஸ்லாமிய நாகரிகம் பிராந்திய எல்லைகளைக் கடந்தது நிறபேதங்களை தகர்த்தெறிந்து கொண்டு உலகம் முழுவதும் வியாபகமான பரம்பலை நிகழ்த்தியது. கொட்ஜ்சன் எழுதினார். "துணிந்து செல் இஸ்லாம்" [2] *(Venture of Islam)* என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் செழுமையும் கொண்ட நாகரிகங்களில் வலிமையான இஸ்லாமிய நாகரிகத்தினை அழித்தொழித்தல் பின்காலனிய மரபுரிமைகளை கிழக்குலகில் அமுலாக்கவும் ஆதிக்கம் செலுத்தவும் உதவுமென மேற்குலகு செயல்படுகின்றது. காலனித்துவ, பின் காலனித்துவ உலகத்தில் மேற்கு உபாயம் இஸ்லாமிய நாகரிகத்தை இலக்குவைத்து நகர்வதாக அமைந்திருந்தது. அதன் தீவிரம் சோஸலிஸம் என அழைக்கப்பட்ட சிவப்பு அபாயம் முடிவுக்குவந்த பின்பு பச்சை அபாயம் என மேற்கு இஸ்லாமிய நாகரிகத்தினை[3] துடைத்தொழிப்பதற்கு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இவ்வகை தீவிரத்திற்கு தொடர்ச்சி இருந்தாலும் புதிய உலக ஒழுங்கு *(New world order)* உருவான பின்பு அதிதீவிரமடைந்துள்ளது. காரணம் மேற்குலகின் பிரதான எதிரணியினராக விளங்கும் இஸ்லாமிய மக்கள் தனித்துவமான நாகரிகத்துடன் வாழ்கின்றனர்.

புராதன காலத்தில் மேற்கு ஆசியாவுக்குள் அடையாளம் காணப்பட்டாலும் நவீன உலகத்தில் முழுக்கண்டங்களிலும் பரம்பலடைந்துள்ளனர். அதனோடு ஒரு பலமான, இறுக்கமான நிறுவன கட்டமைப்புக்களை[4] அதிகம் உள்வாங்காத எதிர்முரணியத்துடன், விரிபாக்கத்தையும், நிலைத்திருப்பினையும் கொண்டிருக்கின்ற நாகரிகமாக, இனமாக, பண்பாடாக இஸ்லாம் விளங்குகிறது. இதனால் உலகத்தினை பிறநாகரிகங்களை கூறுபோட்டு கொண்டாட்டம் நிகழ்வது போல் இஸ்லாமிய சமூகத்தை கையாளமுடியாமல் இருப்பதோடு உலகமயவாக்கத்திற்கு தடையாக திகழும் பிரதான நாகரிகமாக இஸ்லாம் விளங்குகிறது.[5] அதனால் உலகத்திற்கு நியாயத்தினையும், மனிதஉரிமையையும், ஜனநாயகத்தையும் போதிக்கும் மேற்குலகவாதிகளால் இஸ்லாத்துக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்துவிடுவதை தவிர வேறு மார்க்கம் எதனையும் கடைப்பிடிக்க முடியாதவர்களாக காணப்பட்டனர். நாகரீகமானவர்கள் என தம்மை கூறிக்கொண்டனர் நாகரீகத்தின் பெயரால் அநாகரீகத்தினை இஸ்லாமிய சமூகத்தின் மீது ஏவிவிட்டனர்.

ஒரு பண்பாட்டின் அகன்ற பரிமாணமே நாகரீகமாகும். உலகின் முதன்மையான நாகரீகங்களுக்கு மதங்களும், அவை சார்ந்த விழுமியங்களுமே அத்திவாரமாக விளங்குகின்றன. இஸ்லாமிய நாகரீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருப்பது போல் இந்து கிறிஸ்தவ நாகரீகங்கள் நிலைபேறுடையவையாக விளங்குகின்றன. ஆனால் காலத்தால் சுமேரிய, எகிப்திய, கிரேக்க நாகரீகங்கள் அழிந்து போயுள்ளன. முடிவின்றி ஆயிராமாயிரம் ஆண்டுகள் நிலைத்திருப்பதே நாகரீகங்களின் சிறப்பம்சமாகும். சாம்ராஜ்யங்கள் எழுச்சி பெறலாம். திடீரென தகர்ந்து போகலாம் அரசுகள் தோன்றிமறையலாம், சமூக அரசியல், இராணுவ புரட்சிகள் வெடிக்கலாம், ஆனால் எல்லாவற்றையும் கடந்து நிலைத்திருப்பது நாகரீகங்களே.[6] எனவே நாகரீகங்களை பேணுதல் ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்மூச்சான பணியாகும். இஸ்லாமிய நாகரீகத்தின் உயிர்வாழ்விலேயே கிழக்கு உலகத்தின் உயிர்வாழ்வு தங்கியுள்ளது. அதுவே பிற நாகரீகங்களின் வாழ்வியல் இருப்பினை பாதுகாக்கும் தடுப்புச்சுவராக விளங்குகிறது. இஸ்லாமிய நாகரீகத்தை அழிக்கும் மேற்குலகின் உபாயத்திற்குள் கிழக்குலக பிற நாகரிகங்கள் கூட்டுச்சேர்ந்து செயல்படுகின்றன.

ஆனால் அவ்வகை கூட்டுச்சேர்வின் இறுதியில் அனைத்து நாகரீகமுமே தகர்ந்து போகும் நிலை ஏற்படும். இந்தசந்தர்ப்பத்திலேயே அமெரிக்க பேராசிரியர் சாமுவேல் ஹண்டிங்ரன் முன்வைத்த "நாகரீகங்களுக்கு இடையிலான மோதலே" இனிவரும் உலகின் நிகழ்வாகவுள்ளது என 1990 களில் தனது கருத்தினை வெளியிட்டார்.

## நாகரீகங்களுக்கு இடையிலான மோதல்

சாமுவேல் ஹண்டிங்ரனின் நாகரிகங்களுக்கிடையிலான மோதல் என்ற கருத்தியல் சிந்தனை புதிய ஒரு சர்ச்சையை தோற்றுவித்தது. பனிப்போரின் முடிவு நாகரீகங்களை மோதவிடும் உலக யதார்த்தத்தை தோற்றுவிக்கும். அதுவே இனிவரும் உலக வரலாறு என குறிப்பிட்டார். உலகில் ஏழு நாகரிகங்களை[7] அடையாளப்படுத்திய ஹண்டிங்ரன் மேற்குலக கிறிஸ்தவ நாகரீகத்திற்கு அமெரிக்கா தலைமை வகிக்கிறது என்றார். அதுவே உன்னத பண்புகொண்ட வடிவமென அமெரிக்கா கருதுகின்றது. அத்தகைய பண்பாட்டு விழுமியங்களை பிறநாகரீகங்கள் மீது திணிக்க முயலுகின்றதென்று குறிப்பிட்டார். ஜனநாயகம், தனிமனித சுதந்திரம், சிறந்த சந்தை பொருளாதாரம், சட்டத்தின் ஆட்சி போன்ற மேற்குலக நாகரீகத்தின் உன்னத பண்புகளை[8] மனிதகுலம் பின்பற்ற வேண்டுமென அமெரிக்கா விரும்புகிறது.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மேற்குலக நாகரீகம் தனக்குள்ளே அதீதமான பலவீனங்களை கொண்டு இயங்குகின்றது. வன்முறை, குற்றசெயல், போதை மருந்து பாவனை என்பன பெருகுவதுடன் குடும்ப உறவு சிதைந்து வருகின்றது. இத்தகைய நிலையில் பிறநாகரீகங்களை அழிக்கும் உலகமயப்படுத்தல் உபாயம் மேற்குலகுக்கு ஆபத்தானதாக அமையும் என எச்சரிக்கின்றார் ஹண்டிங்ரன்.[10]

சீன நாகரீகத்தின் பொருளாதார பாய்ச்சலை எச்சரித்த அவர் இஸ்லாமிய நாகரீகத்தின் தீவிரவாதத்தையும் மேற்குலகின் ஆபத்தான அடையாளமென வர்ணித்தார். இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிராக மேற்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் அதன் ஆதிக்கத்திற்கு முண்டுகொடுப்பதாக அமைந்துள்ளது. அமெரிக்கா மீது இஸ்லாமிய சமூகம் ஆத்திரமும் பகைஉணர்வும் கொண்டுள்ளது. இது கிறிஸ்தவ-இஸ்லாமிய நாகரீகத்துக்கிடையிலான மோதலுக்குரிய புறநிலை சூழலாகும். இவ்வகை புறசூழலுக்கு வினையாகிய சம்பவங்கள் பல இரு நாகரீகங்களும் மேற்கொண்டுள்ளன என்றார்.[11] அவரது கருத்தினை முன்மொழிந்த பல ஆய்வாளர்கள் 16ம் நூற்றாண்டிலிருந்து இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்குலகமும் அதனை எதிர்கொள்ள இஸ்லாமிய நாகரீகத்தின் அணுகுமுறையும் அமைந்துவருகிறது எனக்கூறுகின்றனர்.[12]

நாகரீகங்களுக்கிடையிலான போர்களை பெரும் தேசங்களுடன் மட்டும் உள்ளடக்காது இன அடையாளங்களை பாதுகாக்கும் சமூகங்கள், ஆதிக்குடிகள், இனக்குழுக்கள், மதசமூகங்கள், தேசிய இனங்கள் தமது பண்பாட்டுத்தனித்துவத்தினை பேண போராடி வருகின்றன.[13] இது காலம்காலமாக நிகழ்ந்து வரும் நியாயமான போர்களின் போக்குகளாகும். இப்போர்களுக்குள்ளால் இயங்கும் உலகத்தையும் அதனை இயக்கி வைக்கும் மேற்கின் தந்திரத்தையும் அளவீடு செய்வது அவசியமானது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் பாரிய போர்கள் எதுவுமே மேற்குக்குள்ளே அல்லது அதன் எல்லைக்குள்ளேயோ நிகழவிடாது தடுத்துவரும் தந்திரம் மேற்குக்கே தனித்துவமானது. பெருளாதார நெருக்கடியும் எல்லையில்லா கெடுபிடியும் மேற்குலகுக்குள் எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம் கீழத்திசை நோக்கி அதன் தாக்கங்களை நகர்த்தியதுடன் போர்களையும் சிறுஅளவில் யுத்தங்களையும் கிழக்கு திசையிலேயே நிகழ்த்திவிட்டு சென்றுள்ளது. இவ்வகை மேற்குலக தந்திரத்துக்குள் இஸ்லாமிய நாகரீகம் துண்டாடப்படுவதும் எதிர் எதிர் திசைகளின் அரசுகள் நிறுத்தப்படுவதும் வழமையான அரசியல் முரண்பாடாக மேற்கு காட்சிப்படுத்துகின்றது. இதற்குள் சாமுவேல் ஹண்டிங்கரின் சிந்தனை முன்மாதிரியானது. மேற்குலக விரும்பிகள் அவரது சிந்தனையை முறியடிக்க ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் எழுச்சி பெற்று போராடினார்கள்.

அரசுகளின் வரைபுகளுக்குள்ளும் பொருளாதார இராணுவ நிர்ப்பந்தங்களுக்குள்ளுமே உலகத்தின் போக்கு நகருமென வாதிட்டனர். இனமோதல்களும், விடுதலைக்கான போராட்டங்களும் பண்பாட்டு தனித்துவத்துக்கான போராட்டமாக மட்டும் அடையாளப்படுத்த முனைவது தவறு என்றனர். ஆனால் அவற்றின் உள்ளார்ந்த இருப்பி னையோ உண்மை அர்த்தத்தினையோ ஆழமாக பார்க்க அவர்கள் தவறியதுடன் ஹண்டிங்ரனின் எண்ணத்தினை உண்மையான நியமங்களை அவர்களால் புரிந்துகொள்ளக்கூட முடியாதவர்களாக விளங்கினர். ஹண்டிங்ரனின் நாகரீகங்களுக்கிடையிலான மோதலை மேற்கு இஸ்லாத்துக்கு எதிரான மோதலென கருதுவதற்கான வாய்ப்பே அதிகமுண்டு என்கிறார்.

இந்து, பௌத்த, சீன நாகரிகங்கள் மேற்குடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு இஸ்லாத்தை தோற்கடிக்க முயல்வதும், ஏனைய நாகரீகங்களுக்கு எதிராக இஸ்லாத்தை தூண்டி விடுவதும் மேற்கின் கட்டவிழ்ப்பு வாதத்தினை இயல்பாக உள்ளது. மேற்குலகம் தனித்து கிழக்கு நாகரீகங்களுடன் மோதவில்லை. கீழ்த்திசை நாகரீகங்களை கீழ்த்திசை நாகரீகங்களுக்கு எதிராகவே தூண்டி விடுவதிலும் மேற்குலக நாகரீகத்தின் தீவிரம் காணப்படுகிறது.

அடிப்படை மனித உரிமைகள், மனித சுதந்திரம், அரசியல் உரிமைகள், குடியுரிமைகள், பெண்உரிமைகள், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச்சட்டங்கள் ஒரு பொதுப்பண்பாட்டு மையத்தினை உருவாக்கியுள்ளது என்று கூறிவிடமுடியாது. இவ்வகை சட்டமாதிரிகளின் பெயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்ட மனித உயிர்கள் எத்தனை பில்லியனாகும். அழிந்து போன சொத்துக்கள், இயற்கையின் அடிப்படைகள் என பல பில்லியன் கணக்கில் அழிந்து போயுள்ளன. அவ்வகை அழிவுகளுக்கு பின்னால் மறைந்திருந்த உண்மை நாகரீகங்களின் மோதலேயாகும். அதனை விரிவாக இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிரானதாக மேற்குலகம் நிகழ்த்தியுள்ளதென்பதனை நோக்குதல் அவசியமானது.

## மேற்குலகின் போரும் இஸ்லாமிய நாகரீகமும்

இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிரான மேற்குலகின் போர் வியூகம் நீண்ட வரலாற்றினைக் கொண்டது. சிலுவை யுத்தம் என்ற பெரும் மனித அழிவினை ஏற்படுத்திய போரானது இஸ்லாமிய கிறிஸ்தவ நாகரீக மோதலாகவே அளவிடப்படுகிறது.[14] இதன் ஆரம்பம்முதல் இன்றைய சூழல் வரை ஏதோ ஒரு வகையின் இஸ்லாமிய நாகரீகத்தின் அடிப்படைகளை மேற்குலகம் சுரண்டி வருகிறது. துருக்கிய ஒட்டமன் இராட்சியத்தின் வீழ்ச்சியுடன் இஸ்லாமிய நாகரீகத்தின் அரசியல் அதிகாரத்திற்கு எதிரான போர்களில் மேற்குலகம் ஆதிக்க உலகமாக வடிவமைத்துக் கொண்டது. துருக்கியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்பான மேற்குலக எழுச்சி இஸ்லாமிய நாகரீகத்தை பகுதிகளாக துண்டுபோட முயன்றது. அதில் முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களும், பனிப்போரும் மேற்குலகுக்கு பெரும் நெருக்கடிகளை கொடுத்திருந்தன. பனிப்போரின் பின்பான புதிய உலக ஒழுங்கின் கீழ் இஸ்லாமிய நாகரீகத்தை முதல் எதிரியாக மேற்குலகம் கருதியது.

பனிர் போர்களத்தில் நிகழ்ந்த இஸ்லாமிய தேசிய அடையாளத் தினை கொண்டிருந்த பாலஸ்தீன மக்களை தீர்வற்ற மக்களாக அரசற்ற மக்களாக, இறைமையோ, சுயநிர்ணயமோ இன்றி சமூகமாக மாற்றியதில் மேற்குலகம் காரணமாகியது. அவ்வாறே கஷ்மீர் மக்களின் சுயநிர்ணயத்தை அழிப்பதில் மேற்குலகப் பாணியில் இந்தியாவின் இந்துநாகரீகம் ஆதிக்கம் செலுத்தியது. அதுமட்டுமன்றி 1947முதல் 1993வரை பாரிய யுத்தங்கள் ஐந்தில் இந்துநாகரீகம் இஸ்லாமிய நாகரீகம் மீது நிகழ்த்தியுள்ளது.

இந்துநாகரீகம் மேற்குமயமான வடிவத்தினையே தற்போது தனக்குரித்தான நாகரீகமாக கருதுகிறது. அது ஐரோப்பியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையின் பின்பு நிறுவனக் கட்டமைப்பை வரிந்துகொண்டதுடன் கிறிஸ்தவ நாகரீகத்தின் இயல்புகளையும் பண்புகளையும் உள்வாங்கி செயல்படுகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அதன் அரசியல் அதிகாரமும் இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிரான அடிப்படைவாத அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. ரோம சாம்ராட்சியத் தின் கிறிஸ்தவ மத அடையாளம் சார்ந்தது போல் இந்திய உபகண்டம் முழுவதும் நிலவிய முடியாட்சி முறைமைக்கும் இந்துமதத்திற்கும் உறவு காணப்பட்டது. எனவே இந்துவும், கிறிஸ்தவமும் ஒன்று சேர்ந்து இஸ்லாமிய நாகரிகத்திற்கு எதிராக தொழில்படுகின்றன. இரு நாகரீகத் திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டாலும் தொழில்பாட்டிலும், அணுகுமுறைகளிலும் அரசியல் அதிகாரத்தில் ஒன்றாகவே பணிபுரிகின்றன.

## ஈராக், ஆப்கான் மீதான போர்கள்

1991 முதல் ஈராக் போரும் 2001 ஆப்கானிஸ்தானிலும் ,2003இல் இரண்டாவது ஈராக் போரிலும் மேற்குலகம் அமெரிக்கா தலைமையில் இஸ்லாமிய நாகரீகத்தின் அடிப்படையை தகர்த்தது. யுப்பிரட்டீஸ்-ரைகிறரீஸ் நதிக்கரை இஸ்லாமிய நாகரீகத்தின் பிறப்பிடமென கருதப்பட்ட ஈராக்கை கைப்பற்ற மேற்குலகம் அரங்கேற்றிய போலி விம்பம் [15] தற்போது தகர்ந்துவிட்டது. அவ்வகைப் போலி விம்பத்தினை தகர்த்து விட்டு இப்போர்கள் தெளிவுபடுத்தும் உண்மைகளை இஸ்லாமிய நாகரீகத்தின் தொட்டிலை தகர்ப்பதாகவே உள்ளது. ஆப்கானிஸ்தானி லும், ஈராக்கிலும் மேற்குலகம் முதலில் அழித்த அம்சமாக நூதனசாலைகள், வரலாற்றுச்சின்னங்கள் பழைய பொக்கிஷங்கள் என்பதை நோக்கும்போது நாகரீகத்தை அழிப்பதே நோக்காக இருந்துள்ளது. இஸ்லாமிய நாகரீகத்தின் அடிப்படையில் உயிரோட்ட முள்ள மரபுரிமை பண்புகளை அடிப்படைவாதமாகவும், தீவிரவாத மாகவும், பயங்கரவாதமாகவும் சித்தரித்துவிட்டிருந்த மேற்குலக இஸ்லாமிய நாகரீகம் அதற்கு பதிலாக பொப் இசைகளையும், நீலப்படங்களையும், கொலிவுட்சினிமாவையும் பரப்புவதில் முண்டி யடித்துக் கொண்டது. ஆப்கானிஸ்தானின் இவ்வகை நுகர்வு கலாசாரமென்றை மேற்குலகம் தீவிரப்படுத்துகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் கொட்டிக்குவிக்கப்பட்ட குண்டுகளும், பாவிக்கப்பட்ட ஆயுதங்களும் *(Laser guided precision bombing technology)* எல்லையற்றவை. அதன் அழிவுகள் அனைத்தும் சதாம் உஷைனையும் பின்லேடனையும் இலக்குவைத்தது மட்டும் தானா? என்ற கேள்வி இயல்பானது. மேற்குலகம் அடையாளப்படுத்திய போர் அதுவாகவே இருந்தது.

ஆனால் அவர்கள் இருவருக்குமான கொல்லப்பட்ட மனித உயிர்கள் என்றும் முடிவுறாது தொடர்ந்து கொண்டிருப்பதுடன் அவர்களில் சிறுவர்கள் , பெண்கள், முதியோர்கள் எத்தனை ஆயிரம் பேர் என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமை, பெண்கள் உரிமை, சிறுவர் உரிமை அனைத்தும் மேற்குலகின் போலி விம்பங்களாகவே[18] அமைந்துள்ளன. மேற்குலகின் வன்முறைசார் மேற்குமயமாக்கலின் (உலகமயமாக்கம்) அசல் வடிவமாகவே அமைந்துள்ளன.

ழான் போத்ரிலார் குறிப்பிடுவது போல் அமெரிக்கா ஒரு வன்முறைச் சூழலை உருவாக்கி வன்முறைசார் உலகமயமாக்கத்தினை மேற்கு தனதாக்க முயன்றுவருகிறது எனக்குறிப்பிடுகின்றார்.[19] நாகரீகங்கள் தீவுகளாக இல்லை என்றும் அவற்றை இணைக்க முடியாது என்றும் அவர் வாதிடுகின்றார். அமர்த்திய சென், வோலே சோயிங்க ஆகியோர் சதாம் உஷைன், பின்லேடன் மட்டுமல்ல ஜோர் புஷ் டோனிபிளேயர், பெர்லுஸ்தானி (எல்லோரும் முன்னாள் ஆட்சியாளர்கள்) யும் மனிதஉரிமை மீறலாளர்கள் தான் என்கின்றனர்.[20]

முதலாம் ஈராக் போருக்கு பின்பு அந்த நாட்டின் மீது பொருளா தாரத்தடை விதித்தால் சத்துணவு குறைபட்டதாலும், போதிய மருத்துவ வசதியின்மையாலும் ஐந்து இலட்சம் ஈராக்கிய குழந்தைகள் கொல்லப்பட்டனர்.[21] இன்னோர் சம்பவத்தில் நில அறைகளுக்குள் ளேயே நூற்றுக்கனக்கான குழந்தைகள் கொத்து கொத்தாக கொத்துக் குண்டுகளாலும் பாரிய இராட்சதக் குண்டுகளாலும் கொல்லப்பட்டனர்.

அபுகிராய் சிறைக்கூடத்தின் அம்மணமான சித்திரவதைக் காட்சிகள் மேற்குலகின் கோரத்தைக் காட்டுகின்றது. இஸ்லாமியர் மீதான அசிங்கத்தனமான, தரம்கெட்டதான போரியல் குற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் மனித உரிமை மீறலென்றும் சொல்லாடல்களுக்குள் முடிந்துபோகும் விடயங்களாக பார்க்க முடியாத கொடூரங்கள் அங்க அடையாளங்களை முழுமையாக மூடிமறைத்து வாழும் நாகரீக மனிதர்களை அம்மணமாக்கி இரசிக்கும் காட்சிகளின் வக்கிரம் இஸ்லாமிய நாகரீகம் மீதான தாக்குதலாகும். இதுதான் மேற்குலக நாகரீகமா? சுதந்திரமா? ஜனநாயகமா? மனிதஉரிமையா? இவ்வகைச் சொற்களை உச்சரித்துக் கொள்ளும் தகுதி அவர்களுக்கு உண்டா? அபுகிராய் சித்திரவதை அசிங்கம் 2003 தொடக்கம் நிகழ்வதாக இத்தாலிய படைத்துறை தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறையில் நடந்தவை இன்னும் கோரமானவை என அமெரிக்க அதிபர், பாதுகாப்பு அமைச்சர் பேசியுள்ளனர். தன்னிடம் இதைவிட கொடூரமானவை ஒளிநாடாக்கள் இருப்பதாகவும் அவற்றை வெளியிட வேண்டாமென பாதுகாப்புத்துறை வழக்குரைஞர்கள் தெரிவிப்பதாக அப்போதை அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனாட் ரொம்ஸ்வீட் குறிப்பிட்டார்.[22] ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் தற்கொலைத் தாக்குதலின் பெயரால் படுகொலைகளும், அழிவுகளும் முடிவுக்கு வரவில்லை. மேற்குலகின் அநாகரீக ஆக்கிரமிப்பு ஈரான் மீது தொடர முயலுகின்றது. இஸ்லாமிய நாகரீகத்தின் எஞ்சியதும் நிலைத்திருப்பதுமான ஈரானிய அரசையும் ஆட்சியை தகர்க்க பல உபாயங்களை மேற்குலகு கையாண்டு வருகின்றது. இதிலிருந்து தப்பிக்கொள்ள இஸ்லாமிய செயற்படபோகும் விதமே அவசியமானது.

## இஸ்லாமிய தேசிய இனப்போராட்டமும் மேற்குலகமும்

பாலஸ்தீன மக்களின் அரசியல் அதிகாரத்திற்கான தேசிய இனம் சார்ந்த பிரச்சனையினை மேற்குலகம் பிராந்திய நலன் சார்பானதாகவும், சர்வதேச நலன்சார்பானதாகவும் கையாண்டு கொண்டது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு கொள்கைகளுக்கு பின்னால் மேற்குலகின் இஸ்லாமிய அல்லது அராபிய எதிர்ப்புவாதமே மோலோங்கியிருந்தது. 1948 முதல் இஸ்ரேலிய அரச இருப்பினை ஐ.நா சபையிலும் அதற்கு புறம்பான வகைகளிலும் அமெரிக்க உட்பட மேற்குலகு அதீத கவனமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பும் வழங்கியது. ஒவ்வொரு இஸ்ரேலியனுக்கும் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 1400 டொலரை அமெரிக்கா மானியமாக வழங்கி வருகிறது. இஸ்ரேலிய படைவீரர் ஒவ்வொருவனுக்கும் ஆண்டுக்கு சுமார் 9751 டொலரை அமெரிக்கா செலவிடுகிறது.[23]

அமெரிக்க ஜனாதிபதிகள் நிபந்தனை அற்ற ஆதரவு இஸ்ரேலுக்கென முழங்குவதும் மத்திய கிழக்கில் ஒரே ஜனநாயக நாடு இஸ்ரேல் என அமெரிக்கா புகழ்ந்து தள்ளுவதும் பாலஸ்தீனத்தின் எதிர்ப்புப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து செயல்பட்ட மேற்குலகின் அணுகுமுறை இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிரான தந்திரமாகவே விளங்குகிறது. பாலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிக்கும் கடந்த அறுபதாண்டு அரசியலை மேற்குலகு-இஸ்ரேல் கூட்டு போர்களாகவும், சமாதான உடன்பாட்டு அரசியலாகவும் வடிவமைத்து தந்திரமான இராணுவ -அரசியல் ஆக்கிரமிப்பினை அப்பிராந்தியத்தில் நிகழ்த்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரூமன் முதல் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா வரை பாலஸ்தீன தனிநாட்டுக்குரிய அங்கீகாரத்தினை விரைவில் ஏற்படுத்தி கொடுப்பதோடு பாலஸ்தீனர் மீது அக்கறையும், கரிசனையும் உள்ளதென்பதை அடிக்கடி காட்டுவதுடன்[24] சமாதான உரையாடல்களை தந்திரமாக நகர்த்தி[25] அரசியல் அங்கீகாரமில்லாத சக்திகளை துாண்டிவிட்டு குழுவாதங்களையும், அகமுரண்பாடுகளையும் பகைபுலமானதாக மாற்றுவதில் மேற்குலக ஆட்சியாளர்கள் வெற்றிகண்டு வருகின்றனர்.

இஸ்ரேல் நிறுவப்பட்ட முதல் இருபதாண்டுகளில் தமது தாயக நிலத்திலிருந்து துரத்தி அடிக்கப்பட்ட ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட பாலஸ்தீனர்கள் அகதிகளாக நாடு அற்றவர்களாக அகற்றப்பட்டதுடன் பன்னிரெண்டு இலட்சம் பேர் கேவலமான இழிந்த வாழ்க்கையை நடத்தவேண்டியிருந்தனர்.[26] குறிப்பாக காஸாப்பகுதியில் பாலஸ்தீனர்களுக்காக அமைக்கப்பட்ட அகதிமுகாமில் ஏறக்குறைய 8.3 மில்லியன் பலஸ்தீனர்கள் 1800 ஏக்கர் நிலப்பரப்பில் குடியமர்த்தப்பட்டிருந்த கொடுமை வேறு நாட்டின் அனுபவத்திலும் இல்லாத ஒன்றாகும். அவர்களது அகதி முகாம் வாழ்க்கை ஏறக்குறைய ஐம்பது வருடங்களாக நீடித்தது. இன்றுமே முழுமையான வாழ்வுக்கு பாலஸ்தீனமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகவில்லை. காம்டேவிட் (1979) காஸா ஜெரிக்கோ(1993) வைநதி உடன்படிக்கை (1998) இருநாட்டு தீர்வுத்திட்டம் *(2002- Roadmap)* என சமாதான உடன்படிக்கையின் பட்டியல் நீட்சி பெற்றதே அன்றி பாலஸ்தீன மக்களின் அரசியல் அதிகாரம் நிலைபேறு அடையவில்லை.

அவ்வாறே இஸ்லாமிய நாகரீகத்தின் தொட்டிலாக கருதப்பட்ட மேற்கு ஆசியாவில் எழுச்சி பெற்ற தேசிய இன அடையாளங்கள் சார்ந்த போராட்டங்கள் அழிக்கப்பட்டன அல்லது காலவரையறையின்றி நீட்சி பெறவழிவகுத்தன. மேற்காசிய, ஆபிரிக்க மற்றும் ஆசியப்பிரதேசம் முழுவதும் இஸ்லாமிய தேசிய இன அடையாளம் சார்ந்த தேசிய விடுதலைப் போராட்டங்களின் அழிவுகளுக்கு பின்னால் மேற்குலகின் ஆதிக்கம் காரணமாக அழிக்கப்பட்டது.

குறிப்பாக காஷ்மீர் பிலிப்பைன்ஸ் (மிந்தானா) சாட்டில், குர்டிஷ் மற்றும் செச்சினியா போராட்டங்கள் பாலஸ்தீனம் போன்று மிக மோசமான நெருக்கடிக்குள் அகப்பட்டு அழிந்துபோன வரலாற்றினை கொண்டுடிருக்கின்ற உலகளாவிய அரசியல் அதிகாரப் போட்டிக்குள் மறைந்திருக்கும் நாகரீக மோதல் இஸ்லாமிய நாகரீகத்தை அழிக்கும் நிகழ்ச்சியை பல நூற்றாண்டாக மேற்கெண்டு வருகிறது. மேற்குல ஆதிக்க வடிவம் அவ்வகை முறையியலுக்குள் ஒரு காலத்தில் இஸ்ரேல் ஜப்பானை மட்டுமே முதன்மைபடுத்திய நிலை சீனா, இந்தியா என்ற நிலைக்குள் விரிவுபெற்றுள்ளன. இவை இரண்டு நாடுகளுமே தனித்துவமிக்க நாகரீகங்களை கெண்டிருப்பதுடன் பிற நாகரீகங்களை அச்சுறுத்தும் பாணியில் செயல்பட்டு வருகின்றன. எலிவீஹல் குறிப்பிடுவது போல ஒரு நாகரீகத்தின் எதிர்ப்பதால் இன்னோர் நாகரீகம் தனது இறையாண்மையில் பலமடைகிறது என்ற மரபுலகத்திற்குள் அரசுகள் காணப்படுகின்றன என்றார்.[27] அவ்வகை நிலை படுமோசமான,ஆபத்துமிக்க, அச்சுறுத்தலான எதிர்காலத்தை ஏற்படுத்துமென அவர் எச்சரிக்கின்றார். இதில் இரண்டு விடயம் நடந்துள்ளது. ஒன்று மேற்குலகம் பிற நாகரீகங்களை அழித்தொழிப்பதென்பதை அமுலாக்கி வருவதென்பது இயல்பான ஒருவகை எதிர்வாதமே மேற்கின் மாதிரிக்குள் இசைவு பெறும் கீழ்த்திசை அரசுகளும் மேற்கு மரபுக்குரியதான ஆக்கிரமிப்பு அணுகுமுறைகளை பின்பற்றி ஒருவகை நாகரீக அழிப்பினையும் தாக்குதல்களையும் நிகழ்த்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த்திசை அரசுகளின் ஆக்கிரமிப்புக் கொள்கையும் மேற்குலகுப் பாணியாக மாறிவிட்டது. இவைரெண்டுமே இஸ்லாமிய நாகரீகத்தையே அழிக்கமுயலுகின்றன. கீழ்த்திசை நாடுகளும் அதன் ஆட்சியாளர்களும் மேற்கு மயவாக்கத்துக்குள்ளால் இஸ்லாமிய நாகரீகத்தினை மேற்குலகம் போன்று கையாளுகின்றன. கீழ்த்திசை நாடுகளில் நிகழ்ந்த நூற்றுக்கணக்கான சிவில், எல்லையுத்தங்கள் நாகரீகங்களின் மோதல்களாகவே காணப்படுகின்றன.

## இஸ்லாம் பின்பற்ற வேண்டிய உபாயங்கள்

உலகம் பாரிய நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. எல்லை யற்ற பிரச்சனைகளை எதிர்நோக்க ஆரம்பித்துள்ளது. உலகமயவாக்க சிந்தனை சமுவேல் ஹன்டிங்டன் கூறுவது போல மேற்குலகின் உலகமயவாக்கம் மேற்கையே அழித்துக்கொள்ளும் என்பது போல் அதிகமான அச்சுறுத்தலை சந்தித்துள்ளது. இதனால் மேற்குலக அரசியல் அதிகாரத்தினை விஞ்சும் வலிமை கீழ்திசை நாகரீகங்களுக்கே உரியது. இதனை எட்டப் போராடும் சீன நாகரீகமும்,இந்துநாகரீகமும் தனி முதன்மை வகிக்கும் போது இஸ்ல்மிய நாகரீகம் மௌனமாகியுள்ளது. அல்லது பின்தங்கியுள்ளது. இதற்கு இஸ்லாமிய நாகரீகத்துக்குள்ளே நிலவும் அகமோதலே பிரதான காரணியாகியுள்ளது. காலனித்துவத்திற்கு பிந்திய தலைமுறைகளின் சாதனைகளை மறுதலித்து அராபிய உலகம் குறுங்குழுவாதம், பிராந்திய தேசிய வெறியில் சிக்கியுள்ளன.[28] பன்னாட்டளவில் உலகம் மீளமுடியாத துயரத்தில் மூள்கியுள்ளது. பல அரசுகள் முதுகெலும்பற்ற கோளைத்தனமான அரசுகளாக விளங்கு கின்றன. அமெரிக்க-மேற்கு கூட்டுலக உபாயத்துக்குள் அடங்கி அடிமைப்பட்டு அவதியுறுகின்றன. இஸ்லாமிய அரசுகளே பிற இஸ்லாமிய அரசுகளை அழிப்பதில் ஊக்கிகளாக திகழ்கின்றன. அரபு உலக ஒற்றுமைக்கு பதிலாக பகைமையை வளர்த்து வருகின்றது.

உதாரணமாக பாலஸ்தினத்திற்கு எதிராக எகிப்து, ஜோர்தான், டுனீசியா மொராக்கோ என்பன இஸ்ரேல்-அமெரிக்க கூட்டுடன் செயல் பட்டது போல் ஈராக் போருக்கும் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புக்கும் வளைகுடாக்கூட்டாளிகளும் இஸ்லாமிய நாகரீகத்தின் பெயரால் முரண்பாடும், பகைமைக்குள்ளும் அகப்பட்டிருக்கும் அரபுலக அரசியல் சக்திகள் ஒன்றினைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இஸ்லாமிய நாகரீகத்தின் மீது எழுந்துள்ள பயங்கரவாதம் என்ற மேற்குலகின் திட்டமிட்ட பிரசாரம் போருக்கு திருக்குரான் அரபு மொழியிலிருந்து அனைத்து பிராந்திய வட்டார மொழி வழக்குகளுக்கு மொழிபெயர்ந்து விநியோகிக்கப்பட வேண்டும். இஸ்லாம் என்பது இறைவனிடம் சரணடைதல் என்ற பொருள் பரப்பப்பட வேண்டும். அஸ்ஸலாமு அலைக்கும் என்பது உங்களுக்கு சமாதானம் உண்டாகட்டும்[29] என்னும் அர்த்தம் புரியப்பட வேண்டும். இஸ்லாத்தின் புனிததன்மையும், அதன் உண்மை வாழ்க்கையின் அர்த்தத்தையும் விளங்கிகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இஸ்லாமிய நாகரீகத்தை பேணவும் எதிர்நீச்சல் போடவும் அரசியல் சித்தாந்தத்திற்குள் அதிகமாக உள்நுழைய வேண்டும். இஸ்லாத்தை நவீன அரசியல் இஸ்லாமாக நிறுவியவர்கள் செய்யிது குதுப் (1906-1966) ஆயதுல்லா கொமேனி (1902-1989) தாம் கூறிக்கொண்டு மேலை அரசியல் அறிவுத்துறைப் பண்பாடுகளில் தாக்கத்துக்கு தாமே ஆட்பட்டிருந்தனர்.[30] இந்த விமர்சனம் எழும்போதே இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டத்தின் அவசியமும் முதன்மையும் உணரப்படுகிறது. ஈரானில் நிகழ்ந்த புரட்சி மன்னன் ஷியாவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தது உண்மையே ஆனால் அது நிறுவிய புரட்சிகரமான அரசியல் மேற்குப்பண்பாட்டின் அடிப்படைகளை அதிகம் உள்வாங்கியதுடன் இஸ்லாமியச்சட்டத்தை அரசியலமைப்புச்சட்டமாக கொண்டிருக்க தவறியது.[31]

அரசியல் அதிகாரத்திற்கான போட்டியில் இஸ்லாமிய மதச்சட்டங்களையும், இயற்கையுடன் உறவுகளையும் கருத்தில் கொள்வது அவசியமானது. ஆபிரிக்காவுக்குள், ஆசியாவுக்குள்ளும் ஐரோப்பாவுக்குள்ளும் பரவியிருக்கும் இஸ்லாமியர்கள் வேறுபட்ட புவியியல் சார் அமைப்புக்குள் வாழ்கின்றமையால் வேறுபட்ட மரபுரிமைவாத பண்பாட்டின் இயல்புகளுக்கு அதிகம் உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகிறது. இது தவிர்க்க முடியாத நிலையாகும். இதற்குள் அதிகமுரண்பாடுகளை உருவாக்குவதை தவிர்த்து சர்வதேச பிராந்திய மட்டத்திலான பொதுநலனை கருத்தில்கொள்வது அவசியமானது.

இஸ்லாமிய உலகத்தின் தனித்துவம் மிக்க தலைமைக்கு எழுந்துள்ள வெற்றிடம் நிரப்பப்படவேண்டும். நிறுவனம் சார்பற்ற மத அமைப்பும் அதன் தொழில்பாடும் தெளிவற்ற வளர்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்முறையாக்க முடியாத நெருக்குவாரத்தை எதிர்கொண்டுள்ளது.[32] இதன் மறுபக்கமான வேட்டையாடும் அரசியலதிகாரப் போக்கு இஸ்லாமிய அரசியல் - மத தலைமைகளை இல்லாதொழித்துள்ளது. குறிப்பாக சதாம் உஷைன், கேணல் கடாபி, பில்லேடன், யசீர் அரபாா் அண்மைக்கால உதாரணங்களாகும். இவர்களின் தலைமைகளின் பலவீனமும், எதேச்சதிகாரப் போக்கும் அநாகரீகமானதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் மேற்குலக நாகரீகத்தின் அடாவடித்தனத்தை எதிர்ப்பதிலும் அரபுலகத்தை நோக்கிய மரபுக்குள் செயல்ப்பட்டமையும் வரவேற்கப்படவேண்டியது. சதாமை, அரபாத்தை கடாபியை தோற்கடிக்க இஸ்லாமிய உலகம் அணிவகுத்த துயரம் மேற்குலக நாகரீகத்திடம் இல்லாத இயல்பாகும்.

## முடிவுரை

அமர்தியாசென் குறிப்பிடுவது போன்று மேற்கின் விஞ்ஞானமும் கிழக்கின் ஆத்மீகமும் எதிர் எதிரானதுபோல் மேற்கின் விழுமியங்களும், ஆசியாவின் விழுமியமும், மேற்கின் கோட்பாட்டு மனித உரிமைக்கும் ஆபிரிக்க இஸ்லாமிய மனிதஉரிமைக்கும் இடையிலான எதிர்வாதம் பின்காலனிய முரண்பாட்டை விளைவுரிமையாக்குவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.[33] மேற்குலகின் மேலாதிக்கம் கிழக்குலகை தீவிரமாக அழித்துவருகின்றது. கீழ்திசைவாத சக்திகளின் எழுச்சிகளை காலம்காலமாக பலவீனப்படுத்தி இல்லாமல் செய்து வருவதன் மூலம் மேற்குலக நாகரிகத்தை பாதுகாத்துவருகிறது. இதனை புரிந்துகொள்ள கலிபோர்னிய பல்கலைக்கழக வெளியீடொன்றை நோக்குவோம்.

மேற்குலக பேரலைக்குள் கீழ்திசை பண்பாடுகளை ஆதிக்கம் செய்ய பொருள் வயமான வாழ்க்கையை பயன்படுத்திக்கொண்டன. முதலில் இஸ்லாமிய நாட்டு தலைவர்களை தமது நிதிமூலங்களால் அடிமைப்படுத்தினார்கள். பின்பு தமது வங்கி அமைப்புக்களினாலும் பொருளியல் இயந்திரத்தின் மூலமாகவும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பின்பு அரசாங்கம், நீதி, கல்விக்கோட்பாடுகளில் மேற்குலக நடைமுறைகளைப் புகுத்தினர். ஆற்றல் வாய்ந்த இஸ்லாமிய நாடுகளில் கூட தமது எண்ணங்களை புகுத்த முடிந்தது. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் நீலப்படங்களையும், மதுக்கோப்பைகளையும், கேளிக்கை பொருட்களையும், தமது கதைகளையும் செய்திகளையும் தாறுமாறான கருத்துக்களையும் பரப்பினர்.

இது போதாதென்று இஸ்லாமிய நிலத்தில் அறிவியல் பண்பாட்டு நிறுவனங்களை நிறுவினர். இஸ்லாமிய மக்களிடம் ஐயத்தையும் முரண்பட்ட கருத்துக்களையும் பரப்பினர். தம்மைத்தாமே எப்படி தாழ்த்திக்கொள்வது தமது மதத்தை எப்படி இழிவுபடுத்துவது, மரபுகளிலிருந்து நம்பிக்கைகளிலிருந்தும் எப்படி விலகிவாழ்வது என்பதை கற்றுக்கொடுத்தனர்.[34] இதன் மீட்பில் மேற்கை நம்புங்கள் என்பதை மேற்குலகம் இஸ்லாமியர் மீது நிகழ்த்திவருகிறது. இதன் அடுத்த கட்டமே அரபுலக புரட்சியாகும்.

இதனை வளரவிடாது தடுக்கவேண்டுமாயின் இஸ்லாமிய நாகரிகம் மீள்உருவாக்கத்திற்குள் இணைக்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் மனிதஉரிமைக் கருத்துக்கள் பரப்பப்பட வேண்டும் ஆட்சி அதிகாரத்தினையும் அரசியல் நடவடிக்கைகளையும் மக்கள் சார்பில் உருவாக்கப்படல் வேண்டும். பொருளியல் மரபுகளுக்குள்ளால் எழுந்த இஸ்லாமியச் சமூகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இஸ்லாமிய அரசுகளும் அவற்றின் கொள்கைகளும் விளங்குதல் வேண்டும். அதுவே இஸ்லாமிய நாகரிகத்தின் எதிர்கால உத்தரவாதத்தினையும் பிறநாகரீகம் சார்ந்த கீழ்திசைவாதங்களை உத்தரவாதப்படுத்த முடியும் "துணிந்து செல் இஸ்லாம்" என்ற வாசகத்தை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டிய தேவை எழுந்துள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. *Polity, Vol.1.No.2 April-May,2003*

   *தமிழில் வாசிப்பதற்கு சியா உத்தீன் சாதார்: எட்வாட் சயித்தின் கீழ்திசைவாதம், பிரவாதம் தொகுதி 4 ஜீலை 2005.*

2. *Ibid. Nkyjpf thrpg;Gf;F Zuuddin Sardar; oriatalism viva Books Privat Limited, New Delhi 2002.*

3. *மு. திருநாவுக்கரசு, ஒற்றைமைய அரசியல் போரும் சமாதானமும் காலச்சுவடு வெளியீடு. 2008.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மலிஸ் ரூத்வென், இஸ்லாம், (மிகச்சுருக்கமான அறிமுகம். அடையாளம் (மொ.பெ) 1997. பிறநாகரிகங்கள் மேற்கின் கிறிஸ்தவ பரம்பலுக்கு பின்பு நிறுவனவடிவத்தினை தமக்கென கட்டுருவாக்கம் செய்து கொண்டன. குறிப்பாக இந்துமதம், பௌத்தமதம் இரண்டு கீழைத்தேச நாகரிகமும் நிறுவன இயல்பினை ஏற்படுத்திக் கொண்டன. ஆனால் இஸ்லாம் மட்டும் தன் பழங்குடி வார்ப்பிலிருந்து வெளிவரவேயில்லை. குறிப்பாக ஆத்மீக அதிகார கருத்தினை வைத்திருந்த ஷியா பிரிவினரே ஓரளவு நிறுவனம் சார்பினை தக்கவைத்தாலும் மதத்தை கடந்து வடிவமாக எழவில்லை. இதுவே இராணுவ ஆட்சிகள் பழங்குடியின் தொடர்ச்சியாக சமூகமாற்றத்தை எட்டியிருந்தது.

5. உலகமயவாக்கத்தின் பிரதான எதிரி நாகரிகங்கள் நாகரிகங்களை அழித்து உலகத்தை ஒரு குடையின் கீழ்கொண்டுவர துணியும் மேற்கின் அரசியல் பொருளாதார இராணுவ கலாசார விரிவாக்கமே உலகமயவாக்கம். ஏனைய நாகரிகங்கள் மேற்கின் உலகமயவாக்கத்திற்கு இனசந்துபோகும் இயல்பூக்கத்தினை மத விம்பத்துக்கூடாக வைத்துள்ளது. பேளத்தம் கணவாதத்தையும், கன்பூசியஸம் மாற்றத்தையும், இந்துமதம் நிலையாமையையும் தம்மதவாதங்களாக கொண்டிருக்கின்றன. இஸ்லாம் மட்டுமே இணைப்பையோ, சேர்க்கையையோ, புறஉலகை உள்வாங்காத "சரணடைதல்" என்ற மதமையவாதத்தை கொண்டு இயங்குகிறது.

6. Samuel P. Huntington; The clash of civilizations.Foreign Affaries,.Vol.72,Number 3, June/July 1993.

7. மேற்குலக கிறிஸ்தவ நாகரிகம் இஸ்லாமிய நாகரீகம் இலத்தீன் அமெரிக்க நாகரீகம், ஆபிரிக்க நாகரீகம், சீன நாகரீகம், இந்து நாகரீகம், பௌத்த நாகரீகம் என அவை ஏழினையும் வகைப்படுத்தினார்.

8. நாகரீகங்களைப்பற்றிய அளவீட்டை சாமுவேல் ஹண்டிரங்ரன் முன்வைக்கும்போது மேற்குலகக் கிறிஸ்தவ நாகரிகத்தை உயர்வானதாகவே அளவீடு செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. *Samuel .P. Huntington.opp.cited.*

10. *Ibid,*

11. *Ibid.,*

12. *Kishore mabbubani, the dangers of decadence, what the rest can teach the west foreign Affairs September/October.1993.P.12*

*Fouad Ajami; The Summoning, But they said, we will not hearken foreign Affairs, September 1993, P.2-9*

13. *Samuel P. Huntington,opp.cited.*

14. *Fouad Ajami; The Summoning: foreign Affairs September/October.1993.P.06*

15. *யமுனா இராஜேந்திரன்: அபுகாரிப்: பேரழிவின் எதிர்விம்பம்: உயிர்மை ஜீன் 2004*

16. *www.wsws.org, 2003 February.*

17. *Ibid.*

18. *யமுனா ராஜேந்திரன்*

19. *மேற்படி கட்டுரை*

20. *மேற்படி கட்டுரை*

21. *மேற்படி கட்டுரை*

22. *B.B.C. News. 08.05.2004*

23. *Edword said; palastiniam problems; polity,Vol.1.No.2 April-May,2003.*

24. *பார்க்க கே.ரீ.கணேசலிங்கம் தென்னாசிய அரசியல் கலாசாரம் சேமமடு வெளியீடு 2008.*

25. மேற்படி

26. மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. எலீ வீஸல்: உரையாடல்கள் (மொ.பெ) (லதாராமகிருஸ்ணன்) பக். 50-51, நித்தியா பதிப்பகம். ஜீன் 2008.

28. Edword said; P.29

29. மலிஸ் ரூத்வென், இஸ்லாம், (மிகச்சுருக்கமான அறிமுகம். அடையாளம் (மொ.பெ) 1997. பக் 1-4

30. மேற்படி நூல் பக்- 09

31. மேற்படி நூல்

32. மேற்படி நூல் பக்- 13

33. Michaet Dusche; Europe and the Islamic world. Perceptions and stereotypes; http// space. Areor.de/mdusche. Italy. 23 & 24 March 2007.

34. மலிஸ் ரூத்வென், பக். 162-163



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதமும் உலக அரசியலும்

## அறிமுகம்

செப்ரெம்பர் தாக்குதல் என பிரபல்யமடைந்துள்ள அமெரிக்கா மீதான தாக்குதலை அடுத்து "பயங்கரவாதம்" என்பது புதிய சித்தாந்தமாக மாற்றமடைந்தது. இதனை சித்தாந்தமாக அறிவியல் தளத்திலிருந்து ஆராய்தல் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகவே அமையும். ஆனால் உலக ஆதிக்கத்திற்குரித்தான அம்சமாக பரிசீலிக்கும் போது மிக நீண்டகாலமாக நிலைத்திருந்த சோஸலிஸம் எதிர் முதலாளித்துவம் என்பது மறைந்த கையோடு பயங்கரவாதம் உலகை ஆளுகைக்குட்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒன்றாக கருதுகின்ற நிலை வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் அமெரிக்கா மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து அரசுகளும் அரசியல், பொருளாதார, இராணுவ, ஒழுங்கமைப்புகளும் தமக்கிடையேயும் வெளிநாடுகளுடனும் இதர அமைப்புக்களுடனும் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள பயங்கரவாதத் தினை பயன்படுத்துகின்றன. இதனாலேயே பயங்கரவாதத்தினை புதிய சித்தார்ந்தமாக கருதவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசுகளுக்கு இடையிலான நட்பினையும், உதவிகளையும் தீர்மானிப்பது மட்டுமன்றி போர்களை நிகழ்த்துவதற்கான பிரகடனங்களாக பயங்கரவாதம் விளங்குகின்றது.

பயங்கரவாதம் என்பதை வரையறுப்பது தொடர்பான சிக்கல் உலக நாடுகள் ஒன்றுசேரும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஏற்பட்டது. எந்த அடிப்படையில் பயங்கரவாதம் என்பதை வரையறுப்பது. தனித்து கொள்கை வடிவமாக அன்றி செயல்முறை வடிவமாக பயங்கரவாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா என்பன வகைப்படுத்தியுள்ளன. அவையும் குறிப்பாக இந்தியர்களைப் போன்று ஒரே செயல் வடிவத்தை இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு கொடுக்க முயலுகின்றன. இஸ்லாமிய தீவிரவாதம் என்பதையோ அல்லது இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பதையோ, அவர்கள் பயங்கரவாதமென உருமாற்றியுள்ளனர்.

அதாவது தீவிரவாதம் என்ற எண்ணக்கருவாக்கத்தின் வளர்ச்சி புரட்சிகரமான விடுதலை நோக்குடனோ அல்லது ஒரு அம்சத்திற்கான அதிவேகத்தன்மையுடனோ அல்லது இழப்பீடுகளைக் கருதாது எதிரியின் இலக்குகளை நிர்மூலமாக்குவதையோ கருதமுடியும். இதில் ஆயுதப் பிரயோகம் முதன்மையானதாக அமைவதுடன் ஆரம்பத்திலிருந்து மார்க்சிய சிந்தனையினால் கவரப்பட்ட பிரிவினராகவும் விடுதலையை அல்லது தனியரசை இலக்காகக்கொண்டு போராட்டம் நடாத்துகின்ற பிரிவினரை குறிப்பதாகவுமே காணப்பட்டது.

ஆனால் இத்தகைய தீவிரவாதப் போக்கு அரசியலிலும், முற்போக்கு சிந்தனையிலும் பிரயோகப்படுத்தும் சொல்லாக விளங்கியது. அதனால் மிதவாதிகளில் தீவிர செயல்முறைகளை வெளிப்படுத்தி அரசியலில் ஈடுபடுபவர்களை தீவிரவாதிகள் என்று கருதுவது வழமையாக கீழைத்தேச நாடுகளில் அணுகுமுறையாக விளங்குகின்றது. மேற்கு நாடுகளில் இத்தகைய தீவிரவாதப் போக்கு இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு அதிகமாக காணப்பட்டாலும் பின்னர் படிப்படியாக தணிந்து வருகிறது குறிப்பாக ஐரோப்பாக் கண்டத்தில் கிழக்குப் பகுதியில் மிகப் பிந்தியகாலம் வரை இத்தகைய தீவிரவாத ஆயுதப் போராட்டங்கள் அதிகமாக காணப்பட்டன. தற்போதும் மேற்கு ஐரோப்பாவில் ஸ்பெயின், பிரித்தானியா போன்ற நாடுகளில் தீவிரவாத ஆயுதப்போராட்டங்கள் இடம் பெற்றுவருகின்றன. இத்தகைய போராட்டங்கள் இன, மொழி, மத ரீதியாக நிகழ்வதென்பதுடன் சுயநிர்ணயத்திற்கான போராட்டங்களையும் இனங்களின் விடுதலைக்கான போராட்டங்களாகவும் அமைந்திருந்தன. அவ்வாறான போராட்டத்தினால் பல அரசுகள் உதயமாகியுமுள்ளன. தேசியவாதம் என்ற அமைப்பு முறைக்குள் உட்பட்ட விடுதலைப் போராட்டங்களை கடந்த நிலையில் எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன விடுதலைப் போராட்டங்களை உபதேசியவாதங்களாக விபரித்த துடன் அவற்றை இருதுருவ அதிகார அரசியல் காலத்தில் நிலைத்திருந்த இரு சக்திகளும் *(USA, USSR)* விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு எதிர்சக்தியின் பலத்தை முறியடிக்க திட்ட மிட்டன. அவ்வாறான விடுதலைப் போராட்ட அமைப்புக்களையும் தனிமனித அரசியல் தலைமைகளையும் அவர்களது புரட்சிகரமான கருத்துக்களையும் ஆதரிப்பதன் வாயிலாக முகாம் அரசியலுக்கான ஆதரவுகளை திரட்டிக் கொண்டதுடன் எதிர் எதிரான போட்டித் தன்மையில் மூழ்கியிருந்த அரசுகளை பரஸ்பரம் தீர்த்துக் கொண்ட நிலையும் ஏற்பட்டது. இதில் இரு சித்தாந்தங்கள் நிலையான போட்டிக்குள் ஈடுபட்டன.

வலதுசாரிகள் என்று அடையாளப்படுத்திய முதலாளித்துவ சக்திகள் விடுதலைப் போராட்டங்கள் என்பதை விட ஆயுதம் தாங்கிய இராணுவ அரசியல் பிரிவுகளை ஊக்குவித்தமையும் அவற்றுக்கு பக்கபலமாக நிதி ஆயுத உதவிகளை வழங்கிவந்தன. இதில் இடதுசாரியென அடையாளப்படுத்திய சோஸலிஸ்ட்டுக்கள் குறைந் தளவு போட்டித்தன்மையை பிரயோகித்தாலும் ஒடுக்கப்பட்ட இனங்க ளின் விடுதலைப்போராட்டங்களுக்கு பக்கபலமாக இயங்கின. பல ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டங்களை வளர்த்து தனியரசுக் கான வாய்ப்புக்களை சோஸலிஸ முகாம் உருவாக்கியிருந்தது.

ஆனால் இருதுருவ அரசியல் சரிந்ததுடன் சோஸலிச முகாம் தகர்ந்ததுடன் விடுதலை மற்றும் ஆயுதப்போராட்டங்கள் நிர்கதியாகின. சோஸலிசத்தில் தங்கியிருந்த போராட்டங்களும் அதன் உதவியுடன் முதலாளித்துவத்தை எதிர்த்தும் போராடிய அரசுகளும் பாரிய நெருக்கடியை அடைந்தன. வெறுமனமே சோஸலிஸமுகாமை எதிர்க்க வேண்டும். என்பதற்காக முதலாளித்துவம் உருவாக்கி வளர்த்த பல ஆயுதப்பிரிவுகளும், போராட்டக் குழுக்களும் முதலாளித்துவத்தின் எதிரிகளாக மாறும் நிலை விரிவடைந்து முதலாளித்துவத்தின் பிரதான எதிரியான சோஸலிஸம் வீழ்ச்சி கண்டதும் எற்பட்டது. சோஸலி ஸத்தை வீழ்த்துவதற்காக உருவாக்கிய ஆயுதப் போராட்ட அமைப்புக்க ளையும் பிரிவுகளையும் முதலாளித்துவம் கைவிட்டதுடன் அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு எதிரான சவாலான பிரிவுகளாக ஒரு போதும் நினைத்துக் கொள்ளவில்லை. அத்துடன் அவற்றுக்கான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் தடுக்க முயன்றதையும் காணலாம். இதனால் முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராகவும் குறிப்பாக அமெரிக்கா தலைமையிலான வல்லரசுவுக்கு எதிராகவும் அத்தகைய ஆயுதப் போராட்டக் குழுக்களின் சில நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தன.

அதாவது அமெரிக்க வல்லாதிக்கத்தின் அரசியல் பொருளாதார இராணுவக் கொள்கைகளை எதிர்க்கும் நிலையினுள்ள ஆயுதப்பிரிவுகள் அமெரிக்காவின் எழுச்சியைக் கட்டுப்படுத்த இராணுவ ஆயுத வன்முறையாகக் கொண்டன. அவற்றில் மிகப்பிரதான எதிர்ப்பையும் நெருக்கடியையும் முகங்கொடுக்கும் அமைப்புக்களாகவும் இனங்களாக வும் இஸ்லாமியக் குழுக்கள் காணப்பட்டன. அவற்றின் நடவடிக்கைக ளையும் செயல்பாடுகளையும் அமெரிக்கா தலைமையிலான சக்திகள் தமது நலன்களுக்காக பயன்படுத்த விளைந்த போது இரு பிரிவுகளுக்கு மிடையில் முரண்பாடு வெடித்தது. இது மேற்குக்கும் இஸ்லாமிய உலகிற்குமான ஏற்கனவே வளர்ந்திருந்த பகையின் தொடர்ச்சியாகக் கூட அமைந்திருக்க வாய்ப்பு அதிகமுள்ளது.

இஸ்லாமியர்களின் துருக்கிய ஒட்மன் இராட்சியத்தின் எழுச்சி யானது ஐரோப்பிய வரலாற்றில் மறக்கமுடியாத அம்சமாகவே அமைந்திருக்கின்றது அதனை அண்டிய முழுக்காலப்பகுதியும் இஸ்லாமிய - மேற்குலக முரண்பாடாகவே வளர்ச்சியடைந்திருந்தது. அத்தகைய நிலை எழுந்த மிக இக்கட்டான மாறுதலை உருவாக்கிய காலப்பகுதியாக இருதுருவ அரசியலின் வீழ்ச்சி அமைந்திருந்தது.

ஒற்றைமைய உலகம் அறிமுகமான பின்பு உலகலாவிய மட்டத்தி லும் இஸ்லாமிய மேற்குலக மட்டத்திலும் ஏற்கனவே வளர்ந்திருந்த முரண்பாடு தீவிரமடைந்தது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி *(World Economic Crises)* உலகமயப்படுத்தல் *(Globalization)* என்பன எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் சவாலாகக் கொள்ளும் நிலையில் "பயங்கரவாதம்" புதிய சித்தாந்தமாக அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்திற்கு கிடைத்தது. அத்தகைய பயங்கரவாதம் இஸ்லாமியர்களை இலக்கு வைத்ததாக ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தபோதும் காலப்போக்கில் ஏற்பட்ட பொதுமைத் தன்மையாக ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த விடுதலைப்போராட்ட அமைப்புக்களையும் நோக்கி பிரயோகிப்பதாக மாறியது. அவ்வாறான அணுகுமுறைக்கு அரசுகளுக்கிடையிலான உறவுநிலை பிரதான காரணியாக விளங்கியது. பயங்கரவாதமொன்றை சித்தாந்தமாக பிரகடனப்படுத்திய அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்திற்கும் அதனை தமக்குரியதாகவும் சார்பாகவும் பிரயோகிக்க விளைந்த பிராந்திய சக்திகள் தமக்கு எதிரான சக்திகளை பயங்கரவாதிகள் என்றும் பயங்கரவாதத் திற்கு துணை போகின்றவர்கள் என்றும் குற்றம் சாட்டினர். இதனால் சில அரசுகளுக்கிடையிலே பகைமையும் நெருக்கமும் வளர்ச்சிய டைந்தது. இதனை விளங்கிக்கொள்ள பின்வரும் எடுத்துக்காட்டை நோக்குவோம்.

அமெரிக்கா 9/11 தாக்குதலுக்கு பின்னர் பயங்கரவாதம் என்பதைப் பிரகடனப்படுத்தியது. இதனை உள்வாங்கிக்கொண்ட இந்தியா ஏற்கனவே பிரச்சாரப்படுத்தி வந்த பயங்கரவாதத்தினை மேலும் தீவிரப்படுத்தியதுடன் பாகிஸ்தானின் ஆட்சியை பயங்கரவாதத்திற்கு ஆதரவான நாடு எனக் குற்றஞ்சாட்டியதுடன் அதனுடனான உறவுகளை அவ்வப்போது பகைத்துக் கொண்டது. மறுபக்கத்தில் அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகளுடன் நட்புறவையும் அதிக உடன்பாடு களையும் இந்தியா சாத்தியப்படுத்திக் கொண்டது. இவற்றுக்கு அப்பால் "சார்க" ஆசியான், ஐரோப்பிய யூனியன் என்ற அரசியல் பொருளாதார கூட்டுடன்பாட்டு அமைப்புக்களுடன் பயங்கரவாதம் தொடர்பான இணக்கப்பாட்டை உறவின் ஓரம்சமாக மாற்றியது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான உறவு நெருக்கமாக அமைந்தபோதும் மறுபக்கத்தில் பாகிஸ்தானுடனான நட்பினை அமெரிக்கா இழக்காத போக்கையும் கடைப்பிடிக்கத் தவறவில்லை. எனவே இந்தியாவும், அமெரிக்காவும் பயங்கரவாதம் தொடர்பான அணுகுமுறையில் வேறுபட்ட போக்கையும் காணக்கூடியதாக உள்ளது. அதனால் இந்தியா ஈழத்ததமிழர் மத்தியில் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் போராட் டத்தையடையும் அணுமுறையையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு பயங்கரவாத அமைப்பாக சித்தரித்த விடயத்தையும் அமெரிக்கா பின்பற்ற வேண்டுமெனஇந்தியா பிரச்சாரப்படுத்தியது. அமெரிக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டன், கனடா போன்ற அரசுகள் தமிழீழ விடுதலைப்புலிகளை தமது நிலப்பரப்புக்களில் தடைசெய்த இயக்கமாக கருதுகின்ற நிலமைக்கு அடிப்படையில் வித்திட்ட அரசு இந்தியாவேயாகும். இலங்கை அரசுகூட விடுதலைப்புலிகள் மீதான தடையை தளர்த்திய துடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் 2002 ஆண்டிலிருந்து தளர்த்தியுள்ள நிலையில் பிரித்தானியா, அமெரிக்கா என்பன தொடர்ந்து பேணுவதற்கு இந்தியாவின் அழுத்தங்களும் பின்னணியாக உள்ளன.

சர்வதேச பயங்கரவாதம் என்பது பற்றிய அடிப்படையையும் அதில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் விரிவாக நோக்குவோம். பயங்கரவாதம் என்பது அரசியல் விதிமுறைகளுக்கு இணங்காத வன்முறையை வெளிப்பாடாகக் கொண்டிருப்பது எனக் கூறிக்கொள்ள லாம். நிர்ப்பந்தத்தினூடாக விளைவுகளையும் இலக்குகளையும் அடைய முயலுகின்ற அச்சமே பயங்கரவாதம் ஆகும். அதுமட்டுமன்றி நியாயமற்ற இலக்குகளை இலட்சியமாகக் கொண்டு இயங்குகின்ற தன்மையை பயங்கரவாதம் எனலாம்.

பயங்கரவாதத்தின் நடவடிக்கைகள் அரசியல் இராஜதந்திர தலைமைகளையும் அதிகாரிகளையும் கடத்துதல், கொலைசெய்தல், விமானங்களை விபத்துக்குள்ளாக்கி அழித்தல் அல்லது கடத்துதல், பொது, தனியார் சொத்துக்களை அழிவுக்குள்ளாக்குதல், மற்றும் பிரஜைகளை அவமதித்தல், கொலைசெய்தல், காயப்படுத்தல் என்பன வற்றை பயங்கரவாதம் எனலாம். இது தற்போது மேலும் பல பரிமாணங்களை உருவாக்கிவிட்டது. குறிப்பாக உளவுத் தகவல்களை முறைமையற்ற தொடர்பாடல் மூலம் வேறுவேறு நாடுகளிலுள்ள பயங்கரவாதக் குழுக்களுக்கிடையில் பரிமாற்றப்பட்டு வருகின்றது. அத்தகைய பரிமாற்றத்தில் நிதிதிரட்டுதல், ஆயுதங்களை கடத்துதல், கொரில்லா பயிற்சியைப் பெறுதல் பாதுகாப்பான புகலிடங்களைப் பெறுதல் எனப்பல நோக்கங்கங்களை கொண்டதாக அமைந்துள்ளது. பயங்கரவாத அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு பல அரசாங்கங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏனைய அரசுகள் மீதான தாக்குதலுக்கும் எல்லை கடந்த நடவடிக்கைகளுக்கும் உதவிவருவதனையும் காணக்கூடியதாக உள்ளது. இந்த எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டிய பயங்கரவாதத்தினை சில அரசுகள் ஏனைய எதிரி அரசுகள் மீது திட்டமிட்டு திணிக்கின்ற நடவடிக்கையூடாக அவ்வரசை பலவீனப்படுத்த பயங்கரவாதத்தை பயன்படுத்துகின்ற நிலை வளர்ந்துள்ளது. இதில் அரசியல் ரீதியான பல இலாபங்களை பயங் கரவாதத்தினை அண்டிவிடும் அரசுகளுக்கு கிடைப்பதனால் பயங்கர வாதம் என்ற அம்சம் தொடரான விடயமாக வளர்ந்து செல்கின்றது.

பயங்கரவாதம் என்பது அதிகார அரசுகளின் நடவடிக்கையினால் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒன்றாக வளர்ந்துள்ளது. இது நிறுவனமயப் படுத்தப்பட்ட அரச பயங்கரவாதத்தினை குறிப்பதாகவேயுள்ளது. அரச பயங்கரவாதம் என்பது சுதேச அரசுக்கு எதிராக நியாயமான போராட் டத்தை மேற்கொள்ளுகின்ற தேசியவிடுதலை இயக்கங்களை ஜனநாயகத்துக்குப் புறம்பாக அழிக்கும் இலக்கை கொண்டியங்கும் நடவடிக்கைகளை குறிப்பிடலாம். சர்வதேச பயங்கரவாதம் தேசிய வாதத்திலிருந்து வேறுபட்டதாக இனங்காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச பயங்கரவாதத்தின் பிரச்சனை களை நிர்ப்பந்தத்தின் மூலமாக அழிவை ஏற்படுத்துகின்றதை குறிக்கும் வகையிலான பிரகடனங்களை உருவாக்கியுள்ளது. அவற்றில் விசேட மான பிரகடனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் உலக மன்றம் பல்வேறு சர்வதேச பிரகடனங்களை உருவாக்கி அமுல் படுத்தி வருகின்றது. அதன் பிரகாரம் குறிப்பான சர்வதேச பயங்கரவாதப் பிரச்சனையாக பின்வரும் விடயங்களை ஐ.நா இனங்கண்டுள்ளது.

1970 ஆம் ஆண்டில் - விமானங்களைக் கடத்துதல்

1973 ஆம் ஆண்டில் - இராஜதந்திர நிலைகளைத் தாக்குதல்

1979 ஆம் ஆண்டில் - பாதுகாப்பு பிரிவினரை கொலை செய்தல்

1989 ஆம் ஆண்டில் - உடலியல் பாதிப்புகளைச் செய்யக்கூடிய அணுவாயுதங்களை வைத்திருத்தல், ஆட்களை திரட்டுதல், அவற்றைப் பயன்படுத்தல், பாரியளவில் நிதி திரட்டல் பயிற்சியளித்தல்.

1999 ஆம் ஆண்டில்- பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டில்- பயங்கரவாதத்திற்காக நிதிதிரட்டுதல் மற்றும் அதனை இரகசியமாக வைத்திருத்தல் என்பன சர்வதேச பயங்கரவாதப் பிரச்சனையாக ஐ.நா கருதியதுடன் மிக குறைந்தளவான தண்டனை யையே இப்பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கியது.

1972 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 08 இல் ஐ.நா பொதுச் செயலாளர் பொதுச்சபையில் சர்வதேச பயங்கரவாதம் பற்றிய பிரச்சனையை வேண்டுகோளாக முன்வைத்தார். இந் நிகழ்ச்சி நிரலின் கீழ் அடிப்படை மனித உரிமைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் மனித வாழ்வை அவமதிக்கும் வன்முறை சார்ந்த பயங்கரவாத நடவடிக் கைகளை தடுக்கும் நோக்குடன் தயார் செய்யப்பட்டது. வன்முறையூ டாக அழிவை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்து வதுடன் உலக சமூகம் சமாதான பாதைக்கு முக்கியத்துவம் அளிக்கும் விடயங்களில் கவனம் செலுத்துவதையும் செல்வாக்கு செலுத்துவதையும் இறுதி தீர்வாக கொள்வது சாத்தியப்பாடுடைய தெனவும் கருதப்பட்டது. இவ்வேண்டுகை ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களால் கண்டிக்கப்பட்டதுடன் பயங்கரவாதமென்ற சர்ச்சையால் ஆசிய- ஆபிரிக்க நாடுகளை தனிமைப்படுத்துகின்ற நடவடிக்கை எடுக்கப்படு கின்றதெனவும் கூறினார்.

இதனால் பொதுச்சபை ஒரு விவாதத்துக்கு தயாரானதுடன் ஆறு விசாரணைக்குழுக்களை உருவாக்கி பரிசீலனை செய்ய முடிவெடுத்து பயங்கரவாதத்திற்கும் சுதந்திரத்திற்கான போராட்டத்துக்கும் இடையில் சமநிலை காணமுடியாததென்பதை தீர்மானித்ததோடு குடியேற்றவாதத் துக்கு எதிராக போராடுகின்ற தனிமனிதர்களை அமைப்புக்களையும் வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக கிளர்ந்தெழுவதனையும் பயங்கரவாதமென கருதமுடியாதென ஆசிய - ஆபிரிக்க தலைமைகள் கூறின அரசபயங்கரவாதம் பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்துவது போல் தனிப்பட்ட குழுக்களும் கொரில்லாக் குழுக்களும் மேற்கொள் கின்ற நடவடிக்கைகள் பாரிய அழிவுகளையும், பாதிப்புக்களையும் உருவாக்கி வருகின்றதனை விவாதிப்பது அவசியமானதெனவும் பொதுச்சபையில் குறிப்பிடப்பட்டது. மேலும் சில நாடுகள் தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 320
Acc No 694

சுயநிர்ணயத்துக்கான போராட்டங்களை ஆதரிக்கின்றன. இதை எந்த வகையான நடவடிக்கையூடாகவும் சுதந்திரத்தை அடையலாமென அவ்வரசுகள் கருதுகின்றன. பெரும்பான்மையினருக்கு எதிராக பல கொரில்லா அமைப்புக்கள் வன்முறையை பிரயோகித்து சுயநிர்ணயம் என்ற இலக்கை அடையலாமென கருதுகின்றமையும் அவை நியாயத்துக்கு புறம்பான பயங்கரவாத நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் ஐ.நா இன் பொதுச்சபை தீர்மானித்தது.

மேலும் மேற்கு நாடுகள் அமெரிக்கா உட்பட்ட சுயநிர்ணயத்திற்கான அல்லது தேசிய விடுதலைக்கான போரை பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து பெரியளவில் இல்லாவிட்டாலும் வேறுபடுத்திப் பார்க்க அந்த நாடுகளின் புத்திஜீவிகள் விரும்புகின்றனர். ஆனால் நியாயத்துக்கு முரணான வன்முறைப்பிரயோகத்தின் வாயிலாக பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து சுயநிர்ணயத்தை கட்டியெழுப்ப முடியாதது என்பதையும் வலியுறுத்த தவறவில்லை ஆசிய - ஆபிரிக்க நாடுகள் விடுதலைப் போராட்ட வீரர்களையும் பயங்கரவாதிகளையும் வேறுபடுத்த முயல்வதை மேற்கு நாடுகள் ஏற்றுக்கொள்ளாத நிலையும் அரசபயங்கரவாதத்தை *(State Terrorism)* பலமாக கண்டிக்கின்ற போக்கும் மேற்கு நாடுகளிடம் காணப்படுகின்றது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு 16 அரசுகள் அனுசரணை வழங்குவதாக கூறப்பட்டது. அவற்றில் சில நாடுகள் *Afghanistan, Algeria, Guyana, India, Kenya, Madgascar, Mali, Mauritania, Suadan, Yugoslavia, and Zambia* என்பனவாகும். இவை சட்டரீதியான அரசுகளாக காணப்பட்டபோதும் பயங்கரவாத நடவடிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இனவாத, குடியேற்றவாத, உணர்வுகளுடன் செயல்பட்டு பயங்கரவாதத்தினை ஊக்குவித்து வருகின்றன. 1972 ஆம் ஆண்டு ஐ.நா சபையின் தீர்மான வரைபு இல. 3034 சர்வதேச பயங்கரவாதத்தினை கண்டித்ததுடன் மக்களின் உரிமைகளை, அவர்களது சுயநிர்ணயத்தையும் அங்கீகரித்து ஐ.நா இன் பொதுசபை சுயநிர்ணயத்திற்கான உரிமையைக் கோரிப் போராடும் மக்கள் வன்முறைசார்ந்த பயங்கரவாதிகளிடம் தங்கியிருக்கும் நிலையையும் உலக நாடுகளில் அவதானிக்க முடிகிறது எனக்கூறுகின்றது. விடுதலைக்கான ஆயுதப்போராட்ட அமைப்புக்கள்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல போர், சச்சரவு, எதிர்த்து போராடுதல் என்பவற்றுக்குள் சிக்கவைத் துள்ள நிலையில் தேசியவிடுதலைப் போராட்டங்கள் காணப்படுகின்றது என ஐ.நா இன் பிரகடனம் கூறுகின்றது. உலகத்தில் கணிசமான மக்கள் இன்னுமே உணர்வு ரீதியாகவோ, நடத்தை ரீதியாகவோ குடியேற்றவாத ஆட்சிமுறையிலிருந்து விடுபடாதவர்களாகவேயுள்ளனர்.

ஐ.நா பல பயங்கரவாத பிரிவுகளை நிறுவமயப்படுத்தலுக்குட் பட்ட பிரிவுகளாக செயல்படுத்துகின்றன என்றும் அரசின் ஆணையான சட்டத்தை கட்டுப்படுத்துபவையாக தமது பயங்கரவாத நடவடிக்கை களை மேற்கொள்பவையாகவும் உள்ளது என்றும் அதே நேரத்தில் அவ்வமைப்புக்கள் தேசிய விடுதலை இயக்கங்களாக செயல்பட்டு சுயநிர்ணயத்திற்கான போராட்டங்களை பகுதியான வேலைத்திட்டமாக கொள்ளுகின்ற தன்மையும் காணமுடிகிறதென கூறுகின்றது. சுயநிர்ண யத்துக்கான போராட்டங்களும் பயங்கரவாதமும் முரண்பட்டதென ஐ.நா கருதுகின்ற போது தேசிய விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் *(National Liberation Movements)* பயங்கரவாத அமைப்புக்களின் அணுமுறைகளை பின்பற்றி அத்தகைய இலக்கை அடைய சர்வதேச சட்டங்கள் இடங்கொடுக்காது எனவும் குறிப்பிட்டுள்ளன. அதாவது சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதித்தல் மனிதஉரிமைகளை அனுசரித்து நடத்தல் என பல விடயங்களை விடுதலைப்போராட்ட அமைப்புக்கள் பின்பற்ற வேண்டுமென ஐ.நா அமைப்பு எதிர்பார்க் கின்றது. அதனடிப்படையில் ஐ.நாஅமைப்பு பல நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு போருக்கு பிந்திய தீர்வுக்கான ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் *(ANC)* தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு *(SWAPO)* பாலஸ்தீன விடுதலை அமைப்பு *(PLO)* என்பனவற்றை குறிப்பிடலாம். இவற்றுக்கு மேலதிகமாக கிழக்கு திமோரின் விடுதலைப் போராட்டதை அங்கீகரித்த ஐ.நா மன்றம் அதன் தனிநாட்டுக் கோரிக்கைக்கான வலுவை இனங்கண்டு கோரிக்கையை அங்கீகரித்துள்ளது. கிழக்கு திமோரியரின் நடவடிக்கையில் அமெரிக்கா வின் பங்கு அதிகமாக காணப்பட்டாலும் அதன் தீர்மானங்களின் பயங்கரவாத பிரகடனத்துக்கு மாறான தேசியவிடுதலைப் போராட்ட நடைமுறையாக நோக்கப்படுகின்றது இதேநேரம் செச்சினிய விடுதலைப் போராட்டம் மிகமோசமான பயங்கரவாதப் பட்டியலுக்குட்பட்ட

Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலைப் பின்பற்றுகின்ற அமைப்பாக விமர்சிக்கப்படுகின்றது இவ்வரிசைக்குள் சூடானின் டர்ப்பூர் கிளர்ச்சியாளர்கள் அழைக்கப் படுவது போன்று இஸ்ரேல் அரச பயங்கரவாத நாடுகள் பட்டியலில் முதலிடத்தில் காணப்படுகின்றது. இதில் அமெரிக்காவின் பங்கையும் அதன் போக்கையும் சுட்டிக்காட்டும் தோமஸ் போர்த்லர், எட்வேட்செய்ட், மற்றும் மைக்கல் மூர் ஆகியோர் அரசபயங்கர வாதத்தை அமெரிக்கா எப்படிக்கையாண்டு தனது நலன்களை அடைகிறது என ஊடகங்களின் பல்வேறு அணுகுமுறைக்கூடாக விமர்சித்துள்ளனர். உலக சோஸலிஸ சிந்தனை வட்டத்தினரும் அவர்களின் படைப்புக்களும் கணிசமான அமெரிக்க எதிர்ப்பைக் காட்டும் அம்சங்கள் பயங்கரவாதத்தை அளவீடு செய்கின்றன. இவ்வாறு அரசுகளும் பல ஆயுதம் தாங்கிய அமைப்புக்களும் பயங்கரவாத அணுகுமுறையை பின்பற்றுவதைக் காணலாம்.

உலக வரலாற்றின் மாற்றங்களின் பின்பும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாதமாக கணிக்கப்படுகிறது. வல்லரசுகளது பிராந்திய அரசுகளதும் நலன்சார்ந்து விடுதலைப் போராட்டங்கள் விடுதலை அடைவதும், பயங்கரவாதமாக மாறுவதும் தீர்மானிக்கப் படுகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும், காலநிலை பாதிப்புக்களும் நிர்ணயிக்க முடியாத சிக்கல்களை உலகம் எதிர்கொள்கிறது. இதில் இஸ்லாமியர் மீதும், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மீதம் பயங்கரவாதக் குற்றச்சாட்டு வலுவடைவதோடு அதுவே ஓர் அரசியல் சிந்தாந்தமாக மாற்றமடையும். இவ்வகை சித்தாந்தம் வாயிலாக அரசுகளும், பிராந்திய சர்வதேச சக்திகளும் எழுச்சியடையும் ஜனநாயகத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்திவரும் அரசபயங்கரவாதம் நியப்படுத்தப்படும் உலகம் தவிர்க்கமுடியாதாக அமையும்.

**முடிவுரை**

பயங்கரவாதம் ஒவ்வொரு தேசங்களின் நலன்சார்ந்து அளவிடப் படும் பரிமாணத்தை பெற்றுள்ளது. அரசுகளும், வல்லரசுகளும் வகுத்துக்கொள்ளும் நலன்சார்ந்த அளவீட்டைப் பொறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் பார்க்கப்படுகிறது. ஆனால் அவ்வகை பார்வையின் பிரதிபலிப்பாக எழுச்சியடையும் உலகத்திற்குள் ஏற்றுக்கொள்ள முடியாத பயங்கரவாதத்தினையும், எதிர் பயங்கரவாதத்தினையும் காணமுடிகிறது. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் அரசியல் அபிலாசைக்கு வாய்ப்பற்ற உலகத்தில் இஸ்லாமிய தேசங்களின் எழுச்சிகளும் அவ்வகை வரைபுகளுக்குள் அகப்பட்டுள்ளது. ஒருவகையில் புரட்சிகரமான சிந்தனைகளும், அதற்கான அமைப்புக்களும் பயங்கரவாதம் என்ற சுலோகத்தினால் அழிக்கப்படுவதுடன் அரசுகள் பிரயோகிக்கும் அரசபயங்கரவாதம் அவ்வகை நியமங்களுக்குள் கேள்விக்குட்படுத்தப்படாத ஒன்றாக மாறிவருகின்றன. இது அரசியல் விஞ்ஞானத்தினை ஆய்வுப் பொருளாக கொண்டிருக்கும் ஆய்வாளர்களுக்குள்ளேயே எழுப்பப்படும் வினாவாக மறைந்துவிடுகிறது. மறைக்கப்படும் கேள்விகளால் ஆபத்துமிக்க சமுதாயம் கட்டிவளர்க்கப்படுகிறது. அது ஏற்படுத்தப் போகும் அதிர்வுகளுக்கு வல்லரசுகளும், அரசுகளும் தீர்வற்ற அரச இயந்திரங்களாக விளங்குகின்றன. *Brain Jenkins* கூறுவதுபோல் "பயங்கரவாதத்தை வரையறுப்பதில் உள்ள சிக்கல்மிக்கதாகவுள்ளது மட்டுமன்றி அரசியல் கருத்தேற்றமாக விளங்குகிறது. அதனை அளவீடு செய்யும் ஒவ்வொருவருக்குள்ளும் காணப்படும் அரசியல் கருத்தேற்றத்தை பொறுத்து அது வடிவமைக்கப்படுகிறது" என்பது பயங்கரவாதம் பற்றிய பொருத்தமான விபரணமாகும்.

## உதவிய நூல்கள்


1. *Grant wardlaw,Political Terrorism,Cambridge University Press,1982.*
2. *Alexander,D.Carlton, &P.Wilkinson.(Ed)Terrorism,Theory and Practies, Westview press,1979.*
3. *Edward Said,A Stupit War, polity,Vol.1.No.2 April-May,2003.*
4. *Terorism Muslimes / Arabs: Sri Lanka, ABCD Institute. 2002.*
5. *Andrewl. Michael Colarik, Cyber Terrorism Political and Economic Implications. IDEA Group Publication Hershey –London-Melbourne-Singapore,2006.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அபிலாசையும் மனித உரிமைப் பிரகடனமும்

## அறிமுகம்

மனித உரிமை பிரகடனம் பற்றிய வியாபகப்படுத்தல் அனைத்து உலக நாடுகளிலும் வாழும் மக்களாலும் பேசப்படும் பிரபலமான பிரகடனமாகும். மனித உரிமை என்பதை உலகுக்கு அறிமுகப்படுத்திய அமெரிக்கர்களும் அவர்களது ஆட்சியாளர்களும் நாடுகளையும் அதன் அதிகார வர்க்கத்தினையும் கட்டுப்படுத்த பயன்படுத்தும் உயர்ந்த பட்ச நெறிமுறையாக மனித உரிமை பிரகடனத்தை கருதுகின்றனர். ஒருபக்கம் மனித உரிமை என்ற பொதுமைப்பட்ட நியாயவாக் கமுடைய அம்சமும் மறுபக்கத்தில் அரசியல் அதிகாரத்திற்கான அபிலாசை என்ற அம்சமும் எதிர்முரணியத்தை கொண்டியங்குகிறது. இக்கட்டுரையும் மனித உரிமைப் பிரகடனத்துக்கு பின்னால் மறைந்தி ருக்கும் அரசியல் அபிலாசையையும் அது ஏற்படுத்தி வரும் அதிகார ஆதிக்கத்தையும் பரிசீலிக்க முயல்கின்றது. இவ் ஆய்வுக் கட்டுரை இரண்டாம் நிலைத் தரவுகளையும் கொண்ட விபரவியல் ஆய்வாக அமைகின்றது.

## மனித உரிமை பிரகடனம் கூறும் போலிகள்

உறுப்புரை (1) ஒன்று கூறும் மனித உரிமை பிரகடனம் உலகிலுள்ள எல்லாப் பிறவியினரையும் சமமானவராகவும் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்துகொள்ள வேண்டும் எனக் கோருகிறது. அவ்வகை கோரிக்கை நியாயமானதாக காணப்பட்டாலும் நடைமுறை நியாயமானதாக இல்லையே. அமெரிக்கர்களும், ஆபிரிக்கர்களும் சமமானவராகவும், சகோதரராகவும் வாழ முடியுமா? இரண்டாம் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த முடிவில் அமெரிக்க முதல் பெண்மணியினால் வரையப்பட்ட மனித உரிமைப் பிரகடனம் வெளியான பிற்பாடு நிகழ்ந்த அனைத்து மனித உரிமை மீறலிலும் ஆதிக்கத்திற்குரிய பங்கு அதிகமானது. ஆசிய நாட்டு மக்களையும், ஆபிரிக்க நாட்டு மக்களையும் ஆதிக்க சக்திகளின் ஆட்சியாளரும் மக்களும் எப்படி கருதுகின்றனர் என்பது கடந்த கால வரலாறு. போர்களையும் போர்களை நடத்தும் அரசியல் தந்திரங்களை யும் நோக்கும் போது ஆதிக்க சக்திகளின் பொய்யான வாக்குறுதியாக நிமிர்கிறது அனைத்துலக மனித உரிமை பிரகடனம்.

உறுப்புரை (2) இரண்டு இன, நிற, பால், மொழி, மத வேறுபாடில் லாத சமூகத்தை உருவாக்குதல். மேலும் இறைமை மட்டுப்படுத்தப்பட் டுள்ளதாயினும் நாடு ஒன்று எந்த விதத்திலும் வேறுபாடு காட்டப்படுதல் ஆகாது. மிக அற்புதமான கற்பனைச்சரத்து. உலகில் எந்த மூலையி லாவது வெள்ளையன், கறுப்பன் என்ற நிற பேதத்தையோ ஆங்கிலேயன், பிரஞ்சுக்காரன் என்ற மொழி பேதத்தையோ கிறிஸ்தவன், இஸ்லாமியன் என்ற மதபேதத்தை தவிர்த்து வேறுபாடில்லாத சமூகத்தை உருவாக்குதல் முடியுமான அம்சமல்ல. வேறுபாடும், பேதமும் மனித சமுதாயத்திடம் ஊறிப் போன ஓர் அம்சம். இன, நிற, பால், மொழி, மதம் மட்டுமல்ல சாதி, வர்க்க, கட்டமைப்புகளும் கையாளப்படுகின்றது. போலியான சுலோகங்களை முன்னிறுத்தி விட்டு அதிகாரப் பரப்புகையை கையாள் வதற்கு ஒரு பிரிவினர் மேற்கொள்ளும் அணுகுமுறைகளே மனித உரிமை பிரகடனம். இதனை சரிவரப் பின்பற்ற எந்தச் சமூகம் தயாரா கின்றதோ அதுவே முழுமையான மனித சமூகத்திற்கான முன்னோடி சமூகமாக அமையும் என்ற வாதத்தை சேர்த்துக்கொள்ள அவ்வகைப் பிரிவினர் முயன்று வருகின்றனர்.

உறுப்புரை (4) நான்கு அடிமை நிலை முற்றாக துடைத்தெறியப் பட வேண்டும் எனக் கூறுகிறது. மனிதனை அடிமை வியாபாரத்திற்கு உட்படுத்திய வரலாற்றைத்தான் கண்டார்களே அன்றி மனித சமூகம், வியாபாரம் பொருளுக்கு அடிமையான வரலாற்றை யாரும் கண்டுகொள்ள வில்லை. ஏனெனில் வியாபாரப் பொருளுக்கு அடிமையாக மாறியுள்ள மனிதகுலம் வளர்ந்த பொருளாதார வளமுடைய நாடுகளின் வியாபாரத் தந்திரத்திற்கு அடிமையாகக் கிடக்கின்றது. கீழ்த்திசை நாடுகளின் மக்கள் நுகர்வையே தொழிலாகக் கொண்டு இயங்கும் இயங்கியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்குள் அகப்பட்டுள்ளனர். வறுமை என்ற சுமைக்குள் மக்களின் இயற்கையின் வாழ்க்கை முறையை அறிவின்மை என்ற சொற்களுக்குள் அடக்கிவிட்டு ஆதிக்க நாடுகள் பொருளாதாரத்தையும் அதிகாரத்தையும் தமக்குரியதாக்கி விடுகின்றன. இவ்வகை அடிமைத்தனம் எப்போது மறையும். டொலரையும் ($), யூரோவையும் விஞ்சும் நாணயம் உலகில் இல்லை. ஏனைய நாணயங்கள் தரத்தாலும், அளவாலும் பெறுமானத் தாலும் கீழ்நிலையை உணர்வதால் ஏற்பட்டுள்ள அடிமைத்தனம் நிரந்தரமானது.

உறுப்புரை (5) ஐந்தில் சித்திரவதைக்கோ, கொடுமையான மனிதத் தன்மையற்ற இழிவான நடைமுறைக்கோ, தண்டனைக்கோ எவரும் உட்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மிக அற்புதமான வரிகள் மனித சமூகத்தின் பரிமாணக்கட்டம் முழுவதும் இச்சரத்திற்கு எதிரான பதிவுகளே அரங்கேறி வருகின்றன. இருபத்தியோராம் நூற்றாண்டில் அதன் வேகம் அதிகரித்துள்ளது. குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப் படாமல் இருப்பதையோ, குற்றவாளிகள் சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுவதையோ இங்கு குறிப்பிடப்படவில்லை. மாறாக குற்றமே புரியாத எத்தனை கோடி மனிதர்கள் நாளாந்தம் சித்திரைவதைக்கும், இழிவான நடத்தைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். மனித உரிமைவாதிகள் எனத் தம்மைக் காட்டிக்கொள்பவர்கள் எத்தனை பேரை மனிதத்தன்மையற்ற விதத்தில் நடத்துகிறார்கள். சித்திரைவதையும், இழிவான நடத்தையும் வன்முறைக்கு மட்டுமுரியதல்ல. உணர்வாலும் உரையாலும், செயலாலும் வெளிப்படுத்தும் போது அது சித்திரவதையாகவே கருதப்படுகிறது. நிக்கலோ மாக்கியவல்லி குறிப்பிடுவது போல் எல்லா மனிதனும் அதிகார வெறிக்குரியவனாகவே காணப்படுகின்றான். பிற மனிதர்களை அடக்கி ஆளுவதே ஒவ்வொரு பிரஜையின் பண்பாகுமென அவர் குறிப்பிடுவது மிகச் சரியானது. மனித உரிமைப் பிரகடனங்களுக்கு பின்னால் மறைந்துகொண்டு உலகத்தினை ஆதிக்கவெறி கொண்ட சக்திகள் ஆளுகின்றன. அவர்களின் ஆளுமைக்கும், ஆதிக்கத்திற்கும் சவால் விடும் சக்திகளை கட்டுப்படுத்தும் சாதனமாக மனித உரிமைச் சட்டங்கள் கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரை (7) ஏழு எல்லோரும் சட்டத்திற்கு முன்பு சமமானவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது சட்டத்திலே பாரபட்சம் காட்டப்பட்டுள்ள சரத்துகள் அனேக நாடுகளில் வரையப்பட்டுள்ள. ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் வர்க்கத்திற்கும் தனியான சட்டங்களை ஒரே அரசியலமைப்பில் வரைந்துள்ள நாடுகளிலும் ஆட்சியிலும் சட்டத்திற்கு, முன்பு சமமானவர்களாக எப்படி காண முடியும். அது மட்டுமல்ல அவ்வாறு மீறப்படும் பட்சத்தில் நியாயாதிக்க சபைகளை நாடமுடியுமென உறுப்புரை (8) எட்டு குறிப்பிடுகின்றது. சட்டத்திலே சமமான உரிமை வழங்கப்படாத சூழலில் நியாய சபைகள் எப்படி நீதியானதாக நிறுவப்பட்டிருக்கும். அவ்வகை நியாய சபைகள் ஆளும் வர்க்கத்தின் நலனுக்குரியதாகவல்லவா நிறுவப்பட்டிருக் கின்றன. உலகிலுள்ள அனேக அரசியலமைப்பு சட்டங்களிலும் ஆட்சியாளரையும், அவர்களை பாதுகாக்கும் சரத்துக்களையும் தவிர வேறு எதனையும் அதிகமாக காணமுடியாத சூழ்நிலை நிலவுகிறது. சட்டங்களை வரைந்து விட்டு சர்வாதிகார ஆட்சி நிகழ்கிறது.

உறுப்புரை (9) ஒன்பதில் ஒரு தலைப்பட்சமாக கைது செய்தல், தடுத்து வைத்தல், நாடுகடத்தில் என்பவற்றுக்கு எவரும் உட்படுத்த லாகாது. இது உலகில் எந்த நாட்டிலும் காண முடியாத ஒரு கற்பனை வடிவம், ஆட்சிக்கு எதிரானவர்கள் கைது செய்யப்படுத்தப்படல் சித்திரைவதைப்படுத்தப்படல், நாடு கடத்தப்படுதல் சாதாரணமான நிகழ்வாகவே உள்ளது. நாடுகளுக்கு இடையிலான உறவைத் தீர்மானிப் பதில் பிரஜைகளின் கைதுகளை பயன்படுத்துமளவுக்கு அரசியல் அதிகாரம் பலவீனமாகி விட்டது. அல்லது அரசியல் அதிகாரத்திற்கான கெடுபிடி அதிகரித்து விட்டதெனக் குறிப்பிடலாம். பிரஜைகளுக்கான அரசு என்ற நிலை மாற்றப்பட்டு அரசுக்காகவே அனைத்துமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதே வலிமையுடன் உறுப்புரை (12) பன்னிரண்டு குறிப்பிடும் விடயம் எவரது தனிப்பட்ட நலனுக்கும் குந்தகம் விளைவிக்கும் செயலுக்கு எதிரான சட்டப் பாதுகாப்பு வலியுத்தப்பட்டுள்ளது. திட்டமிட்டு அவமதித்தல், நன்மதிப்பை இழக்கச் செய்தல், அந்தரங்கமான அனைத்தையும் காட்சிப்படுத்தல் என்ற எல்லை மீறல்கள் அரசாங்க பாதுகாப்புகளாலும், தனிப்பட்ட குழுக்களாலும், பிரஜைகளாலும் நிகழ்த்தப்படுகின்ற அம்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. அனேக நாடுகளில் மேற்குறிப்பிட்ட உறுப்புரைகள் எவற்றுக்கு மான சரத்துகளோ, விதிகளோ இல்லாத நிலை காணப்படுகின்றது போது பிரஜைகள் எவ்வாறு சட்டப் பாதுகாப்பினை பெற முடியும்.

உறுப்புரை (11) பதினொன்று கூறும் பகிரங்கப்படுத்தல், நீதிமன்றங் களின் பிரதான கடமையாகும். குற்றவாளியென அரசாங்கங்களும், அதற்கு சார்பான ஊடகங்களும் எடுக்கும் தீர்மானங்களுக்குள் ஆயிரக் கணக்கான பிரஜைகள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். பகிரங்க விளக்கமோ விவாதமோ இன்றி தண்டனை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கங்களுக்கு அப்பால் நிகழும் நிர்வாக சீர்கேட்டினாலும் தாமதத்தினாலும் தனிப்பட்ட நலனுக்காகவும் எத்தனையோ மனிதர்கள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உரிமை நிராகரிப்பு வாதம் நிலவி வருகிறது. நிராகரிப்பு வாதம் அரசியல் அதிகாரத்திற்கான வாதமாகவே விளங்குகின்றது. அரசியல் அதிகாரத்தின் கைகளில் அகப்பட்டுள்ள மனித உரிமைச் சட்டங்கள் ஏமாற்றுச் சட்டங்களாக தொழிற்படு கின்றன.

இவ்வாறு உறுப்புரைகள் பதின்மூன்று (13) பதினான்கு(14) சரத்துக்கள் சுதந்திரமான பிரயாணம் செய்வதற்கும், வதிவதற்கும் எல்லோருக்கும் உரிமை உண்டென குறிப்பிடுகின்றது. அவ்வாறே புகலிடம் தேடவும் பாதுகாக்கவும் எல்லா பிரஜைக்கும் உரிமை உண்டெனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இவ்வகை சரத்துக்களை கட்டுப்படுத்தும் விதிகள் அந்தந்த நாடுகளின் சட்டத்திற்கு உரியதாக இருக்கின்றன. புகலிடம் தேடும் போது ஐ.நா.சபை விதிக்கும் நிபந்தனை களை போன்று ஒவ்வொரு நாட்டுக்கும் அரசியலமைப்புக்கு உட்பட்ட தான விதிகள் காணப்படுகிறது. இவ்வாறு மனித உரிமைக்கான சரத்துக்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் அரசுகளாலும், அரசாங்கங்களாலும் ஆட்சியாளர்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்ற தன்மையை காண முடிகின்றது. உறுப்புரை (30) முப்பதில் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியதையும், அழிக்கவோ நிராகரிக்கவோ முடியாதென்பதையும் வலியுறுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அதிகாரமும் மனித உரிமையும்

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தினை இயங்கு திறனுடையதாக்கும் வல்லமை ஐ.நா.சபைக்குரியது. ஐ.நா.சபையை இயக்கும் திறன் உலகிலுள்ள வலுவான நாடுகளுக்கும் அவற்றின் அரசாங்கங்களுக்கும் உரியது. அவ்வகை நாடுகள் குறிப்பாக பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை நாடுகளுக்கே உரித்துடையதாக காணப்படுகின்றன. அவற்றிலும் கீழ்த்திசை நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் சீனா, ரஷ்யா என்பன இயல்பான மேல்திசைநாடுகளாகவே காணப்படுகின்றன. மேலும் அவையின் நலன்களைப் பாதிக்கும் நிலையிலான மிக நெருக்கடியான கட்டங்களில் வீட்டோவை பயன்படுத்தாது வெளியேறுவதனால் அவற்றின் அணுகுமுறையும் நிரந்தர உறுப்புரிமையும் வலுவற்றுப் போகின்றன. எனவே ஐ.நா. இயக்கும் திறன் மேற்குலக நாடுகளுக்கே உரியதாக உள்ளது. அவற்றின் அரசியல் அட்டவணைக்கு ஏற்பவே உரிமைப் பிரகடனம் கையாளப் படுகின்றது. மேற்கின் நலனுக்கு உட்பட்ட ஏனைய உலக நாடுகள் இயங்குகின்றன. அவ்வகை உரிமைப் பிரகடனம் நிபந்தனையாகவே காணப்படுகின்றது. அதனை மீறும் சக்திகள் மேற்குலக நலனுக்கு விரோதமான சக்திகளாகவே அடையாளப்படுத்துதல் வெளிப்படையாக இல்லாத போதும் அதுவே யதார்த்தமானது. அவ்வகை ஆட்சிகளும், அதிகார சக்திகளும் மக்களின் இன்னோர் புரட்சியூடாக தூக்கியெறியப் படும். அதனால் உருவாகும் புதிய அதிகாரம் மக்கள் சார்பானதல்ல. மேற்குச் சார்பானதாகவே அமையும். அவ்வாறு அமைய வேண்டும். மக்கள் ஒரு ஏகாதிபத்தியத்தை விரட்டி விட்டு இன்னோர் ஏகாதிபத்தி யத்தை அமர்த்துகின்ற நியமமே நிலவுகிறது. ஏனெனில் ஆளும் அதிகாரவர்க்கம் ஏகாதிபத்தியமாகவே மாறுகின்றது. காரணம் ஏகாதிபத்தியம் வியாபகமானது. உலகம் முழுவதும் பீடித்துள்ள உயர்ந்த பட்ச அம்சம் ஏகாதிபத்தியமே ஆகும். அதிலும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதும், கையாள்வதும் ஏகாதிபத்திய மனோநிலைக்குரியவரால் முடியுமென்ற அனுபவத்தை சட்டரீதியாக நிறுவப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் மிகப் போலியான பிரகடனம். அதனை முன்னிறுத்திய மேற்குலகம் கீழைத்தேச புத்தி ஜீவிகளையும் அவர்களது ஆய்வுப் புலத்தையும் குடைச்சல் போட்டு வீணடிக்கவும், அரசுகளினும், அரசியல் தலைவர்களது போக்கினை தமக்கேற்ற வகையில் சரிப்படுத்தவும் பயன்படுகின்ற சாதனமாகும். மனித உரிமை மீறல் நிகழாமல் தடுக்கவல்ல அதிகாரமும் செல்வாக்கும் உரிய சபைகளும் வளர்ந்த மேற்கு நாடுகளும் மீறலை பார்த்துக் கொண்டும் பதிவு செய்து விட்டும் விசாரணைக்கும் தண்டனைக்கும் உள்ளாக்க நேர விரயத்தை செய்கின்றன. மீறல் நிகழாது தடுப்பதை விடுத்து மீறல் நிகழ்வை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பது மட்டுமன்றி அவ்வகை அரசுகளை மிரட்டுவதற்கு மீறலை ஆயுதமாக பயன்படுத்துகின்றன. அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட பாராபட்சமில்லாத மனித உரிமை மீறல்கள் நிகழும் போது அனாமதேயமாகிவிடுகின்றன. சேர்பிய முஸ்லீம்கள் ஐ.நா. சபையின் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் முகாமுக்குள் தஞ்சமடைந்தவர்கள் ஆண்கள், பெண்கள் என வகைப்படுத்தி கொல்லப்பட்டனர். குழந்தைகள், சிறுவர்கள் அழிக்கப்பட்டனர். பெண்கள், சிறுமிகள் மானபங்கப்படுத்தப்பட்டனர். இவற்றுக்கு கட்டளை பிறப்பித்த இராணுவத் தளபதி பல வருடங்களுக்கு பின்பு 2010ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கைது செய்யப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதனையே மனித உரிமைப் பிரகடனங்களை பாதுகாக்கும் அவைகளும் மன்றங்களும் பின்பற்றி வருகின்றன.

அரசியல் அபிரலாசையாகும் அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தினை அரசியல் சக்திகளிடமிருந்து மீட்டெடுத்தல் வேண்டும். இல்லாதுவிடின் மனித உரிமைப் பிரகடனத்தால் சாதாரண மனித சமூகத்திற்கு எந்தவிதமான நன்மையோ இலாபமோ கிடைக்க வாய்ப் பில்லை. வளர்ந்த ஏகாதிபத்திய சக்திகள் தங்கள் அரசியல் அதிகாரத் தினை கையாள்வதற்கு மனித உரிமைப் பிரகடனத்தினை கையாள முடியுமே அன்றி அதனால் மாற்றம் நிகழப் போவதில்லை. போலியான கற்பனாவாதத்தால் உலகம் ஆளப்படும் வரலாறு தொடர்ந்த வண்ணமுள்ளது. சோக்கிரட்டீஸ்ன் கிரேக்ககால வரலாறு முதல் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அனைத்து அரசியல் சுலோகங்களும் போலியாகி புனைகதையாக முடிந்துள்ளன. இதில் ஒன்றாகவே மனித உரிமைப் பிரகடனம் அமைந்துள்ளது. இதன் துயரம் உலகத்தின் யதார்த்தமாகி விட்டது. மீறலை அரசியல் இலாபமாக்குவதும், அவற்றுக்கு தண்டனை வழங்குவதும், போலி முகங்களை காட்டும் அனுபவமாகி விடுகிறது. மனித உரிமைக்குள் நிலவும் போலி அகழப்பட வேண்டும்.

**உதவிய நூல்கள்**


01. *மனித உரிமை ஆணைக்குழுளு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், கொழும்பு.*

02. *திருச்செந்தூரன், சி, இலங்கையில் அடிப்படை உரிமைகள் ஓர் அறிமுகம். புதிய தரிசனம், யாழ்ப்பாணம். 2011.*

03. *Hans Gsangur, Myriam fernando; Poverty monitoring in Asia CEPA, Colombo - 2004.*

04. *Brownlie lan, Basic Documents on Human Rights, Third Edition claren, don press, London, 1994.*

05. *Jayampathy Wickramaratna, Fundamental Rights in Sri Lanka, Navrang Book sellers & Publishers, Inderpuri, New Delhi. 1996.*

06. *Dworkin, R. Taking Rights Seriously, Cambridge, Mass Harvard University Press, 1989.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியும் முகாமையும்

நல்லாட்சி என்ற எண்ணக்கரு இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகம் பேசப்பட்ட ஓர் அம்சமாகும். ஆனால் நல்லாட்சி பற்றிய உரையாடல் அரசாட்சி என்ற எண்ணக்கரு உதயமான காலப்பகுதியிலிருந்து பிரயோகத்தில் காணப்படும் விடயமாகும். இதனை இலகுவில் வரையறுத்துவிட முடியாது. இன்றைய உலகில் அனேக நாடுகளில் பின்பற்றுகின்ற ஆட்சி முறை "நல்லாட்சி" ஆகும். அரசாங்கம், அரசாட்சி என்ற அரசறிவியல் எண்ணக்கருக்களுடன் தொடர்புபட்டடிருப்பது மட்டுமன்றி, அக் கூறுகள் அனைத்தினதும் உள்ளடக்கத்தை மேலும் தெளிவுபடுத்தியும், விருத்தி செய்தும், முழுமைப்படுத்தியும் கொண்டிருக்கும் அரசுகளுக்குரிய ஆட்சிமுறை மையாகும். இதனை மக்களின் நலன்கள், தேவைகள், சமாதானம், அமைதி, இறையாண்மை, சமத்துவம் போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தியுள்ளதனால் உலக நாடுகளின் அரசாட்சியின் கனவாக நல்லாட்சி காணப்படுகின்றது. அரசாங்கம் என்ற சொல்லுக்கு ஒத்த சொல்லாகவும் நல்லாட்சி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காரணம் அரசாங்கத்தின் ஒரியல்பான நல்லாட்சி மேலாதிக்கம் பெற்று அரசாங்கம் என்ற சொல்லாட்சியின் இயல்புகளை எல்லாம் தகர்த்து விட்டு நல்லாட்சியே மேன்மையானதென கருதுமளவிற்கு வளர்ந்துள்ளது. மறுவளமாக கூறுவதாயின் நல்லாட்சியே அரசாட்சியாகும்.

நல்லாட்சி என்பது எந்தவொரு சமூகத்திலும் வாழும் அனைத்து தர மக்களின் நம்பிக்கை விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிதலுடன் முன்னெடுக்கப்படும் ஆட்சி நல்லாட்சி எனலாம். மேலும் பொது வளங்களை பொறுப்புடனும் செயல் திறனுடனும் பயன்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழலைத் தவிர்த்து மனித உரிமைகளைப் பேணி, சட்டத்தின் ஆட்சியை அமுல்படுத்தி, வாழ்வுத்தரத்தை மேம்படுத்தி ஆளப்படும் ஆட்சியை நல்லாட்சி என்றும் கூறமுடியும். புலமையாளர்கள் நல்லாட்சி பற்றிய கருத்தாடலை அதிகாரத்தினதும், பொறுப்பாண்மையுடைய ஆட்சியினதும் வேறுபட்ட வழிமுறைகளை அமைப்புருத்தன்மையின் உறவு முறைக்கூடாக சமூகத்திற்கு வழங்கப்படுவதைப் பற்றிய ஆய்வாகக் கொள்ளுகின்றனர். *(Academic approach)* நன்கொடையாளர சமூகத்தின் அணுகுமுறையானது *(Donor Community's approach)* திறந்த பொதுவான கொள்கைக்கான பின்பற்றுகைக்கூடாக அரசுகளின் ஆட்சி முறைமைக்கான படிமுறைகளையும் அவற்றின் அமுலாக்கங்களையும் அரசியல் - சமூக - பொருளாதாரக் கொள்கைக்கூடாக உறுதிப்படுத்து வதுடன் பொறுப்பாண்மையுடையதாக ஆக்குதலாகும். இவ்விரு அணுகு முறைகளுமே கடந்த காலத்தில் மிகப்பிரபல்யமானதாக அமைந்திருந்தது. இவ்விரு சாராருமே "நல்லாட்சி" என்னும் எண்ணக்கருவை அதிகம் பயன்படுத்தியதுடன் பிரயோகிக்க வேண்டிய அவசியப்பாட்டை வலியுறுத்தி வந்தனர்.

ஆட்சிமுறையின் நடவடிக்கைகளை தொடர்புபடுத்தும் பெறுகை களை அல்லது ஆட்சி துறையின் விழுமியங்களை சமூக நடிபங்காளர் களின், குழுக்களின் அணுகுமுறைகளை சமூகத்துடன் இணைக்கும் அல்லது தொடர்புபடுத்தும் முறைமை சார்ந்த எண்ணக்கருவாக விளங்குகிறது. இது பொதுவாக எல்லாச் சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணக்கருவாகக் காணப்படுவதுடன் பலமான நல்லாட்சிக்கான கோட்பாடுகளை அடையாளம் காண்பது பலவீனப் பட்டுள்ள சமூகங்களை வளம்படுத்தக்கூடியதாக அமையும் என்ற எதிர்பார்க்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

நல்லாட்சியின் எழுச்சிக்கு ஊழல், மனித உரிமைக்கு மதிப் பளிக்காத தன்மை, பொறுப்பாட்சியற்ற அரசாங்கங்கள், அத்துடன் உடனுக்குடன் தேவைகளை நிறைவேற்ற முடியாத அரசுகளின் நடவடிக்கையால் ஏற்பட்ட ஓரம்சமாகும். நல்லாட்சியின் பிரதான மூலக்கூறாக அரசியல் மற்றும் பொருளாதார திட்டமிடலின் தன்மை சார்ந்ததாக உள்ளது. இவ் எண்ணக்கருவின் நடைமுறையாக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பிரதான வெளிப்பாட்டுத் தன்மையின் விசேடத்துவத்திற்கான அடிப்படையாக உள்ளது. குறிப்பாக பலகட்சித் தேர்தல், நீதித்துறையும் பாராளுமன்றமும் அவசியமான முதலாம்தர அடையாளங்களாக விளங்குகின்றன. அதாவது மேற்குலக பாணியிலான ஜனநாயகத்தினை அடிப்படையாக கொண்ட ஆட்சிமுறையை குறிப்பதாகும். அதனையே "நல்லாட்சி" என்று அழைக்க மேற்குலக புலமையாளர்களும், மேற்கு நாடுகளும் முயலுகின்றன.

## நல்லாட்சி விருத்தி

"நல்லாட்சி" என்ற எண்ணக்கருவின் வளர்ச்சி மனித உரிமைக் கான உலகளாவிய பாதுகாப்பினை முழுமைப்படுத்துகின்றது. பாரபட்சமற்ற சட்டங்கள் அனைவரிற்கும் நல்ல விளைவையும், சமமானதும் மிக விரைவாக சென்றடையக்கூடியதுமான நீதியை கிடைக்கச் செய்தல், மேலும் சிவில் சமூகத்திற்கான அல்லது முகவர்க ளுக்கான பரிமாற்றத்தை செய்தல்,பொது நிர்வாகத்தின் தீர்மானங்கள் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறும் தன்மையுடையதாக விளங்குதல், சமூகமட்ட முதலீடுகளை பங்கெடுக்கும் விதத்தில் தீர்மானம் எடுக்க உதவுதல், பொது அரசியலிலான தெரிவுக்குரிய பிரஜைகளின் பங்களிப்பை பொருள் நிறைந்ததாக ஆக்குதல் என்பன நல்லாட்சியின் விருத்தியைக் காட்டும் அம்சங்களாக உள்ளது,

## நல்லாட்சியை பயனுடையதாக மாற்றுதல்

- நல்லாட்சிக்குரித்தான எண்ணக்கருக்களை கோட்பாட்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டு செல்லுதல் அவசியமானது.
- சமூக பொருளாதார தளத்தில் பலமான அபிவிருத்தியை கட்டிவளர்ப்பதற்கான வலுவூட்டல்களை பொதுத்துறைக்குள் ஏற்படுத்துவதுடன், தனியார் துறையையும் சிவில் சமூகத்தினையும் பொதுத்துறைக்கு நிகரானதாக நல்லாட்சி கோட்பாடுளை அமுலாக்கம் செய்தல்.
- அரசியலில் மட்டுமல்லாது சமூகத்தின் எல்லா மட்டத்திலும் நல்லாட்சி சார்ந்து பொறுப்பாண்மையையும், சிறந்த விளைவையும், உறுதிப்பாட்டையும், உளப்பாங்கையும் வழிகாட்டலையும் வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிறுவனங்களின் கட்டமைப்புத் தன்மையை விருத்தியடையச் செய்தல்
- அரச சார்பற்ற அமைப்புகளின் செல்வாக்கினை அதிகரிக்கச் செய்தல்,

நல்லாட்சியின் கீழ் ஒவ்வொரு சமூகங்களையும் கருத்தியலுக் கூடாக சிறந்த சமூகங்களாக மாற்றமுடியும்

**1. தொழில்நுட்பம் சார் பரிமாணம்** (Technical dimension)

அரசாங்கங்களின் பொருளாதார அணுகுமுறைசார்ந்த பரிமாணம், அரசாங்கத்தின் வரவு செலவுகள் வெளிப்படைத் தன்மையுடையவை யாக இருத்தல் அவசியமானது. பொதுத்துறை வளங்களை சிறந்த முறையில் முகாமைசெய்வதுடன் தனியார் துறையின் நடவடிக்கைகளை முறையாக கண்காணிப்பது சமூகத்திற்கு பயனுடையதாகும்,

**2. சமூக பரிமாணம்** (Social dimension)

பலமான ஜனநாயக நிறுவனங்களையும், அம்சங்களையும் பலமானதாக கட்டிவளர்ப்பதுடன் சகிப்புத்தன்மையுடைய சமூகங் களை நிகருள்ளதாக ஆக்குதல்

**3. அரசியல் பரிமாணம்** (Political dimension)

பாராளுமன்ற ஆட்சியும் அரசாங்கங்களினது அரசியல் மூலகங்கள் பொறுப்புக்கூறும் தன்மையுடையதாக அமைவதுடன், சட்டத்தின் ஆட்சியும், மனித உரிமைகளுக்கான அங்கீகாரமும் இருத்தல் வேண்டும்.

**நல்லாட்சியின் கூறுகள்**

**1. பங்கேற்பும் பிரதிநிதித்துவமும்**

நேரடியாகவோ,ஆர்வங்களை பிரதிபலிக்கின்ற வகையிலோ சட்டபூர்வமான இடைத்தரக நிறுவனங்கள் மூலம் ஆண்களும், பெண்களும் எந்த வேறுபாடுமின்றி தீர்மானம் எடுத்தலில் பங்கேற்பது நல்லாட்சியின் பிரதானகூறாகும், அத்தகைய பங்கேற்பின் மூலம் முழு மக்களின் பிரதிநிதித்துவங்களை ஆக்கபூர்வமாகவும் பயனுறுதிமிக்க தாகவும் கையாள்வது அவசியமானது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சட்டத்தின் ஆட்சி

சட்டத்தின் வரையறைகளை நடுநிலைமையாகவும், சாதாரண மானதாகவும் அமுல்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் சட்டம் அனைத்தையும்விட மேலானதும், முதன்மையானதுமாகும், சட்டத் திற்கு முன் யாவரும் சமமானவர்கள், குறிப்பாக சட்டம் மனித உரிமை குறித்த வரையறைகளை ஒவ்வொரு தனிநபரிற்கும் சரியானதும், பாதுகாப்பானதுமான தீர்ப்பினை வழங்கக்கூடியதாகவும் அதனை அடையக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்தும், பாதுகாக்கும், மதிப்பளிக்கும் யாப்பு ஒன்று அவசியமாகும்.

## 3. வெளிப்படைத்தன்மை

தகவல் பரிமாற்றத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒன்றே வெளிப்படைத்தன்மையாகும். தகவல்கள் நிறுவனங்களுக்கும் அதன் செயல்முறைகளுக்கும் நேரடியாக அவற்றில் அக்கறை கொண்டுள்ளவர் களுக்கும் அடையக்கூடியதாக இருப்பதுடன் அவற்றை புரிந்துகொள் வதற்கான மொழி அவசியமான தெரிவாகும். குறிப்பாக சுய மொழி களில் பரிமாற்றம் செய்ய மொழிபெயர்ப்பு நிகழ்வதற்கு போதியளவான கண்காணிப்புக்குரிய தகவல் வழங்கப்பட வேண்டும்.

சமூகத்தில் நிகழும் சகல செயல்பாடுகளிலும் சகலரினதும் ஒளிவு மறைவற்ற பகிர்வு எதிர்பார்க்கப்படுகின்றது. சாதாரண மக்களுக்கு அறிந்துகொள்வதன் தேவையின் பெயரில் தகவல்களையும் தரவுகளை யும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இதிலடங்கும்.

## 4. பொறுப்புக் கூறுதல்

ஆள்வோரும் ஆளப்படுவோரும் தமக்கு ஒதுக்கப்பட்ட கடமை கள் நிமித்தம் பொறுப்புக் கூறுவோராய் இருத்தல் வேண்டும். நிறுவனங் களும் அவற்றின் செயல்முறைகளும் பங்காளர்களின் அடிப்படை தேவைகளுக்கும் விசேட தேவைகளுக்கும் ஏற்ப சேவை வழங்கும்போது ஏற்படும் பாரபட்சங்களையும், சிக்கல்களையும் பொறுப்புக்கூறுதல் பொருட்டு தக்கவைத்துக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. வளங்களின் வீண்விரயத்தை தவிர்தலும் நியாயமான வளப்பங்கீடும்

அருந்தலான வளங்கள் வீண் விரயமாவதை தடுத்து செயற்திறனுடனும், வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இவ்வளங்கள் நியாயமான முறையில் சகலருக்கும் சமமாக பங்கீடுசெய்தல் வேண்டும்

### 6. சமத்துவமும் உள்வாங்கலும்

அனைத்து ஆண்களும், பெண்களும் அவர்களது உச்ச உள்ளார்ந்தத்தை அடைந்து கொள்வதற்கு அவர்களது நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு அல்லது பேணுவதற்கு வாய்ப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

சமூகத்திலுள்ள துறைகளில் எல்லாத் தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் அமைய செயல்படல்.

### 7. நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாடு

நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை என்பவற்றின் தலையீடுகள் இன்றி நீதித்துறை சுதந்திரமாக செயல்படல் வேண்டும். நீதிபதிகள் நியமிக்கப்படுதல் அவர்களின் சேவை, பாதுகாப்பு போன்றவற்றில் தலையீடற்ற தன்மை அவசியமானது. நல்லாட்சியில் நீதித்துறை முழுமையான சுதந்திரத்துடன் செயல்பட வேண்டும்.

### 8. ஆரோக்கியமான சிவில் சமூகம்

மக்கள் விழிப்புணர்வுடையவர்களாகவும், அரசியல் நடவடிக்கையில் ஆர்வத்துடன் பங்கெடுப்பவர்களாகவும் அமைவதுடன், அரசுடன் முரண்பட்டு சமூகம் சார்பாக அரசினை நல்வழிப்படுத்திக் கட்டுப்படுத்துகின்ற சமூகத்தினராக காணப்படுகின்றனர். மேலும் முதிர்ச்சியடைந்த அரசியல் கலாசாரம், நிறுவன ரீதியான பொறுப்பு வாய்ந்த செயல்பாடு, நாட்டு மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுதல், வினைத்திறன் வாய்ந்த செயல்பாடுகள், மக்கள் மத்தியில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துதல், ஆரோக்கியமான பொது நிர்வாக செயல்பாடுகள், மனித உரிமையை மதிப்பளித்தலும் பேணுதலும், ஜனநாயக அம்சங்களினையும், ஜனநாயக ஆட்சியினையும் வலுப்படுத்துதல் என்பன நல்லாட்சியின் மூலக்கூறுகளாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியின் தேவைப்பாடுகள்

- தேசிய மட்டத்திலும் உள்நாட்டு மட்டத்திலும் பங்கேற்பாளர்கள் இயங்குவதற்கும் தம்மை வெளிப்படுத்துவதற்கும் இடப்பட வேண்டும். என்பது பற்றி வாத விவாதங்கள் நிகழ்வதுடன் அம்முறைமை பழக்கத்தில் ஏற்பட வேண்டும்

- நீதி, நிர்வாக மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் பரந்தளவு சமூகத்தின் தேவைகள் மற்றும் இயலுமைகள் என்பவற்றை பிரதிபலிக்கும். அத்துடன் அனைவரதும் சுதந்திரத்தை அனுமதிக் கும் சட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்தி சிறந்த பொதுத் துறையை உருவாக்குதல்.

- ஒரு சட்ட வரையறை மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதற்கும் புதிய கண்டுபிடிப்புக்களின் உள்ளடக்கத்தை திட்டமிடுவதற்கும் இன பால்நிலை, இனக்குழுமம் என்பவற்றின் உரிமைகளை சமமாகப் பேணவும் நெகிழ்வுத்தன்மையுடையதாக அமைதல் வேண்டும்.

- அரசியல் எல்லாமட்டங்களிலும் ஏற்றக்கொள்ளக்கூடியதாகவும் பொதுமக்களின் தலைவர்களின் மனோநிலை மாற்றத்தை கொண்டுவரக்கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

- துணைநிலை நிறுவனங்களும், வழமையாக உருவாக்கப்படும் கட்டமைப்புக்களும் அதன் வேறுபட்ட பதவிகளை வகிக்கும் உறுப்பினர்களுக்கும் பொறுப்புக்களையும், கடமைகளையும் தெளிவாக ஒதுக்குவதுடன் வகைப் பொறுப்பு மிக்கவராக நன்மை பயக்கும் விதத்திலான சட்ட வரைபுகளை கொண்டிருத்தல் வேண்டும்.

- வளங்களின் தன்மைகளுக்கு ஏற்ப நிதி மற்றும் சட்டவரைபு களை உருவாக்குவதுடன் முகாமைத்துவ நடைமுறைத் தன்மைக்கு ஏற்ப அவற்றுக்கு அனுமதியளிப்பதுடன் அவற்றின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் ஏற்ப மரபுசார்ந்த திட்டமிடல் வரையறைகளை அமைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பங்கேற்புடனான ஆட்சி, மனித உரிமை மேம்பாடு, உள்நாட்டிலே தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்னும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய உயிரோட்டமுள்ள சாத்தியமான நிறுவனங்களின் இயலுமைகளை வளர்த்தல் வேண்டும்.

- சிவில் சமூகத்துடனான பங்குடைமை உருவாக்கம் மற்றும் ஒரே விடயத்தை திரும்ப திரும்ப மேற்கொள்வதை தவிர்த்தல் மற்றும் மீள் உருவாக்கத்தை ஊக்கப்படுத்துதல், பலமான சிவில் சமூகத்துடன் இணைந்து தம்மை தாமே ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான ஒருமைப்பாட்டை அபிவிருத்தி செய்தல்

- சிவில்சமூகம், அரசாங்கம், அரச சார்பற்ற அமைப்புகள் இணைந்து கொள்கையுருவாக்கத்திற்கான வரைபுகளையும் ஒத்துழைப்பு களையும் மேற்கொள்ளுதல்.

- ஜனநாயக முறைமையையும், கட்டமைப்பையும் பரவலாக்கம் செய்தல்.

- பெண்களை திட்டமிடல் மற்றும் பொருளாதார சுட்டிகளின் தயாரிப்புகளுக்குரிய தரவுகளையும் ஆய்வுகளையும் சாத்தியப் படுத்திக் கொள்வதற்கு இணைத்துக்கொள்வதுடன் பெண்களின் சுதந்திரமான வாழ்க்கையைப் பலப்படுத்தல்

- திட்டமிடலிலும் முகாமையிலும் , வரவு செலவுத்திட்ட அறிக்கை யிலும் தீர்மானமெடுத்தலிலும் ஆட்சியில் பங்கேற்பதிலும் ஊக்குவித்தலும் அதன்மீதான அணுகுமுறைகளையும், முறையி யல்களையும் தெரிந்துகொள்ளும் விதத்தில் அறிவூட்டலை ஏற்படுத்தல் வேண்டும்.

- அரசியல் மற்றும் சமூக கலாசார முறைமைகளூடான தொடர்பு களையும் பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் நிலவும் அபிவிருத்தி மட்டத்துடன் பிணைப்புகளை ஏற்படுத்தல்.

- சமூகமட்டத்தில் வறுமை, பாதிப்பான அம்சங்களுடன் தொடர்பும் அனைத்து மக்களுடனான அடிப்படை மனித உரிமைகளுக்கும் ஆதரவளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிகச்சரியான பங்காளிகளையும் பங்குபற்றுபவர்களையும் தேர்ந்தெடுத்தல், எவ்வாறு அவர்கள் அரச , அரச சார்பற்ற , சிவில் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துதல் என்பதை அறிவூட்டல் மூலம் மேற்கொள்ளல்.
- முகாமைத்துவத்திலும் திட்டமிடலிலும் ,குடிகளின் பங்குபற்றலி லும், வரவு செலவுத்திட்ட தயாரிப்பிலும், தீர்மானமெடுத்தலிலும் பங்கேற்றலை ஊக்குவிப்பதிலும், சுரண்டலையும் ஊழலையும் எவ்வாறு தடுக்கலாமெனவும் பொறுப்பாண்மையை ஊக்குவித்த லைப் பற்றியும் பின்பற்றக்கூடிய அணுகுமுறைகளை முதன்மைப்படுத்தல்.
- பலவீனமாகவும், அழிவுறும் நிலையிலுமுள்ள அரசியல் - சமூக - கலாசார முறைமைகளை அபிவிருத்தியடைந்த உலகளாவிய மற்றும் பிராந்திய சக்திகளுடனான தொடர்பாடலினால் பலப்படுத்தல்.

**முடிவுரை**

சமூகத்தினது கடமைகளை முகாமை செய்வதற்கு நிர்வாக , பொருளாதார , அதிகார ரீதியிலும் மற்றும் அரசியலிலும் தெளிவான பயிற்சிமுறைமை நல்லாட்சியென *UNDP* வரையறை செய்கின்றது. அதற்கிணங்க உலகமயமாக்கல் , நவ காலணித்துவத்தின் திணிப்புகள் மத்தியில் பல நாடுகளில் நல்லாட்சி நிலவுவதுடன் அதற்கான முனைப்பான முயற்சியில் அரசாங்கங்களும் சிவில் சமூகங்களும் ஈடுபட்டுவருகின்றன. பிரதிநிதித்துவ ஆட்சி முறைமை உலகில் அதிக நாடுகளில் காணப்படுவதனால் நல்லாட்சிக்கு தெளிவான உந்துதல் கிடைத்துள்ளது. உண்மையான ஜனநாயக ஆட்சிமுறைமை தொடர்ச்சி யாக காணப்படுமாயின் நல்லாட்சி என்ற இலக்கை இலகுவில் எட்டமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிய நூல்கள்


1. *Report of the commission on global governance our global Neighbourhood.httf://www.itcilo.it/english/actrar/telearh/global*
2. *miriam wyman: Thinking about governance: the commonwealth office.htt://www.education.gov.uk*
3. *Tobisa Debiet and ulf terlendar, Governance and Democracy in post conflict situation. Internal support forum Vol. III Nov 04. 2004*
4. *J.K.Chopra : Comparative public Administration, Common wealth, New Delhi 2004*
5. *ரீ.விக்னேஸ்வரன் சிவில் சமூகம், சேமமடு பதிப்பகம், 2011.*



Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No: 320
Acc No 694




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 320
Acc No 694

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

694

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | 320 |
| --- | --- |
| Acc No | 694 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.ரீ.கணேசலிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் விரிவுரையாளராக உள்ளார். இவர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமன்றி, ஆய்வுக் கலாசாரத்திலும் முழுமையான ஈடுபாடு கொண்டவர். இதற்கான தகுதியை ஆளுமையை அறிவை விருத்தியாக்குவதில் தீவிர ஈடுபாடு கொண்டவர்.

இவர் எண்பதுகளுக்குப் பின்னர் உருவான புதிய தலைமுறைக் குழாமைச் சார்ந்தவர். இதனால் சமூகப் பொறுப்பு, அரசியல் நிலைப்பாடு, கருத்துநிலைத் தெளிவு, பன்முகத் தேடல்... போன்ற உயரிய பண்புகளை உள்வாங்கும் திறன் கொண்டவர். இதற்கான மனப்பாங்கு, ஆளுமை விகசிப்பு, ஆய்வு நோக்கு போன்றவை இவரது பலமான அம்சங்களாகும். இவர் தென்னாசிய அரசியல் கலாசாரம், சர்வதேச அரசியல் சில பார்வைகள், மாறிவரும் புதிய உலக ஒழுங்கு, சமகால சர்வதேச அரசியல், சேதுகால்வாய்த் திட்டம், பலஸ்தீனம் முதலான நூல்களையும் ஆக்கித் தந்தவர்.

தமிழில் அரசியல் கலாசாரம் பற்றிய சிந்தனைக்கும் ஆய்வுக்கும் தேடலுக்கும் புதுக்களங்களை அடையாளங் காட்டுவதில் முனைப்புடன் உழைத்து வருபவர்.

சேமமடு பதிப்பகம்

விலை 400.00

PBD
476011540
SAMAKALA ARASIYAL
28 Sep 2018
Rs. 400.00

CBCN: 2013-06-01-124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org